# ஞானச்சுடர்



ஆவணி மலர் 2008



ஓம்

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள்வழி



**கெடுப்பதூஉம் கெட்டார்க்குச்சார்வாய்மற்று ஆங்கே**
**எடுப்பதூஉம் எல்லாம் மழை**

**பொருள்:** தான் பெய்யாது நின்று உலகத்தாரை வறுமை அடையச் செய்யவும், அவர்களுக்கு உதவியாய் நின்று மறுபடியுஞ் செல்வம் உயரும்படி செய்யவும் வல்லது மழையே. (15)

**விசும்பின் துளிவீழின் அல்லால்மற்[று] ஆங்கே**
**பசும்புல் தலைகாண்[பு] அரிது**

**பொருள்:** மேகத்தினின்றும் மழைத்துளி விழாவிட்டால் புல் பூண்டுகளையும் பார்த்தல் அரிது. (16)

# நற்சிந்தனை




## உன்றன் அடைக்கலமே

### அறுசீராசிரிய விருத்தம்

சீரார் மேனி யுடையாய் விடையாய்
திில்லைப் பதிக்கரசே
பாரார் விண்ணோர் பரவும் பரனே
பஞ்சாட் சரப்பொருளே
காரார் குழலாள் உமையின் கணவா
கறைசேர் கண்டத்தாய்
நீரா யுருகி நிற்க வருள்வாய்
நிமலாவுன்றன் அடைக்கலமே

நீறார் மேனி யுடையாய் சடையாய்
நெற்றிக்கண்ணா னின்மலனே
ஆறார் சுவையே அமுதே தேனே
அன்பே யருளாளா
மாறாக் காத லுடைய அடியார்
மனத்தாய் மகாதேவா
தேறாச் சிந்தை தெளியச் செய்வாய்
சிவனேயுன்றன் அடைக்கலமே




வெளியீடு – 2 சுடர் – 128

# 2008 ஆவணி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| வரலாற்றுப்பெருமைமிக்க.... | கண. ஜீவகாருண்யம் பீ.ஏ | 1 - 3 |
| திருவுருவ வழிபாட்டின்...... | இ. சாந்தகுமார் | 4 - 6 |
| சேக்கிழார் பாடும் அரனடியார்... | க. நாகேஸ்வரன் M.A | 7 - 11 |
| வெள்ளிக்கிழமை வழிபாடு | கு. சோமசுந்தரம் | 12 - 13 |
| மனிதப் பிறவியின் மாண்பு | வி. விசாலாட்சி | 14 - 18 |
| கந்தபுராணம் அது நம்..... | தி. மயூரகிரிசர்மா | 19 - 22 |
| சைவக்கிரியைகள் | பொன். சுகந்தன் | 23 - 25 |
| இன்னமும் சின்னவன்தானோ? | திருமதி பா. சிவனேஸ்வரி | 26 - 28 |
| வாழ்க்கையில் வெற்றியை.... | காரை எம்.பி. அருளானந்தன் | 29 - 31 |
| நித்திய அன்னப்பணி | | 32 - 33 |
| மயில்வாகனம் சுவாமிகள்.... | சிவ. ஆறுமுகசாமி J.P | 34 - 36 |
| ஆத்திசூடி | ஔவையார் | - 37 |
| இறப்பை எண்ணி... | திருமதி சி. யோகேஸ்வரி | 38 - 40 |
| சிவமயம் | வாரியார் சுவாமிகள் | 41 - 42 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 43 - 45 |
| காஞ்சி ஏகாம்பேஸ்வரர் | வல்வையூர் அப்பாண்ணா | 46 - 48 |



**அன்பளிப்பு:-**

**மலர் ஒன்று 30/= ரூபா**

**வருடச்சந்தா தபால்செலவுடன் 385/= ரூபா**

**சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை**

**தொலைபேசி இலக்கம்:- 021- 2263406, 060- 2219599**

**FAX: 021- 2263406**

**பதிவு இல. Q.D/60/NEWS/2008**

**அச்சுப்பதிப்பு:- சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.**

# ஞானச்சுடர்
# ஆடிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

ஆடிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையினை யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியையான திருமதி புனிதவதி சண்முகலிங்கம் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது வெளியீட்டுரையில் ஞானச்சுடர் மலர் வெளிவரத்தொடங்கிய காலத்திலிருந்து ஒவ்வொரு ஆண்டிலும் மலரை வெளியிட்டு வைக்க முருகன் அருள்பாலித்து வந்துள்ளான். அத்துடன் இவ்வாண்டிலும் இம்மாத மலரை வெளியிட என்னை அழைத்ததும் ஆற்றங்கரையானின் திருவருளே என மனம்மகிழ்ந்து கூறியதோடு ஆச்சிரமம் எனும்போது நம் எல்லோருடைய மனக்கண்முன்னே வருவது அன்னதானப் பணியே ஆகும். "பசி வந்தால் பத்தும் பறந்துபோகும்" என்பதற்கிணங்க பசிப்பிணியைப் போக்கி இறை சிந்தனையை மக்கள் மத்தியில் பரப்புவதற்காக, ஞானக்கருத்துக்கள் பலவற்றையும் உள்ளடக்கி ஞானச்சுடர் சஞ்சிகையாக வெளிவருவது சந்நிதியான் ஆச்சிரமம் செய்யும் மிகவும் மகத்தான பணி என்றும் விதந்துகூறி மலரை வெளியிட்டு வைத்தார்கள்.

**மதிப்பீட்டுரை:-**

ஞானச்சுடர் 127ஆவது மலருக்கான மதிப்பீட்டுரையை யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளரான திருமதி கௌரி சுரேசன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தம் மதிப்புரையின்போது சந்நிதியான் ஆச்சிரமத்தினது செயற்பாடுகள் உலக மனித விழுமியங்களைக் கட்டிக்காத்து வருவதோடு கடமை உணர்வு, ஒழுக்கங்கள், சைவசமயப் பண்புகள் போன்றவற்றை நன்நெறிப்படுத்துவதாகவும், பாமர மக்களாலும் இலகுவில் வாசித்து நற் கருத்துக்களை விளங்கிக்கொள்ளக்கூடிய எளிய மொழிநடையிலேயே ஞானச்சுடர் மலர் அமைகின்றது என்று கூறினார்.

மேலும் இம்மலரில் திருக்குறள், நற்சிந்தனைகள், சுடரின் தகவல், பொன்மொழிகள், போன்றவற்றுடன் சைவசமயக் கருத்துக்கள் பொதிந்துள்ள பல்வேறு ஆக்கங்களும் மிகத்தரமாகவே அமைந்துள்ளதாகவும் எடுத்துக்கூறி இம்மலரை இப்பிரதேசத்திற்கு மட்டுமல்லாமல் ஏனைய பிரதேசத்திற்கும் அனுப்புகின்ற செயற்பாடானது குறிப்பிட்டு போற்றுதற்குரியது என்றுகூறி மதிப்புரையினை நிறைவுசெய்தார்கள்.

உ

# சுடர் தரும் தகவல்

மனிதராகிய நாம் உடலாலும், வாக்காலும், மனத்தாலும் புரியும் ஒவ்வொரு காரியமும் அவனது மனத்தின்கண் இருந்தே வெளிவருகின்றது. என்றைக்காவது ஒருநாள் எமது மன எண்ணங்களின்படி செயற்பட்டு அதன்மூலம் வரும் இன்ப துன்பங்களை நாம் அனுபவிக்கிறோம்.

உலகில் பிறக்கும் எல்லா மனிதர்களும் அறிந்தோ அறியாமலோ சில பாவங்களை செய்தவர்களாகவே இருக்கிறோம். ஒவ்வொருவரினதும் வேறுபட்ட சூழ்நிலைகளின் காரணமாக எமது மனத்திற்கு விருப்பமற்ற பாவ காரியங்களை தவிர்க்க முடியாமல் செய்கின்றோம். "பாவம் செய்வதால்தான் மனிதன் பிறக்கிறான்" என வேதநூல் கூறுகின்றது.

நாம் ஒவ்வொருவரும் வாலிப வயதில் அறியாமல் செய்யும் பாவங்களின் காரணமாக முதுமைப்பருவத்தில் அப்பாவங்களின் வினை வந்து நம்மை வருத்துகின்றது. இந்துமதம் பாவம் பற்றிய பல்வேறு கருத்துக்களைக் கூறுகின்றன. அதில் நாம் முன்னர் செய்த பாவங்களின் வினைகளை நிச்சயம் அனுபவிக்க வேண்டும். அப்பாவங்களின் வினைகளை அனுபவிக்காமல் விடுபட வழியே இல்லை என்ற கருத்து ஒரு சாரரிடம் அன்றுதொட்டு இருந்தே வருகின்றது. இன்னும் ஒரு சாரரிடம் எல்லாப் பாவவினைகளில் இருந்தும் விடுபட பிராயச்சித்த முறைகள் உண்டு எனவும் அவ் ஒவ்வொரு பாவத்திலிருந்தும் விடுபட தனித்தனியே முறைகள் வகுத்துள்ளது என்றும் கூறுகின்றனர்.

தற்கால மனோதத்துவ ஆராய்ச்சியின்படி பாவங்களை அகற்றும் வழியாக நமது மனத்தில் இருக்கும் பாவம் பற்றிய எண்ணக்கருத்துக்களை மனத்தின்கண் இருந்து முழுமையாக அகற்றி விடவேண்டும். அவ்வகை எண்ணங்கள் எமது மனதில் தோன்றாதிருக்கவும் வழிசமைக்க வேண்டும் என்றும் கூறுகின்றது. இவ்வாறு உலகில் மனிதராகப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் பாவ காரியங்களை செய்யாமல் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வாழ முயற்சிப்போமாக.

---

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
**செ. மோகனதாஸ்**
**சந்நிதியான் ஆச்சிரமம்,**
**தொண்டைமானாறு.**
**T.P.NO. 021- 2263406**
**060 - 2219599**
**FAX.NO. 021- 2263406**

**காசோலை**
**செ. மோகனதாஸ்**
**க. இல. 7342444**
**இலங்கை வங்கி,**
**பருத்தித்துறை.**

**www. sannithiyan. org**

உ

# சந்நிதியானே வா வா வா

சங்கரன் மகனே வா வா வா
சண்முக நாதனே வா வா வா
ஐங்கரன் சோதரா வா வா வா
அரியசந் நிதியானே வா வா வா
எங்களின் குறைதீர்க்க வா வா வா
இந்த நேரமே நீ வா வா வா
செங்கையில் அபயத்தைக் காட்ட வா வா வா
திருவடி வேலனே உடனே வா

அன்பும் அருளும் தா தா தா
அறஞ்செயப் பொருளுந் தா தா தா
இன்பநல் வாழ்க்கையுந் தா தா தா
இன்னல் களைந்திதம் தா தா தா
துன்பம் துடைக்கும் பலம் தா தா தா
தூய்மையாய் வாழும் மனம் தா தா தா
நன்மைகள் செய்யநல் வரம் தா தா தா
நல்தருணம் உன்கை தா தா தா

நாடியுன்னைக் கால்பிடித் தோம் சண்முக நாதா
நற்கடம்பா உனைமற வோம் நாடி வா வா வா
தேடியுன்னைச் சரணடைந் தோம் சிவசுப்பிரமணியா
சின்மயனே என்னையனே சேயே ஓடி வா வா
கூடி நாங்கள் ஆவணியில் கும்பிட நீயெம்
குறைகளெல்லாம் தீர்த்துக் கோடி நன்மையைத் தா தா
பாடிப்பாடி வீதி வந்தோம் நின் பாதம் பணிந்தோம் எங்கள்
பாக்கியமே சந்நிதியாய் பலன் பல தா தா வே.

*முதுபெரும்புலவர்*
*கலாபூஷணம்,*
*ஆசிரியர் வை.க. சிற்றம்பலவனார்.*

# ஆவணிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**Dr. G. பவானி**
(மகப்பேற்று நிபுணர் யாழ்ப்பாணம்)

**உரிமையாளர்**
(மதுரா நகைமாடம்)

**திரு S.S. றஜீந்திரன்**
(நீர்வேலைப்பகுதி மாநகரசபை, யாழ்ப்பாணம்))

**S. சாம்பவி**
(யாழ்ப்பாணம்)

**திரு இ. தயாபரன்**
(கோண்டாவில்)

**திரு ஏ. அனுசாந்தன்**
(ஆசிரியர், குப்பிளான்)

**திரு K. கஜமுகன்**
(நீர்வேலி)

**இ. மாலினி**
(கலாச்சார உத்தியோகத்தர், கோப்பாய்)

**திருமதி கௌரி யோகராஜா**
(லண்டன்)

**திருமதி மகேஸ்வரி செந்திமாணிக்கம்**
(மலேசியா)

**திரு சி. சிவமூர்த்தி**
(ஸ்ரீ சிவாஞ்சனா நகைமாளிகை யாழ்ப்பாணம்)

**Dr திருமதி பத்மராணி குகானந்தன்**
(பல்வைத்திய நிபுணர் அச்சுவேலி)

**திரு S.K. பஞ்சாட்சரம் ஆச்சாரியார்**
(மானிப்பாய் தெற்கு)

**திரு க. ஜெயபாலகணேசன்**
(சிறுப்பிட்டி தெற்கு)

**திரு S. கனகசுந்தரம்**
(சிறுப்பிட்டி தெற்கு)
**திரு பூ. நித்தியானந்தம்**
(சிறுப்பிட்டி தெற்கு)
**திரு ந. முத்துக்குமாரசாமி**
(சிறுப்பிட்டி தெற்கு)
**திரு அருளையா சுப்பிரமணியம்**
(நீர்வேலி மேற்கு)
**திரு A. நாகரத்தினம்**
(கஜானன் அரைக்கும் ஆலை, நீர்வேலி)
**திரு சி. குமாரசாமி J.P**
(ஆசிரியர் பத்தமேனி அச்சுவேலி)
**திரு வே. இராஜேந்திரன்**
(பொது சுகாதார பரிசோதகர், ஆவரங்கால்)
**திரு சீ.சி. கந்தையா**
(ஆவரங்கால்)
**அதிபர்**
(உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)
**திரு தி. கருணாகரன் (கரன் எலக்ரோனிக்)**
(கரணவாய் தெற்கு)
**திரு ச. ஹரிகரன்**
(கரணவாய் தெற்கு கரவெட்டி)
**திரு பொ. குமாரசாமி**
(சட்டத்தரணி, நவிண்டில்)
**திரு வை.ச. பரஞ்சோதி**
(சோதி ஸ்ரோர்ஸ் கோண்டாவில்)
**உரிமையாளர்**
(அருளானந்தா புடவை மாளிகை, சங்கானை)
**திருமதி கௌரி சுரேசன்**
(விரிவுரையாளர் ஆவரங்கால்)
**திரு சி. சுப்பிரமணியம்**
(சமரபாகு உடுப்பிட்டி)

# வரலாற்றுப் பெருமைமிக்க நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயம்

திரு கண. ஜீவகாருண்யம் பீ.ஏ அவர்கள்

கத்தும் தரங்கம் எடுத்தெறியும் அலைகடலின் நடுவே இலங்கைத்தீவின் வடபகுதியில் அமைந்த சப்த தீவுகளில் ஒன்றான நயினாதீவில் அமர்ந்து அருள் பாலிப்பவள் அன்னை நாகபூஷணி அம்பாள். அம்பிகையின் வரலாறு மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிக காலத்திற்கும் முற்பட்டகால நாக வழிபாட்டுக்குரியது என்று வரலாற்று அறிஞர்கள் கூறியுள்ளனர். தமிழர்களின் முன்னோடிகளான நாகர்கள் வாழ்ந்த காலத்துக்குரிய கோயில் ஆகையால் இங்கு எழுந்தருளியுள்ள அம்பிகைக்கு நாகபூஷணி அம்பாள் என்ற பெயர் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது. தென்னிந்தியப் புதைபொருள் ஆராய்ச்சி வல்லுநர் திரு எம். நரசிம்மன் அவர்கள் இக்கோயிலின் மூலஸ்தானத்தைப் பார்வையிட்ட பின்னர் "நயினாதீவில் மூலஸ்தான அம்மன்போல் இருப்பது நாகப்பிரதிஷ்டையே. இது மிகவும் தேய்ந்து அம்மன் உருவம்போல் தெரிகிறது. இதற்குப்பின்னால் ஐந்து தலை நாகம் பிரதிஷ்டை ஒன்றுண்டு. இந்தியாவில்கூட நாக வழிபாட்டுக்குப் பிரத்தியேகமாகவுள்ள இப்படியான புராதனக் கோயிலைக் காண்பதரிது. கலப்பற்ற தூய்மையான நாக வழிபாட்டின் பண்பினை நயினாதீவில் காணலாம். சரித்திர காலத்திற்கும் எட்டாத காலம் தொடக்கம் உள்ள கோயில் இது" என்று கூறியுள்ளார்.

காசியில் விசாலாட்சியாகவும், காஞ்சியில் காமாட்சியாகவும் மதுரையில் மீனாட்சியாகவும், நாகபட்டிணத்தில் நீலாய தாட்சன்னையாகவும், காஷ்மீரத்தில் அம்பாளாகவும், குஜராத்தில் கல்யாணியாகவும், வங்காளத்தில் காளியாகவும், மைசூரில் சாமுண்டியாகவும், மலையாளத்தில் பகவதி அம்மனாகவும், சிதம்பரத்தில் தில்லைக் காளியாகவும், மாத்தளையில் முத்துமாரி அம்மனாகவும், உடப்பில் திரௌபதி அம்மனாகவும், தெல்லிப்பளையில் துர்க்கை அம்மனாகவும் விளங்குகின்ற அம்பிகை நயினாதீவில் நாகபூஷணி அம்பாளாக அமர்ந்து காட்சி தருகின்றாள். அறுபத்து நான்கு சக்திபீடங்களில் ஒன்றான புவனேஸ்வரி பீடம் நயினாதீவில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

முன்னொரு காலத்தில் மாசாத்துவான் என்ற வாணிபன் வாசனைத் திரவியங்களைக் கப்பலில் ஏற்றிக்கொண்டு நயினாதீவிற்கும் புளியந்தீவிற்கும் இடையேயுள்ள கடல் மார்க்கமாக வந்து கொண்டு இருக்கும்பொழுது புளியந்தீவில் உள்ள சிவ ஆலயத்தில் இருந்து நாகம் ஒன்று கடல் மார்க்கமாக ஒரு மலரை வாயில் கௌவிக்கொண்டு நீந்தி வருவதைக் கண்டான். அதேவேளை கருடன் ஒன்று நாகத்தைக் கொல்வதற்காக வட்டமிட்டுப் பறந்தது. அதனால் பீதியுற்ற நாகம் கடல் நடுவேயுள்ள

பாறை ஒன்றினைச் சுற்றிக் கொண்டு அடைக்கலப் பாவனையில் தலையை உயர்த்தி நின்றது. கருடனும் எதிரேயுள்ள பாறை ஒன்றில் அமர்ந்து கொண்டது. நாகத்தைக் காப்பாற்ற விரும்பிய வணிகன் நயினாதீவிலுள்ள நாகராஜேஸ்வரிக்கு முறையிடும் பாங்கில் பிரார்த்தனை செய்தான். அதன் காரணமாகக் கருடன் விலகிச் சென்றது. நாகமும் அர்ச்சனைக்கான மலருடன் நயினாதீவிற்கு நீந்திச் சென்று அம்பிகைக்குச் சாத்தி பூசித்தது. பன்னெடுங்காலத்திற்கு முன்னர் நடைபெற்ற இச்சம்பவத்தை நயினாதீவிற்கு யாத்திரை செய்யும் பக்தர்கள் நயினாதீவுக் கடற்பரப்பில் பாம்பு சுற்றிய பாறையையும் கருடன் இருந்த பாறையையும் இன்றும் காணலாம். மேற்கூறிய வணிகன் நயினை அம்பாள் ஆலயத்தைப் புனரமைத்துக்கட்டி தென்னிந்தியாவிலிருந்து "நயினா பட்டர்" என்ற அந்தணப் பெருமகனை அழைத்து வந்து கோயில் பூசைகள் சிறப்பாக நடைபெற உதவினான். "நயினா பட்டர்" பூசை செய்ததால் இந்தத் தீவிற்கு நயினாதீவு என்ற பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லப்படுகின்றது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் சிறப்பாக அமைந்த இடம் நயினை அம்பாள் திருத்தலம். இதன் தலவிருட்சம் வன்னிமரமாக இருந்த போதிலும் கோயிலைச்சுற்றி வேப்பமரச் சோலைகள் காணப்படுகின்றன. நாக தோஷத்தால் பீடிக்கப்பட்டவர்களும், பிள்ளைவரம் வேண்டி வழிபடுபவர்களும், தீராத நோய்களால் அல்லற்படுபவர்களும் நயினை அம்பாளைத் தரிசித்துச் சுகம் பெற்றுள்ளனர். அம்பிகையை வேண்டிப் பிள்ளை வரம் பெற்றோர் தங்கள் குழந்தைகளைக் கொண்டுவந்து நேர்த்திக்கடன் நிறைவேற்றுகின்றனர். திருவிழா நிறைவுற்றதும் நேர்த்திக்கடன் செய்துவிட்டுச் செல்லும் அடியார்கள் அம்பிகையின் ஞாபகார்த்தமாக வேப்பமரக்கிளைகளை இலைகளுடன் ஒடித்து தங்கள் வீடுகளுக்குக் கொண்டுசென்று தங்கள் இஷ்ட தெய்வங்களுக்குச் சாத்தியும், நாகபயம் நீங்குவதற்கு வீடுகளிலும் பக்குவமாக வைக்கின்றார்கள்.

நயினை அம்பாள் வீதியுலா வரும் தேரில் கோயில் வரலாறுகள் சிறப்பாகத் தீட்டப்பட்டுள்ளன. தேர்த்திருவிழாவன்று அம்பிகை தேரில் பூட்டப்பட்ட மணிகள் ஒலிக்க வீதியில் பவனிவரும் காட்சி பார்ப்பவரைப் பரவசமூட்டவைப்பதோடல்லாமல் மெய் சிலிர்க்கவும் செய்கிறது. முன்னர் அம்பிகைக்காக அமைக்கப்பட்ட பவளத்தேரும் செப்புத்தேரும் போர்த்துக்கேயராலும், ஒல்லாந்தராலும் இடித்து அழிக்கப்பட்டுக் கடலில் வீசப்பட்டன. இதன் வரலாறு இப்போதைய தேரில் செதுக்கப்பட்டுள்ளன. நயினாதீவுச் சாமியார் என்று அழைக்கப்படுகின்ற முத்துக்குமாரசாமியின் கனவில் அம்பிகை தோன்றி மேற்குக் கரையில் குறிப்பிட்ட இடத்தில் தீர்த்தக்கேணி அமைக்குமாறு கூறியருளினாள். அதன்படி வைரக்கல்லால் முத்துக்குமாரசாமி பக்தர்களின் அனுசரணையுடன் தீர்த்தக் கேணியை அமைத்தார். இந்தத் தீர்த்தக் கேணி இராமேஸ்வரத்திற்கு நேராக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. தீர்த்தோற்சவத்தன்று குடும்ப சமேதரராக அம்பாள் மேற்குக் கரையை நோக்கிப் பக்தர்கள் புடைசூழ பவனிவந்து நயினா

தீவில் அமைந்துள்ள கோயில்களுக்கெல்லாம் சென்று தரிசனம் தருகின்றாள். இறுதித் திருவிழாவான தெப்போற்சவத் திருவிழா அன்று அம்பிகை மின்சாரத் தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட படகில் கோயிலுக்கு முன்னாலுள்ள கடலில் சுற்றி வருங்காட்சி இலங்கையில் எங்குமே காணமுடியாத அருட்காட்சியாகும்.

சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாதவி மகள் மணிமேகலையுடன் தொடர்புடையது நயினாதீவு. அத்துடன் மணிமேகலா தெய்வம் விட்டுச் சென்ற "அமுதசுரபி" என்ற அள்ள அள்ளக் குறையாத உணவை வழங்கும் அட்சய பாத்திரம் இங்குதான் கைவிடப்பட்டது. இதனால் இங்குள்ள அன்னதான மடத்திற்கு "அமுதசுரபி" என்ற நாமம் சூட்டப்பட்டுள்ளது. திருவிழா, உற்சவ நாட்களிலும் .முக்கிய தினங்களிலும் இங்கு அம்பிகையைத் தரிசிக்கவரும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகின்றது. மற்றைய நாட்களில் கோயில் பரிபாலன சபையால் பக்கத்தில் அமைந்துள்ள கல்யாண மண்டபத்தில் அன்னதானம் நாள்தோறும் வழங்கப்படுகின்றது. ஆக, வருடம் முழுவதும் அம்பிகை அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

பெற்றதால[illegible] பேணலாலன்னை பெற்றிடுவோர்
உற்றதாலன்னை விரும்பிய வணைத்து முதவலாலன்னை எக்கலையுஞ்
சொற்றதாலன்னை யுலகோடு வானுந் தொழுதலாலன்னை யென்றென்றும்
பற்றதாங்கருணை பொழிதலாலன்னை பராபரை நாக பூஷணியால்

வரகவி வி.க. நாகமணிப்புலவர்.

## எங்கே இருக்கிறார் கடவுள்?

கடவுள் இருக்கிறாரா? இருக்கிறார் என்றால், அந்தக் கடவுள் எங்கே இருக்கிறார்? என்று சிலர் கேட்கிறார்கள். "முதலில் வந்தது முட்டையா? கோழியா? அல்லது முதலில் வந்தது தேங்காயா? தென்னைமரமா?" என்று அவர்களிடம் கேட்க வேண்டும். இதற்கு யார் பதில் கூறமுடியும்?

தேங்காய்க்கும் தென்னைமரத்துக்கும் அப்பால் ஒரு ஆதி சக்தி இருக்கிறது. அதுதான் கடவுள். அது சொற்களால் விளக்கமுடியாத ஒரு சக்தி. அனைத்துக்கும் ஆதி காரணமான அதுவே கடவுள். கடவுள் இல்லை என்பது பேச்சுக்கு ஆதாரமான நாவைக்கொண்டே "எனக்கு நாக்குக் கிடையாது" என்று சொல்வது போன்றதாகும். விதையில் மரமும், பாலில் வெண்ணெயும் இருப்பதுபோல், கடவுள் எல்லாவற்றிலும் நிறைந்துள்ளார்.

**ஏமாற்ற நினைப்பவனைக் கடவுள் முன்பே ஏமாறச் செய்துவிடுவார்.**

உ

# திருவுருவ வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்

திரு இ. சாந்தகுமார் அவர்கள்

திருவுருவம் என்பது தெய்வத் தன்மை பொருந்திய அழகிய வடிவம் என்பதாகும். இங்கு இச்சொல் இறைவனது அருள் உருவங்களைக் குறித்து நிற்கின்றது. மனிதனின் உணர்வலைகளை ஆன்மீகத்தின்பால் ஈடுபாடு கொள்ளச் செய்யும் முயற்சியின் ஒரு படியாக அமைவதே வழிபாடாகும். மனம், வாக்கு முதலானவற்றுக்கு எட்டாதவரும் எல்லைப் படுத்த முடியாதவரும் குணம், குறி அற்றவருமாகிய இறைவனை எல்லைப்படுத்திக் குணங்குறிகளுக்கு உட்படுத்திக் கட்புலனுக்குத் தெரியும்படி அமைக்கப்படுவதே திருவுருவம் ஆகும். இத்திருவுருவங்கள் மூலம் இறைவனை அடைவதற்கு முயற்சிப்பதே திருவுருவ வழிபாடாகும். இறைவன் பல்வகைத் திருவுருவங்களுக்கு ஊடாக ஆன்மாக்களுக்கு அருள்பாலிக்கின்றான்.

திருவுருவங்கள் உள்ளதை உள்ளவாறு வடிக்காது உள்ளதை உணர்ந்தவாறு இரசானுபவம் தோன்றுமாறு காலத்தின் மிக்க கலைப்படைப்புக்களாகப் படைக்கப்பட்டு வளர்க்கப்படல் வேண்டும். கோயிலில் உள்ள திருவுருவங்கள் விக்கிரகம், பிரதிமை ஆகிய சொற்களாலும் குறிப்பிடப்படுகின்றன. விக்கிரகம் என்ற சொல்லின் பொருள் இறைவனது திருவருள் சிறப்பாக விளங்கித் தோன்றுகின்ற உயர்ந்த இடம் என்பதாகும். திருவுருவ வழிபாட்டால் தங்கள் எண்ணத்தை நிறைவு செய்து, இறை உண்மையை உணர்ந்து முத்தி பெற்றோர் பலராவர். இவர்களுள்ளே குறிப்பாகக் கண்ணப்பர், சண்டேஸ்வரர், திருநாளைப் போவார், சேரமான் பெருமாள், பூசலார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுடைய செயல்கள் மூலமாகவும் இவர்கள் நின்ற நெறிகள் மூலமாகவும் இறைவனை இவர்கள் பற்றிக்கொண்ட முறைமையினைக் கொண்டும் இந்துப் பண்பாட்டு மரபில் திருவுருவ வழிபாட்டின் இடத்தினை மதிப்பிடலாம்.

திருவுருவ வழிபாடு பற்றி அறிந்து கொள்வதற்கு எமக்குக் கல்வெட்டுக்கள், நாணயங்கள், செப்பேடுகள், உருவச் சிலைகள், முத்திரைகள், மட்பாண்டப் பொருட்கள், இலக்கியங்கள் என்பன சான்று பகர்கின்றன. இவற்றினைக் கொண்டு காலந்தோறும் எழுச்சிபெற்ற திருவுருவ வழிபாட்டின் ஆரம்ப நிலையினையும் அதனை உருவாக்கும் சிற்பியின் ஒழுக்கமும் நிறுவுவது தொடர்பான பூரண விளக்கத்தினைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் இலக்கியங்களான, அதாவது, சிற்ப நூல்களாக விளங்குவது மயமதம். விஸ்வகர்மீயம், மானசாரம், ஐந்திர மதம், மனுசாரம், காஸ்யமம், சாரஸ்வதீபம், பிராம்மீயம், சகளாதிகாரம் என்பனவும் "ரூபத்யான வஷணம்" என்பது சிற்ப இலக்கணங்களுக்கு ஏற்ப இயற்றப்பட்ட சிற்ப வடிவங்களின் அமைதியாகும். முதல்நூல் இலக்

கணம் என்றால் இரண்டாவது நூல் அதன் இலக்கியமாகும். எண்ணற்ற வழிபடு படிமங்களின் உருவ வர்ணனைகளுக்கு ஏற்பப் பண்டைச் சிற்பக் கலைஞர்களாலும் ஞானியர்களாலும் இயற்றப்பட்ட திருவுருவ விளக்கங்களின் தொகுப்பு நூல் இது வாகும். பண்டைய சிற்ப வடிவங்களில் குறிப்பாகத் தெய்வீகப் படிமங்களில் சுமார் நூற்றிருபது ஆயுதங்களும் கருவிகளும் பிற பொருட்களும் இடம்பெற்றுள்ளதை நாம் காண்கின்றோம்.

படிமங்கள் மூன்று வகைப்படும்.

**1. அசலம்:-**

படிமங்கள் செய்த இடத்தில், அமைக்கப்பட்ட இடத்திலிருந்து அசைக்க முடியாதவை. இவை பாறைகளில் செதுக்கப்பட்டவை. மண்ணாலும், சுதையாலும், சுக்கானாலும் அமைக்கப்பட்டவையாகும்.

**2. சலம்:-**

ஓரிடத்திலிருந்து வேறோர் இடத்திற்கு நகர்த்தக்கூடியதாக இருக்கும். அதற்காக உருவாக்கப்பட்டதாக இருக்கும், அதாவது கருங்கல், மரம், தாதுப்பொருட்கள், இரத்தினங்கள், உலோகங்கள் ஆகிய பொருட்களாற் செய்யப்படும் படிமங்கள் ஆகும்.

**3. சலாசலம்:-**

படிமங்கள் இடம்விட்டு இடம் மாற்றக்கூடியதும் ஆனால் மாற்றக்கூடாது என்ற நோக்கத்தில் நிறுவப்பெற்ற படிமங்கள் சலாசலம் என்று கூறப்படும். உதாரணம் கருங்கல், மரம் ஆகியவற்றாற் செய்யப்பட்டு ஓரிடத்தில் நிலையாகப் பொருத்தி வைக்கப்பட்ட படிமம். தெய்வத் திருவுருவங்கள் சாத்வீகம், இராஜதம், தாமஸம் என்று மூன்று வகைப்படும்.

***சாத்வீகப் படிமம்:-***

எத்திருவுருவம் யோக முத்திரையையும் இயற்கையான சாந்த நிலையையும் அன்பர்க்கு அச்சத்தை அகற்றி வேண்டுவனவற்றை அளிக்கும் கரங்களைக் கொண்டதாய் விளங்குகின்றதோ அதுவே சாத்வீகத் திருவுருவம் எனப்படும். தட்சணாமூர்த்தி வடிவம் இதற்கு உதாரணம் ஆகும்.

***இராஜஸப் படிமம்:-***

எத்திருவுருவம் நின்ற கோலத்திலாதல் ஊர்தியில் ஏறி இருக்கும் நிலையிலாதல் பல்வகை அணிகலங்களால் அலங்கரிக்கப்பட்டு அம்பு, வாள் முதலிய படைக்கலங்களைத் தாங்கி அச்சம் அகற்றி (அபயம்) வேண்டுவனவற்றை அருளும் கைகளை உடையதாய் விளங்குகின்றதோ அதுவே இராஜஸத் திருவுருவம் என்று கூறப்படும். ஆறுமுகப் பெருமானின் திருக்கோலம் இராஜஸக் கோலம் ஆகும்.

***தாமஸப் படிமம்:-***

எத்திருவுருவம் அம்பு, வாள் முதலிய படைக்கலங்களால் கொடியவர்களைக் கொல்வதாகவும் எப்பொழுதும் அச்சுறுத்தும் தோற்றத்தையுடைய தாகவும் விளங்குகின்றதோ அதுவே தாமஸத் திருவுருவம் என்று கூறப்படும், மகிஷாசுர மர்த்தனி இதற்கு நல்லதோர் எடுத்துக் காட்டு.

***தான் நேசிப்பதைக் கொடுக்காதவன் தான் விரும்புவதையும் அடையமாட்டான்.***

திருவுருவத்தினை உருவாக்கும் சிற்பி எவ்வாறு இருக்கவேண்டும் அவனுக்குரிய இலக்கணம் எவை என்பது பற்றி ஆராய்தல் அவசியமானதொன்றாக இருக்கின்றது. ஏனெனின் திருவுருவ உருவாக்கத்தின் மூலமும் மத்திய பகுதியும் முடிவுப் பகுதியும் சிற்பியின் கையிலேயே உள்ளன. சிற்பியின் ஒழுகலாறு பற்றிச் "சிற்பச் செந்நூல்கள்" மிகவும் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றன. கலைஞர்கள் ஒழுக்க சீலராக இருக்கவேண்டும் என்பது இன்றியமையாதது. எனவே, இதனைப் பெரிதாகக் கருதிச் சிற்பக்கலை நூல்கள் கலைஞன் என்பான் துறவுவாழ்வு மிக்கவனாகவும் கவலை இல்லாதவனாகவும் எப்பொழுதும் மகிழ்ச்சி நிரம்பிய உள்ளம் உடையவனாகவும், பேராசையற்றவனாகவும், ஐம்புலன்களை வென்றவனாகவும், உண்மை பேசுபவனாகவும், பொறுப்புணர்ச்சி மிகுந்தவனாகவும் நல்ல பரம்பரையில் தோன்றியவனாகவும், நோயற்றவனாகவும் கூடுதல் குறைவில்லாத உடல் உறுப்புக்களைப்பெற்று நல்ல பெயருடையவனாகவும் இருத்தல் வேண்டும் என்று கூறுகிறது.

"உடலை வளர்ப்பது உணவு, அறிவை வளர்ப்பன நூல்கள், ஆன்மாவை வளர்ப்பது ஒழுக்கம். எனவே ஒழுக்க சீலனாகக் கலைஞன் இருத்தல் இன்றியமையாததாம். ஒழுக்க சீலனின் படைப்புக்களில் தெய்வீக அழகு மிளிரும்" என்பது அறிஞர்களின் ஆணித்தரமான கருத்தாகும். சிற்பக்கலையின் ஊடாகவே தெய்வீக உணர்வு வெளிப்படுத்தப்படுகின்றது. சிற்பி வடித்த இறைவனது திருவுருவங்களைத் திருக்கோயில்களில் தெய்வீகப்பொலிவுபெற்று விளங்கச் செய்பவன் சிவாச்சாரியர். மந்திரம், கிரியை, பாவனை ஆகிய அம்சங்களால் சிற்பியின் கலைப்படைப்புக்கள் தெய்வீகப் பொலிவு பெற்று வழிபாட்டுக்குரியவையாகின்றன. இந்தவகையில் சிற்பக்கலைஞனும் சிவாச்சாரியனும் ஆகமம் வகுத்துக்கூறும் நெறி நின்று சமயப்பணி புரிவதில் முக்கியத்துவம் பெறுகின்றனர். இதனால் சமயமும் வழிபாடும் இரண்டறக் கலக்கப்பெறுகின்றன. தொழில்நுட்பத்திறனோடு கூடிய சிற்பக்கலையிலே தேர்ச்சி பெற்ற கலைஞனே "சிற்பி" எனப்படுவான். எல்லாவற்றுக்கும் மேலானவனே "ஸ்தபதி" என ஆகம மரபு குறிக்கும். ஆகமத்திற் கூறப்பட்ட விடயத்தினைத் தெளிவுபடக் கூறுபவையே சிற்ப நூல்கள் ஆகும்.

விக்கிரக வழிபாட்டைத் தெளிவாக விளங்கிக் கொள்வதற்கு விக்கிரகம் என்ற சொல்லின் உட்பொருளும் அதனுடன் தொடர்புடைய வழிபாடு பற்றிய நுட்பமும் ஆராயப்பட வேண்டியது அவசியம். விக்கிரகம் என்ற சொல்லுக்குரிய ஏனைய பதங்கள் அர்ச்சா, பேர என்பனவாகும். இவற்றுடன் விம்பம், மூர்த்தி, பிரதிமை போன்ற சொற்களும் உருவத்தைக் குறிப்பன. பக்தர்களின் வழிபாட்டிற்குரிய தெய்வச் சின்னங்களையே இப் பதங்கள் சுட்டிநிற்பன விக்கிரகங்கள் தெய்வத்தின் தோற்றப் பொலிவினை மனித உருவேற்றிய பண்பினடிப்படையில் சித்திரிப்பர். ஒரு குறிப்பிட்ட சமய மரபில் முழுமுதற் தெய்வம் பற்றிய தெய்வ வரலாற்றியற் கருத்துக்களுக்கு விளக்கம் தரும் நிலையிலேயே விக்கிரகம் விளங்குவது. இறைவன் நிகழ்த்தும் ஐந்தொழில்களைப் புராணங்கள் விளக்கிக் கூறுவன செவிப்புலனாகும். இப்புராண வரலாற்றுக் கருத்துக்களைக் கட்புலனாக்கும் வெற்றிவாய்ந்தவை சிற்பங்கள். (தொடரும்.....

உ

# சேக்கிழார் பாடும் அரனடியார் தனிப்பெருமை

திருமுறைக் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் M.A அவர்கள்

பண்: அந்தாளிக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

"அன்புறு சிந்தையராகி அடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமணம் மேவிநின்று
இன்புறும் எந்தை இணையடி ஏத்துவார்
துன்புறுவாரல்லர் தொண்டு செய்வாரே"

திருச்சிற்றம்பலம் சம்பந்தர் தேவாரம்.

உலகிலேயே "உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்" எனத் தொடங்கும் இலக்கியம் திருத்தொண்டர் புராணம் எனப்படும் பெரியபுராணமாகும். புராணங்களனைத்தும் புனைவுகளெனச் சிலர் மலைவர். ஆயினும் புராணக் கதைகளும் புனைவுகளுமே சோழப் பெருமன்னர் காலத்து இலக்கிய மேன்மைக்குச் சான்றாதாரங்களாகின்றன. மிக விசாலமானதோர் இலக்கியப் பாரம்பரியம் நிலவிய சோழப் பெருமன்னராட்சியிலே சேக்கிழாரால் பெரிதும் இலாவகமாகவும், தத்துவமாகவும், நடைமுறை வாழ்வியல் நிகழ்வுகளாகவும் புனைந்தியற்றப்பெற்றது பெரிய புராணம். 'அரனடியார்' என்பது இங்கு சிவனடியாரையே குறிக்கும். சிவன் உறையும் இடமே சிவனடியார்.

சிவனடியாரைத் 'தொண்டர்கள்' எனவும், 'சிவதொண்டர்' எனவும், 'அன்புறு சிந்தையரெனவும், 'ஈரநெஞ்சினர்' எனவும், "கூடும் அன்பினிற் கும்பிடுவோர்" எனவும் குறிப்பிடுவது திருமுறை வழக்காறு. அரனிடத்து அன்பு செய்தலென்பது ஊழ் வினையினாலே கிடைப்பது. "ஊழ் பெறலரிது" என்று சைவ சித்தாந்த தத்துவம் விரிவுபட விபரிக்கும். சிவனருளைப் பெறவும், சிவனது அனுக்கிரகத்தைப் பெறவும், துடியாய்த் துடித்தவர்களே பெரியபுராணத்துத் தொண்டர்கள். அரனடியாராதலென்பது தகைமைகளிளெல்லாம் பெருந்தகைமையுடையது. எப்பொழுதுமே பரம்பொருளாகிய சிவனது நினைப்புடனும், சிவபுண்ணியத்தின் செயல் வேகத்துடனும் திளைக்கும் அன்பர்களையே பெரியபுராணம் அரனடியார்கள் எனக் குறிப்பிடுகின்றது.

திருமுறைகளின் கொடுமுடி பெரியபுராணம். காவியநாயகன் சுந்தரமூர்த்தி நாயனார். சம்பந்தர் புராணம் மிக விரிவாகவே எடுத்தாளப்பட்டுள்ளது. முதல் நூல், வழிநூல், சார்புநூல் எனும் முறைமையில் எழுந்தது பெரியபுராணம், திருத்தொண்டத்தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி, திருத்தொண்டர் புராணம் எனும் முறைமையினால் இயல்வது பெரியபுராணம். சுந்தரர் அருளிய திருத்

தொண்டத்தொகை சமய அடியார்களின்-சைவத்திலே உறைப்பான பக்தி பூண்ட-மெய்யடியார்களின் பெயர்களை நிரற்படுத்தி அவர்கட்கெல்லாம் 'அடியேன்' 'அடியேன்' என்று பாடும் பண்புடன் அமைவது. தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கு மடியேன் என்று வருவது. ஆனால் பெரியபுராணம் அடியார் பற்றி விரிவாக விளக்கிப்பாடுவது.

இலக்கியநோக்கு, சமுதாய நோக்கு, சமயநோக்கு, வாழ்வியல் நோக்கு, தொண்டுநோக்கு, அனுபவநோக்கு, என்று பல்வேறு ஆய்வுக் கோணங்களிலும் பெரிய புராணத்தின் பொருளடக்கத்தினை ஆய்வு செய்து பல்வேறு கருத்துக்களையும் முன் வைக்கமுடியும். எனினும் எல்லா நோக்கு நிலைகளையும்விட மானுடநோக்கு நிலையில் குறிப்பாகத் தெய்வீக அமானுஷ்ய நோக்கில் "அன்பு நெஞ்சம் கொண்ட இயல்பினர் அரனடியார்" என்னும் முடிந்த முடிபே பெரியபுராணத்து அடியார்களுக்கு முற்றிலும் பொருந்துவதாகும்.

இலக்கிய நோக்கிலே பெரிய புராணத்தை ஒருவகையிலே காப்பியு மென்று சுட்டலாம். காவியநாயகன் சுந்தரர். கதை கூறும் மரபில் பிறப்பு, வளர்ப்பு, வாழ்வு நிறைவு (முத்தி) என்று பாடும் மரபு பெரியபுராணத்திலுண்டு. இலக்கிய ஆய்வாளர்கள் "பெரியபுராணத்தைப் பேரின்பக்காப்பியம்" என்று ஒப்பீடு செய்து நிறுவுவர். சீவகசிந்தாமணி பாடிய திருத் தக்கதேவர் அந்த நூலைச் சிற்றின்பக் காவியம் என்று கருதும்படி "இலம்பகம்" என அமைத்துச் சீவகனின் காதல் வாழ் வைச் சித்திரிக்க, குன்றத்தூர்ச் சேக்கிழார்-தெய்வமாக்கவி- "காதல் வாழ்வு" எனும் சிற்றின்ப உலகியல் வாழ்வையும் பாடி அதினின்றும் மேலான அருளியல் அனு பவ வாழ்வைச் சுந்தரரது வாழ்வியற் செல் நெறியாகப் பாடி வெற்றிபெற்று நிலைக் கிறார். ஆயின், பெரியபுராணமானது சிற்றின்பத்தையும் பேரின்பத்தையும் பாடிய செஞ்சொற் காப்பியம் எனலாம். இன்னும் சற்றுக்கூர்மைபட நோக்கின் சுந்தரரது வாழ்விலே பெண்பாலார் இருவர் (அநிந்திதை, கமலினி) காதலிகளாகப் படைக்கப்பட்டுள்ளனர். காதல் நெறியின் 'அன்பு' நெறியின் ஆழமான மெய்ப்பாடு களைச் சேக்கிழார் பெருமான் விண்டு காட்டுகின்றார்.

பெரியபுராணம் தேசீய இலக்கிய மாகும். பல்வேறு பண்பினர், பல்வேறு குலத்தினர், பல்வேறு தொழிலினர், பல் வேறு வகையினர் எனினும் அரனிடத்து அன்புபூண்டவர்கள். மானுட மேன்மை சமுதாயத்தின் அனைத்து மக்களிடத்தும் வேண்டற்பாலது என்னும் பெருநெறியுடன் பாடியுள்ள காப்பியம் பெரியபுராணம். "பெரியபுராணம் தேசீய இலக்கியம்" என்று ஆய்வுசெய்து நிறுவியுள்ளார் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன். மிக ஆழமான நுண்ணாய்வாளரான பேராசிரியர் அ.ச. ஞான சம்பந்தன் பெரியபுராண அடியார்களது "அடிச்சுவடு"களை மிக நேர்த்தியாகவும் வெகு சிறப்பாகவும் மிக விசாலமாகவும் எழுதியுள்ளார். 'சிவக்கவிமணி' C.K. சுப்பிர மணிய முதலியார் பெரியபுராணத்துக்கு மிக அருமையான விளக்கம் எழுதியுள்ளார்.

நல்லைநகர் ஆறுமுக நாவலர் பெருமான் பெரியபுராண சூசனம் என்று எழுதியவை உலகப் பாராட்டுப்பெறுவது. கண்ணப்பநாயனார் புராணத்துக்கு நாவலர் பெருமானால் எழுதப்பட்ட 'சூசனம்' பேரறி ஞர்களாலும் சைவசமய ஈடுபாட்டாளர் களாலும் சிலாகித்துப் பேசப்படுவது.

இச்சிறிய கட்டுரையிலே அரிய

**கடவுளின் சட்டம் ஒருவருக்கும் தீங்கு செய்யாது.**

விளக்கங்களும் கதைகளும் பாடல்களும் எடுத்துக் காட்டுக்களாக இடம்பெறுதற்கு இயலாது. எனினும் 'பெரியபுராணம்' என்றால் இதுதான் என்று எவருமே இலகுவிலே அறிந்து தெளிவு பெறுவதற்கு இக்கட்டுரையில் விடயங்கள் உள்ளன என்பதனை மட்டும் அழுத்தியுரைத்தல் அவசியம்.

பல்லவராட்சியில் நிலவிய பக்தி மரபின் தொகுப்பே பெரியபுராணம் என்று கூறுவோருமுளர். திருமுறைகளின் தொகுப்பிலே பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையென விளங்குவதாலும், திருமுறையாளரான மூவர் முதலிகளாலும் எடுத்தோதப்பட்டவர்களென அரனடியார் களமைவதாலும் முன்னைய பழைமையையும் சிவனடியார் பெருமையையும் விளக்கும் திருமுறையாகவே பெரிய புராணம் முகிழ்க்கிறது.

"சமயநோக்கு" என்பது 'சைவ வாழ்வு' ஆகும். சிவனடியையே எப்போதும் சிந்தித்து வாழும் அரனடியார்கள் ஆண்களாயும் பெண்களாயும் இருந்துள்ளனர். குடும்பத்தவராயும் வாழ்ந்துள்ளனர் என்பது சைவநோக்கிலே மிகமுக்கியமான பண்பாகும். அவ்வாறாயின் பெரியபுராணம் பெண்ணை நிராகரிக்கவுமில்லை; பெண்ணோடு கூடிய இன்ப வாழ்வை வெறுக்கவுமில்லை. காரைக்கால் அம்மையாரின் வரலாற்றைக் கூறும் இப் பெரியபுராணம் சிவனை- அரனை- எப்போதும் வணங்கி- அருச்சித்து- ஆனந்திக்கும்- பான்மையையே மிக நுட்பமாகக் கூறும். அம்மையாரது உணர்வுநலன் ஒரு பாடலிலே மேலோங்கி நிற்கின்றது. அரனடியாரின் இலட்சியம், குறிக்கோள், வேண்டுதல், விருப்பம், நோக்கு, பயன் அனைத்தையும் இப்பாடல் உணர்த்தி நிற்கின்றது. சிவனது இன்பம் விட்டு நீத்தற்கரியது; எப்பொழுதும் சுவைப்பது; பேரின்பந்தருவது; மானுடப் பிறவியிலேயே பெரிதும் அனுபவித்தற் குரியது. பிறப்புண்டேல் அப்பிறப்பிலும் சிவனை மறவாத தன்மை வேண்டும்; உன்னை மகிழ்ந்துபாட வேண்டும்; உன்னடியின் கீழ் இருக்க வேண்டும் என்றெல்லாம் வேண்டுகின்றார்.

தமிழ் பரப்பும் ஞானசம்பந்தரும், தொண்டின் சிகரம் அப்பரும், அன்பின் வள்ளன்மைமிக்க கண்ணப்பரும், மனைவியையே தானம் கொடுத்த இயற்பகையும், பிள்ளையையே கறி சமைத்த சிறுத் தொண்டரும், கைலை சென்ற காரைக் காலம்மையும், மெய்த்தவவேடங் கொண்டவரே 'சிவன்' என எண்ணி வாழ்ந்த மெய்ப் பொருள் நாயனாரும், தீண்டுவீராகில் 'திருநீலகண்டம் ஆணை' என வாழ்ந்த கற்புடை மகளிரும், பிறமதத்தினின்றும் அப்பரைக் காத்த தமக்கையாராகிய திலகவதியாரும் வரும் பெரியபுராணத்தில் காரைக்காலம்மையார் பின்வருமாறு வேண்டிப் பாடுகின்றார்.

"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போது உன்னடியின் கீழ் இருக்க என்றார்"

என்னும் பெரியபுராணம் என்றென்றும் தித்தித்துத் தெவிட்டாத பேரின்பம் தருவது.

*எச்சரிக்கப்படுவதைவிட எச்சரிக்கை செய்வதே மேல்.*

அரனடியார் பற்றுறுதியும், சிவனை விட்டுநீங்காத குணமேன்மையும், அழுதரற்றும் பண்பும், பரோபகார சீலமும், பாடிப்பரவும் குணமும் உடையவர்கள். கண்டமாத்திரத்திலே குழைவும், கனிவும், காதலும் கொள்பவர்கள். உள்ளத்தில் கள்ளங்கபடமற்றவர்கள். இப்பண்பாடுகள் இன்று மனித இனத்தவர்களாலே கைவிடப்பட்டுவரும் நிலைமையில் மீண்டும் புத்தூக்கம் பெறுவதற்குரிய நிகழ்வாக இக்கட்டுரை அமைகிறது. இலங்கையிலே ஐந்தாவது உலகச் சேக்கிழார் மாநாடு அண்மையில் இடம்பெற்றது. சேக்கிழார் மாநாடு தரும் நற்செய்திகள் பல.

1. எவ்வகைப்பட்ட ஆய்வுக்கும் சமயஞ்சார்ந்த வாழ்வியல் விளக்கமே- சைவநெறி சார்ந்த வாழ்க்கை முறைமையும் தத்துவமுமே- பெரிதும் உண்மையானவை- யதார்த்தமானவை- என்ற கருத்து முதன்மைப்படுத்தப்படுகிறது. ஆய்வறிவு அணுகுமுறையின் நேர்த்தி, நுட்பம், உண்மை, ஏற்புடைமை ஆகியனவற்றுக்குச் சேக்கிழார் பெருமானின் உத்திமுறைமை, வழிகாட்டுதல் அவசியம் என்பதனை மீள வலியுறுத்தும் முறைமை உண்டு.

2. "திருமுறைச் செஞ்சொற் கவியின்பம்" வேறு எந்த இசையினாலும் பெறுதற்கரிது. எண்ணி இறும்பூதெய்தத்தக்கது, பண்ணிசையால் அரனையே அசைத்து வாழ்ந்த அடியார்களது திருவருட் பெருமையைப் பரப்புவன சைவத் திருமுறைகள், பெரியபுராணச் செய்யுட்கள்.

3. அரனது இருப்பையே அசைத்தும், ஆட்டியும் தமது வைராக்கிய சிவபக்தியை வாழ்க்கையில் நிறுவியமையை உலகினர்க்கு எடுத்துரைப்பது பெரியபுராணம். இது அரிய செய்தி.

4. நிலைகுலையும்- சீரழியும் குடும்ப அமைப்பு என்னும் சைவவாழ்வு முறைமையை எடுத்துரைத்தும், கதைகள்மூலம் விபரித்தும் உலகமக்களிடத்து 'இல்லறமேன்மை' யினை அழுத்தந்திருத்தமாக வலியுறுத்தும் வகையில் சைவத்தில் தற்கொலை இல்லை ஆகிய கருத்துக்கள் முன்வைக்கப்படுவது வரவேற்புக்குரியது.

5. எந்தப் பெரிய தாக்குதல்களினாலும் அழியாத பெருமையுடையது சைவமதம். "சைவத்தின் மேற் சமயம் வேறில்லை" என்பது உணர்ச்சி வாக்கியமல்ல. அனுபவ வாக்கு. உண்மை. "எம்மதமும் சம்மதம்" எனும் கருத்துக்கு முற்றிலும் முரணானது சைவம். காலத்தால் அழியாதது. கற்பனைக்கும் எட்டாதது. பிறமதத்தவர்களினாலே கடைப்பிடிக்க முடியாதது. விதிமுறைகளையும் விளக்கமுறைகளையும் கொண்டது. விஞ்ஞானபூர்வமானது. பிறர் பார்த்தும், கேட்டும் அறிந்தும் 'பொறாமை' கொண்டு முற்றிலும் அழிக்கவேண்டும்- "அழிக்கப்படவேண்டும்"- என்னும் தீவிரவாதத்தைத் தோற்றுவிப்பது. இவற்றினாலேயே வரலாறுகாணாத வகையில் சைவத்திற்கு, அதன் பண்பாட்டுக்கு, அதனைப் பின்பற்றும் மக்களுக்கு எந்நேரமும் கடும் சோதனைகள் என்பதனை இனியும் அறியாதார் சுத்த மூடர்களே. சைவத்தில் தீவிரவாதமும் உண்டு. அது "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்று தொடங்கும் திருநாவுக்கரசர் தேவாரத்தால் உணரப்படுவது. விறன்மிண்டரும், "வாழ்ந்து போதிரே" என்று பாடிய சைவநாயன்மாரும் கூடச்

சைவத்திலேதான் உள்ளனர் என்பது அதன் வீரவரலாற்றுக்குச் சான்று. சேக்கிழார் "வீடும் வேண்டாவிறல்" என்று அரனடியாரின் பக்தி வைராக்கியத்தைக் குறிப்பிடுகின்றார்.

6. இந்து மதத்தை - சைவத்தை- எதிர்க்கும் அவைதிகமதங்கள் நிலை பேறுடையனவல்ல. ஆதலினாலே தத்துவமேன்மை, வாழ்வியல் மேன்மை, வழிபாட்டு மேன்மை, பக்தி மேன்மை, தொண்டுமேன்மை, திருமுறை மேன்மை, சித்தாந்த மேன்மை, கடவுள் மேன்மை, திருவருள் மேன்மை, சங்கம வழிபாட்டு மேன்மை அனைத்தும் கொண்ட எம் சமயம் என்றும் நிலைபேறு கொள்ளும் என்பதே முடிந்த முடிபு. சமூக விழிப்புணர்ச்சிக்கும், சமய விழிப்புணர்ச்சிக்கும் சைவத்தின் நிலைபேற்றை உறுதிப்படுத்துவதற்கும் இச்சேக்கிழார் மாநாடு உதவுவதாக. அரனடியார் தனிப்பெருமை உணர்த்தப்படுவதாக.

"அன்பே சிவம்"

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

## உபநிடதச் சிந்தனை (3)

## இறைவன் எங்கும் நிறைந்துள்ளார்

தந்தையிடம் சுவேதகேது கேட்டான் கேள்வி
தரணியிலே இறைவனெங்கும் நிறைந்து உள்ளாரா
எந்தையே இறைவனவன் எங்கே மறைந்தார்
எப்படியா குமிதுஇம்மே தினியில் அப்பா
விந்தையேதும் இதிலில்லை விளக்கம் ஈதோ
விரைந்துநீ ஒருப்புக் கட்டி கொண்டுவா
அந்தவுப்பை நீர்நிறைந்த பாத்திரத் திலேயிடு
அதன்படியே சுவேதகேது செய்து விட்டான்

அடுத்தநாள் காலையிலே மகனைப் பார்த்து
அன்புடனே தந்தையுத்தா லகரும் சொன்னார்
எடுத்துவா நீபோட்ட உப்புக் கட்டியை
என்றதுமே மகனுமங்கு சென்று பார்த்தான்
திடுக்கிட்ட மகனுமோ டோடி வந்து
சிறிதுமேதயக் கமேதுமின்றிச் சொன்னான் ஐயா
எடுப்பதற்கு அங்கேயும் ஒன்றும் இல்லை
எல்லாமே அழிந்துதான் போன தையா

உத்தாலகர் மகனைப்பார்த் துப்பாத் திரத்தில்
உள்ளமேல்நீர் மத்தியநீர் அடிநீர் எடுத்து
அத்தனையும் சுவைத்துத்தான் பார்க்கச் சொன்னார்
யாவுமேயுப் பாகத்தான் இருக்கிறது என்றான்
சத்தியமாய் உப்பேதும் அழிய வில்லை
தருகின்ற உருவம்தான் வேறா னதாகும்
சத்தாகப் பரம்பொருளும் உலகம் முழுதும்
தானாக மறைந்து நிற்கிறார் என்றார்.

*கவிஞர் வ. யோகானந்தசிவம் அவர்கள்*

**சிந்தனையில்லாத மனிதன் பிணத்திற்குச் சமமானவன்.**

உ

# வெள்ளிக்கிழமை வழிபாடு

## திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

சுக்கிரவாரம் என்று வெள்ளிக் கிழமையைக் குறிப்பிடுவர். சைவசமயத் தவருக்கு வெள்ளிக்கிழமை கடவுள் வழி பாட்டிற்குரிய புனிதமான நாள். திருக் கோயில்சென்று, முறைப்படி ஆசார சீலத்துடன், அமைதி பேணி, இறைவனை வழிபாடு செய்வது சைவசமயத்தவர்களின் கடமையாகும். ஒவ்வொருநாளும் கோயி லுக்குச் சென்று வழிபடுதலே முறையாகும். ஆயினும் எல்லோருக்கும் இது இயலக் கூடிய காரியமன்று. எனவே, விசேட புண்ணிய தினங்களிலாவது, குடும்பமாகக் கோயிலுக்குச் சென்று, இறைவனைத் திரிகரண சுத்தியோடு வழிபட்டு வருதலை வாழ்க்கையில் வழக்கமாக்கிக்கொள்ள வேண்டியது அவசியம். இந்த வகையில், ஒவ்வொரு வாரமும் வருகின்ற வெள்ளிக் கிழமைகள், திருக்கோயில் வழிபாட்டிற் குரிய விசேட தினங்களாகக் கொள்ளப்படு கின்றன. பிள்ளையார், சிவன், அம்பாள், முருகன், விஷ்ணு ஆலயங்களுக்கும், மற்றும் தெய்வ சந்நிதிகளுக்கும் வெள்ளிக் கிழமைகளில் சென்று வழிபாடு செய்யும் வழக்கம் நம்மிடையே இருந்து வருகிறது. வெள்ளிக்கிழமைகளிலிலேயே, கிராமியத் தெய்வங்களாகிய வைரவர், வீரபத்திரர், காளி, நாச்சிமார், அனுமார், ஐயனார் ஆகியோருக்கு விளக்கேற்றல், பொங்கல், மடை என்பனவும் பக்திப்பரவசத்துடன் நிகழ்த்தப்படுகின்றன. மற்றும் பாடசாலை கள், சமூக நிறுவனங்கள், வீடுகள் ஆகியவற்றிலும் விசேட பிரார்த்தனைகள், கூட்டு வழிபாடுகள், பஜனை என்பன வெள்ளிக்கிழமைகளில் நடைபெறுவதைக் காண்கின்றோம். எல்லா வெள்ளிக்கிழமை களுமே இந்தவகையில் சிறப்புப்பெற்றிருப் பினும், ஐப்பசி மாதத்தில் வருகின்ற வெள்ளிக்கிழமைகள் மேலும் விசேடத்துவ மானவை என்று கூறப்பட்டுள்ளது. வெள்ளிக்கிழமைகளில் விரதமனுட்டித்து வருதல், எல்லா வகைச் சிறப்புக்களையும் பெற ஏதுவாகின்றது. அவ்வாறு செய்யச் சந்தர்ப்பமில்லாதவர்கள், ஐப்பசி வெள்ளிக் கிழமைகளில் உபவாசமிருந்தோ அல்லது ஒருநேர உணவு உண்டோ விரதம் மேற் கொள்ளுதல் நன்று. முருகனும் சிவனும் வேறல்லர். இருவரும் ஒருவரே, என்பதைச் சைவர்களாகிய நாம் அறிந்திருத்தல் வேண்டும்.

சைவசமயிகளுக்குப் புலால் உண்ணல் விலக்கப்பட்ட ஒன்றாகும். மச்ச மாமிசம் புசித்தல் பாவச்செயல் என்று சைவசமயம் கொள்கிறது.

"கொல்லான் புலானை மறுத்தானைக் கை கூப்பி
எல்லா உ்யிரும் தொழும்"

என்பது வள்ளுவர் மறை.

அஹிம்சை தத்துவமும் இதுவே. எந்த உயிரையும் கொல்வதற்கு நமக்கு உரிமையில்லை. அந்த உயிர், மனித உயிராக இருக்கலாம். விலங்கினதோ பறவையினதோ உயிராக இருக்கலாம். கொலை சைவநெறிப்படி பஞ்சமாபாதங்

களுள் ஒன்று. அது விலக்கப்பட வேண்டியது.

வெள்ளிக்கிழமைகளிலாவது மற்ச மாமிசம் புசியாது விடுதல் நல்ல காரியம் ஆகும். ஒருபடி முன்னேற்றம் என்றே கூறலாம். வெள்ளிக்கிழமை திருக்கோயிலுக்குச் செல்லும் நாள்; அவ்வாறே விரதம் அனுட்டிக்கும் புனிதநாள். மாமிசம் புசித்து விட்டுக் கோயிலுக்குச் செல்லல் ஆகாது. அவ்வாறே, வீட்டில் ஒரு சிலராவது விரதத்தை மேற்கொள்ளும்போது, அன்றைய தினம் அவ்வீட்டில் மாமிசம் சமைப்பது ஆகாதசெயல். விரதத்தின் புனிதத்தை அச்செயல் கெடுத்துவிடும். அப்படியிருக்க, விரத தினத்தில், தனக்கு மாமிசம் சமைத்துத் தரவேண்டும் என்று விரதம் அனுட்டிக்கும் வீட்டிலுள்ளோரை வற்புறுத்துவதோ, அடம்பிடிப்பதோ பாவச்செயலாகும். விரதம் குடும்பத்திலுள்ள அனைவரின் நன்மையின் பொருட்டே மேற்கொள்ளப்படுவது என்ற உணர்வு, யாவரிடமும் ஏற்பட்டால், விரதத்தின் புனிதத்தைக் கெடுக்கும் எந்த ஈனச்செயலிலும் எவரும் இறங்கமாட்டார்கள். சைவசமய மக்களிடம் இந்தப் பண்பு வளரவேண்டும். வெள்ளிக் கிழமைகளிலும் விசேட விரத தினங்களிலும், திருக்கோயிலுக்குச் சென்று இறை வழிபாடு செய்கின்ற நாட்களிலுமாவது சைவமக்கள் புலாலுண்ணாமையைக் கைக்கொள்ளுதல் இன்றியமையாதது.

சத்தியம், அஹிம்சை ஆகிய இரண்டு தெய்வங்களின் உதவியைக் கொண்டே மகாத்மா காந்தியடிகள், பாரத தேசத்திற்கு விடுதலைபெற்றுக் கொடுத்தார். அது ஒரு மகத்தான சாதனை. சத்தியமும், அஹிம்சையும் அத்துணை பேராற்றல் கொண்டவை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. சத்தியம், அஹிம்சை ஆகிய இரண்டும் விரதங்கள். அவை, எம்மால் அனுட்டிக்கப்படவேண்டியவை. அது எல்லோருக்கும் இயலக்கூடியது. அஹிம்சை என்பது எவ்வுயிர்க்கும் இன்னா செய்யாமை; தீங்கு செய்யாமை; கொல்லாமை ஆகும்.

"உற்ற நோய் நோன்றல், உயிர்க்கு உறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்குரு"

என்கிறார் வள்ளுவப் பெருந்தகை தவம் எப்படித் துறவறத்தாருக்கோ, அப்படியே விரதம் இல்லறத்தாருக்கு எனலாம்.

**சந்நிதிக் கந்தனே! சமாதான வாழ்வுதர கொடியேற்று**

சமாதான வாழ்வருள சந்நிதியில் கொடியேற்று
சந்நிதி கந்தனென அருள்பெருக்கி கொடியேற்று
நிரந்தர அமைதி காத்தருள கொடியேற்று
நினைப்பதைத் தருகின்ற ஈசனென கொடியேற்று
உரிமையெலாம் சேர்த்தருள கந்தனே கொடியேற்று
உகந்த வாழ்வுக்கு வழிகாட்ட கொடியேற்று
பெருமையெல்லாம் சேர்த்தருளும் முருகா கொடியேற்று
பெம்மானென தொண்டைமானாற்றில் அருள்பவனே கொடியேற்று

*மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன்*

**அமைதியைவிட மேலான ஆனந்தம் வேறெதுவுமில்லை.**

உ

(தொடர்ச்சி..

# மனிதப் பிறவியின் மாண்பு

ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி அவர்கள்

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்குவண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

இத்திருத்தாண்டகத்தில் அப்பரடிகள் தம் வாழ்நாளிற் கண்ட அனுபவம் சாதனைகள் முதலியவற்றை வெளிப்படுத்தியுள்ளார். பருவமடைந்த பெண்களுக்குப் பெற்றோர் திருமணம் பேசுவார்கள். அப்போது திருமணம் செய்யப்போகும் மங்கை தனக்குப் பேசிய கணவன் பெயர், ஊர்ப் பெயர் குணங்களைக்கேட்டுக் காதல் கொள்வாள். திருமணம் முடிந்ததும் கணவன் வீட்டிற்குச் சென்று கணவனின் பெயரைத் தனக்குள் சேர்த்ததும் தான் யார் என்பதும் தன் பெயர் எது என்பதும் மறந்து விடுவாள். இவ்வாறு பல கோணங்கள் உண்டு. அப்பர் சைவசமயத்தின் உண்மை நிலையறியாது புறச்சமயம் சென்று பெரிதும் இடர்பாடுகளும் துன்பங்களும் அடைந்தார். சகோதரி திலகவதியின் பிரார்த்தனையால் மீண்டும் சைவசமயம் அனுட்டித்தார். இறைவனிடம் சரணாகதியடைந்தார். தான் பெற்ற இன்பம் எல்லா மக்களும் அடையவேண்டும் என்ற ஆவல் தூண்ட இறைவனைத் தலைவனாகவும் ஆன்மாவைத் தலைவியாகவும் வைத்து இப் பாடலைப் பாடினார்.

கல்நெஞ்சையும் கனியச் செய்யும் மனவாசகம் கடந்த திருவாசகத்தை மணிவாசகப்பெருமான் பாட அந்தணர் வடிவாய் வந்த எம்பெருமான் அதனை எழுதினார். திருவெம்பாவை அகத்துறைப் பாடலாக இருக்கவே, "பாவை பாடின வாயால் கோவை பாடுக" என்று மணிவாசகப் பெருமானைக் கேட்டபோது மணிவாசகப் பெருமான் சிவபெருமானைத் தலைவனாகவும் தன்னைத் தலைவியாகவும் பாவனை செய்து நானூறு பாடல் பாடினார்.

அவற்றைச் சிதம்பரத்தின் கருவறையில் வாதவூரன் பாடத் திருச்சிற்றம்பலவன் எழுதியது என்று கையொப்பமிட்டு எம்பெருமான் வைத்தார். தில்லைவாழ் அந்தணர்கள் எம்பெருமான் வைத்த ஏட்டை எடுத்து வாசித்தனர். பொருள் விளங்காது திகைத்தபோது எம்பெருமான் தில்லையின் எல்லையில் தவவாழ்வு வாழ்கின்ற மணிவாசகப்பெருமானிடம் திருவாசகம், திருக்கோவையாருக்குப் பொருள் கேட்டுணரும்படி அருளினார். அவ்வாறே தில்லைவாழ் அந்தணர் முதலானோர் மணிவாசகப்பெருமானிடம் சென்று பொருள் கேட்டார்கள். மணிவாசகப்பெருமான் அவர்களுடன் தில்லைக்

கோயிலுக்கு வந்து எம்பெருமானின் தூக்கிய திருவடியைச் சுட்டிக்காட்டி

"செய் காட்டும் கமுகடவித் தில்லையுள்ளார் பொருள்கேட்கக்
கைகாட்டித் தம்முருவம் காட்டாமல் மறைந்தாரைப்
பைகாட்டும் பேரரவப் பணிவுடையார் தமக்கன்பு
மெய்காட்டிப் பாலுடனே மேவியநீர் ஆக்கினார்"

இறைவனுடன் இரண்டறக் கலந்ததாகக் கடவுள் மாமுனிவர் பாடுகின்றார்.

அதாவது தில்லையிலுள்ள கோவிலுக்குச் செல்கின்ற வழிகாட்டும் கமுகம் பிள்ளைகள் நிறைகின்ற தில்லையிலுள்ளவர்கள். அந்நூல்களின் பொருளைக்கேட்டபோது, மணிவாசகப்பெருமான் நடராசப்பெருமானின் தூக்கிய திருவடியைச் சுட்டிக்காட்டித் தம் உருவம் காட்டாது கோயிலினுட் புகுந்து சாயுச்சிய பதவியில் மறைந்தவரை பாம்பை ஆபரணமாகக் கொண்டவர்மேற் பேரன்பு பூண்டு உலகின் உண்மைப் பொருளாகிய நடராசப் பெருமானுடன் இரண்டறப் பாலும் நீரும் போலக் கலந்தார் மணிவாசகப்பெருமான்.

## முடிவுரை

இவ்வாறான பெருமைக்குரிய மனிதனைச் சிறுமைப்படுத்துவன ஐம்புல வேடராவர். ஐம்புலவேடர் எனப்படுவோர், மெய், வாய், கண், மூக்கு, செவி எனப்படும் உடம்பாகிய காட்டில் இவர்கள் வசிக்கின்றார்கள். இவர்களுக்குத் துணையாக ஆணவம், கன்மம், மாயையாகிய மும்மல மதயானைகளும் உண்டு. ஆன்மாவைப் பிறவிக்கடலுள் அழுந்தவிடாது கரையேற்றத் தெப்பமாக அறிவு என்னும் விவேகம் பயன்படுகின்றது.

மழைக்காலங்களில் மண்புழுவைக் காண்கின்றோமல்லவா? மண்புழுவை நாக்கூழ் அல்லது நாக்கிலிப்பூச்சியென்று அழைப்பர். இப்புழு நீர்நிலையில் அதிகமாகக் காணப்படும். உலர்ந்த இடத்தில் இப் புழு காணப்பட்டால் அதோகதிதான். உயிருடன் புழு இருக்கும்போதே பல்லாயிரம் எறும்புகள் அதனை உண்பதற்காகக் கடித்திழுக்கப் புழுவும் வேதனையால் துடிப்பது போலவே ஆன்மா என்று கூறப்படுகின்ற மனித உயிர் ஐம்புலன் என்னும் எறும்பினால் அரிப்புண்டலைவதை மணிவாசகப்பெருமான்

"எறும்பிடை நரங்கூ ழெனப்
புலனால் அரிப்புண்டலந்த வெறும்
தமியேனை விடுதிகண்டாய்" எனக்

கவலைப்படுகின்றார். மீண்டும் ஓரிடத்தில் ஐம்புலன்கள் ஆன்மாவை வருத்தும் இடத்தை நீத்தல் விண்ணப்பத்திற் சுட்டிக் காட்டுகின்றார், நாருறு கண்ணியர் ஐம்புலன் ஆற்றங்கரைமரமாய் வேருறுவேனை விடுதிகண்டாய். அதாவது ஆற்றங்கரையில் நிற்கின்ற மரம் செழித்து வளர ஆற்றுநீர் காரணமாய் நின்றது. அதே நீர் காலப்போக்கில் அடிமரத்தின் வேரை அரித்து அரித்து அந்த மரத்தை வேருடன் வீழ்த்திவிடுவதுபோல இந்த ஐம்புலன்களும் ஆன்மாவை அழகிய கரிய கண்களையுடைய பெண்களிடம் இட்டுச்சென்று நன்மை செய்வதுபோலக் காமத்தீயினாற் பொசுக்கி விடுகின்றது. இன்னோர் இடத்தில் செழிகின்ற தீப்புகுவிட்டிலிற் சின்மொழியாரிற் பன்னாள் விழுகின்ற என்னை

விடுதிகண்டாய் என்று கவல்கின்றார் மணிவாசகப்பெருமான்.

இந்த ஐம்பொறிகளில் இருந்து புறப்படுகின்ற ஐம்புலன்கள் தீயவழியிற் சென்றால் மனிதனை வேருடன் அழிக்கும் தன்மையுடையன என்பதைப் பின்வரும் உதாரணங்கள்மூலம் அறியலாம். மெய் அதாவது உடம்பினாற் பெறுகின்ற இன்பம் ஆண்யானைகளிடம் அதிகமாகக் காண லாம். ஆண்யானையைப் பிடிக்க விரும்பு வோர் பொறிக்கிடங்கை வெட்டி இலை களால் மூடியபின் பெண்யானையை அருகில் விடுவார்கள். பெண்யானையைக் கண்ட ஆண்யானை காமம் வேகமாகத் தூண்ட வந்து பொறிக்கிடங்குள் வீழ்ந்து விடுகின்றது. விட்டித் பூச்சியை யாவரும் அறிவர். அது கொழுந்துவிட்டு எரிகின்ற விளக்கினைக் கண்டு களிப்பு மிகுதியால் அதனுள் வீழ்ந்து எரிந்து விடுகின்றது. இதுபோலவே மனோரஞ்சித மலர் அல்லது செண்பக மலரின் நறுமணத்தை நாடிய தேன்வண்டும் இறந்துவிடுகின்றது. மீனுக் குச் சுவையென்றால் அதிக விருப்பம். அதனால் மீன்பிடிப்பவரின் தூண்டிலின் உணவை விரும்பி அவ்வுணவைக் கவ்வும் போது தூண்டிலில் அகப்பட்டு மாளு கின்றது. அசுணப்பறவை இசையில் விருப்ப முடையது. அசுணப் பறவையை பிடிக்க விரும்பிய வேடர்கள் யாழ் இசை மீட்பார் கள். அசுணப்பறவைகள் கூட்டமாய் அருகே வந்ததும் பறைமேளம் முழக்கு வார்கள். பறைமுழக்கம் அசுணப்பறவை களின் காதுகளிற் பட்டதும் இறந்துவிடு கின்றது.

இவ்வாறு மனித உயிர்களும் புலன்களாலும் மும்மலங்களாலும் துன்பப் படுவதை அருளாளர்கள் அறிந்து பரிதாபம் கொண்டனர். புலன்கள் வழிச்செல்லாது இறைவழிச் சென்று பேரின்பமடைய நன்னெறிகளை உபதேசித்தனர். அஃறி ணைப் பொருளாகிய தேன்வண்டை மணி வாசகர் கூவி அழைத்து சிறு சுவையைத் தருகின்ற சிறியபூவின் தேனை உண் ணாதே என்று பேரின்பம் தருகின்ற இறை வனை நினைத்து இரீங்காரம் செய் என்று கூறுவதுபோலச் சிற்றின்ப வசப்பட்டு நிலை யற்ற வாழ்வு வாழும் மக்களை நோக்கிக் கூறியுள்ளார்.

சுந்தரமூர்த்தி நாயனார் பூர்வீகத் தில் எம்பெருமானின் பிரதிவிம்பத்தில் தோன்றியவர். விபூதி ஏந்தும் பணி விடை யில் இருந்தவர். ஒருநாள் எம்பெரு மானுக்கு மலர் எடுக்க நந்தவனம் சென் றார். அங்கு உமாதேவியாருக்கு மலர் எடுக்கவந்த கமலினி அநிந்திதை ஆகியோர்மீது மையல் கொண்ட காரணத் தால் மண்மீது பிறவி எடுக்கும்படி எம்பெரு மான் பணித்தார். அப்போது மண்ணில் மயங்கும்போது தடுத்தாட் கொள்ளும்படி சுந்தரர் வரம்கேட்டார். இறைவனும் அருளி னார். சுந்தரர் திருமுனைப்பாடி நாட்டில் அவதாரம் எடுத்தார். அவருடைய பெற்றார் பெயர் சடையனார் இசைஞானியார். இள வயதிலே நரசிங்கமுனையர் என்ற அரச னால் வளர்க்கப்பட்டார். திருமணப் பருவம் அடைந்ததும் புத்தூர்ச் சடங்கவி சிவாச்சாரி யார் மகளுக்குச் சுந்தரர் மணமகனாகத் திருமணம் பேசப்பட்டது. சுந்தரர் மண வாளக் கோலத்தோடு சடங்கவியார் வீடு சென்று திருமணமண்டபத்தில் உட்கார்ந் தார். அப்போது முன்னே அருளிய வாக் கின்படி எம்பெருமான் சிவ அந்தணர் வடிவ மாக எழுந்தருளிவந்து திருமணம் நடக்க விடாது தடைசெய்து திருவெண்ணெய்

*எல்லா அதிதிருப்திகளின் வேர் தன்னலமே.*

நல்லூரில் வழக்காடிக் கோயிலுள்ளே மறைந்தார்.

இதன்பின்னர் தலயாத்திரை செய்த சுந்தரர் தில்லையில் உள்ள சிதம்பரம் என்ற ஆலயம் வந்து நடராசப் பெருமானைத் தரிசித்தபோது இப்பாடலைப் பாடினார். ஐந்துபேர் அறிவு என்று கூறப்படுகின்ற மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய ஐம்பொறிகளின் வழியான புலன்களும் தத்தம் தொழிலே மறந்து எம்பெருமானையே காண்கின்ற தொழிலாக ஒருமைப்பட்டன. சொல்லுதற்கரிய அல்லது அளவிடுவதற்கரிய மனம் புத்தி சித்தம் என்று கூறப்படுகின்ற அந்தக் கரணங்கள் மூன்றும் தன்தன் வழியே செல்லாது எம்பெருமானைத் தரிசிக்கின்ற சிந்தனை அதாவது நினைவில் ஒன்றுபடத் தாமசம், இராசதம், சாத்வீகம் ஆகிய முக்குணங்களும் தங்களுக்குரிய இயல்பான குணங்களைக் கொண்டு மனத்தைக் குழப்பாது சாத்வீகம் அதாவது சாந்த குணமாக சந்திரன் விழுகின்ற சடைமுடியையுடைய நடராசப்பெருமான் ஆடுகின்ற ஆனந்தமான கனகசபையின் கண்ணே காணப்படுகின்ற ஒப்பற்ற நடனத்தினாற் பெருகுகின்ற பேரின்ப வெள்ளத்துள் திளைத்து குற்றம் ஏதுமில்லாத மகிழ்ச்சியில் மகிழ்ந்தார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

மீண்டும் சேக்கிழார் சுவாமிகள் சுந்தரமூர்த்தி நாயனாரின் திருக்கண்களால் எம்பெருமானைத் தரிசித்தவாறு குளிர்ச்சி பொருந்திய நிலவை அணிந்த சடையை உடையவனே உன்னுடைய திருநடனம் கும்பிடப் பெற்றமையால் மண்ணிற் பிறந்த பிறவி இன்பமாயும் பயனுடையதாயும் வாய்த்துவிட்டது என்று இவ்வாறு பாடிய சுந்தரமூர்த்தி நாயனாரின் இரு கண்களிலிருந்து நதிபோலக் கண்ணீர்பாயத் தனது கைமலர்களைத் தலையின் உச்சி மீது குவித்து எம்பெருமானைப் பண்ணிசை பெருகப் பாடிப் பரவியேத்தினார். மனிதப் பிறவியின் மாண்பு இங்கு தெளிவாகப் புலப்படுகின்றதல்லவா?

சிந்தனை புலன்கள் முதலியன ஒருமைப்பாடு இல்லாது இறைவனைப் பூசிப்போரைக்கண்ட பட்டினத்தடிகள் கையொன்று செய்ய விழியொன்று நாடக் கருத்தொன்று எண்ணப் பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால் கமழும் மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்பும் யான் செய்கின்ற பூசை எவ்வாறு கொள்வாய் வினை தீர்த்தவனே ஆக, இந்த உடலைத்தந்த இறைவனுக்கு இவ்வாறு பூசனை செய்தால் ஏற்றுக்கொள்ள மாட்டார் என்பது தெளிவாகின்றது.

இறைவன் தந்த இவ்வுடலுக்குக் கண்ணுண்டு காண; கருத்துண்டு நோக்க; கசிந்துருகிப் பண்ணுண்டு பாட; செவி நிற்க ஈசன் இருக்கையிலே, மண்ணுண்டு போகுதையோ கெடுவீர் இந்த மானுடரே என வருந்துகின்றார். மனிதப்பிறவி வேண்டுவதும் அவர்களுக்கு இன்றியமையாதது மீண்டும் மீண்டும் பிறவாமையும் வேண்டுமானால் “நல்லார் இணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே அல்லாது வேறு நிலையுளதோ அகமும் பொருளும் இல்லாளும் சுற்றமும் மைந்தரும் வாழ்வும் எழிலுடம்பும் எல்லாம் வெளிமயக்கே இறைவாகச்சி யேகம்பனே”

மனித வாழ்விற் பலவிதமான பல கோடி பிழைகள் காணப்படுவதுண்டு. எல்லாப் பிழையும் பொறுத்தருளும்படி இறைவனிடம் மன்றாட வேண்டும். கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி

நில்லாப் பிழையும் நினையாப் பிழையும் நின் ஐந்தெழுத்தை சொல்லாப்பிழையும் துதியாப்பிழையும் தொழாப்பிழையும் எல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியே கம்பனே" என்று பட்டினத்தார் வேண்டுகின்றார். இவ்வண்ணம் மனிதப் பிறவியெடுத்த எல்லோரும் வாழ்ந்தால் நாட்டில் இன, மொழி, மதச், சாதிப்பிரச் சினைகள் உண்டாகா.

(முற்றும்)

## கந்தன் திருமந்திரம்

கந்தனே உயிரைக் காக்க,
கா்த்தனே அறிவைக் காக்க
சித்தனே மனத்தைக் காக்க
திகழ் புலன் ஐந்தைக் காக்க
பத்தனே உடலைக் காக்க
பன்னிரு கரத்துச் சேயே

ஆதியே என்னைக் காக்க
அா்த்தனே நாட்டைக் காக்க
ஜோதியே உலகைக் காக்க
சூழ்நெறி காக்க காக்க
பொய், பகை, பொறாமை, லோபம்
புகுந்திடா வாறு காக்க
நோய், பிணி, கேடு, வஞ்சம்
நுழைந்திடா வாறு காக்க

கொலை, புலை, நீக்கி எங்கும்
குணம் செயல் அறிவைக் காக்க
கலை வளா் மதியந் தோயும்
கடிவரைச் செம்மைத் தேவே

அருள் பொழியும் முகம் வாழி
அழகு திருத்தோள் வாழி
இருள் கடியும் வேல் வாழி
எழில் வள்ளி பிடி வாழி
சுருள் படிந்த தணிகை முதல்
தொல் பதிகள் வாழியவே

கந்தா சரணம் கடம்பா சரணம்
கதிரமாமலை முருகா சரணம்
எனைக் காக்கும் என் தாய் சரணம்
என் அப்பனே சரணம் சரணம் சரணம்.

*S.K. சிவபாலன் அவர்கள்*

உ

# கந்தபுராணம்- அது நம் சொந்தப்புராணம்

செல்வன் தி. மயூரகிரிசர்மா அவர்கள்

"இந்திரராகிப் பார்மேல் இன்பமுற்று இனிது மேவிச்
சிந்தையில் நினைந்த முற்றிச் சிவகதியதனிற் சேர்வர்
அந்தமில் அவுணர் தங்கள் அடல்கெட முனிந்த செவ்வேற்
கந்தவேள் புராணம் தன்னைக் காதலித்து ஓதுவோரே"

என்ற நூற்பயன் கூறும் பாடலின் படி, முருகப்பெருமானின் திருவரலாறு கூறும் நம் சொந்தப் புராணமாகிய கந்த புராணத்தைக் காதலுடன் கேட்போர், படிப்போர், நினைப்போர், பேசுவோர் யாவரும் இவ்வுலகிலே இந்திரனைப் போலத் தலைமைத்துவம் பெற்றுச் சுகவாழ்வு வாழ்ந்து இறுதியில் பரகதியாகிய சிவப் பதப்பேறும் பெறுவர் எனக் கூறப்படுகிறது. முருகனே "திகட சக்கர" என்று முதலடி எடுத்துக்கொடுக்கக் காஞ்சியில் அந்தணராகக், குமரகோட்ட முருகன் கோயிலில் பூசனை செய்துவந்த அர்ச்சகரான கச்சியப்பச்சிவாச்சாரியார் 10345 விருத்தப் பாவால் பாடிய அரிய தமிழ்க் காவியம் கந்தபுராணம்.

"உபதேச இரத்னாகரம்" எனப் போற்றப்படும் இப்புராணம் காப்பிய இலக்கணங்களுடன் சித்தாந்தக் கருத்துச் செறிவும் தத்துவார்த்த உண்மைகளும் பொருந்தப்பெற்று மிளிர்கின்றது. முருகனால் ஆணையிடப்பட்டு, அவனால் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு, அறிஞர் முன்றிலில் இலக்கண வழுச் சந்தேகமுண்டான போதும் கந்தவேளாலேயே நீக்கப்பட்டுப் பலரும் அறிய அங்கீகரிக்கப்பட்ட நூல் "கந்தபுராணம்". இதுதான் கந்தபுராணத்தின் தனிச்சிறப்பு. இப்புராணம் தமிழரின் தவப் பயனாற் கிடைத்த அருமையான "அட்சய பாத்திரம்" எனலாம். இந்த ஞானசுரபி" யைக் காப்பாற்றும் பொறுப்புச் சைவத் தமிழ் மக்களாகிய எம்முடையதே.

**அரிய தத்துவப் புதையல்**

கந்தபுராணம் ஒரு தத்துவப் புதையல். கந்தபுராணத்தின் ஆரம்பம் முதல் பூர்த்திவரை இதை உணர்ந்து அனுபவிக்கவேண்டும். சிவன் தட்சணாமூர்த்தி வடிவெடுத்து சனகாதிமுனிவர்கட்கு அருளியமை ஆன்மாக்கள் நல்லறிவு பெற முடியாது மெய்யார்வம் பூணுதற்பொருட்டாகும். தவிக்கும்போது, சிவனே குருவாய் வந்து மெய்ம்மையை உபதேசித்து அருள்வான் என்பதையும், மன்மதனாகிய காமனை எரித்தமையானது இறைவன் "காமத்தை வென்றவன்" என்பதையும் அவனடியார்களுக்குக் காமத்தால் தீதுண்டாகாது என்பதையும், மார்க்கண்டேயர் பொருட்டுச் சிவபிரான் யமனைச் சங்கரித்தது அவனடியவர்க்கு மரணபயமேதும் இல்லை என்பதையும் சுட்டி விளக்குகின்றன.

அன்னை பார்வதிக்கும் சிவபெருமானுக்கும் நிகழ்ந்த திருமணம் "காதற்" சிறப்பையும் பெண்ணும் ஆணும் கூடிவாழும் உயரிய தமிழர் பண்பாட்டையும் விரித்துரைக்கின்றது.

அறிவின்மை இழிவானது அதைவிட இழிவு அறிய மனமில்லாமை.

"பெண் பால் உகந்திலனேல் பேதாய் இரு நிலத்தோர்
விண் பால் யோகெய்தி வீடுவர் காண் சாழலோ" எனும் மணிவாசகர் வாக்கு இங்கு எண்ணப்பட வேண்டியது.

**மூவுலகிற்கும் முதல்வன் குழந்தையானான்**

தேவர்களின் வேண்டுகோளின்படி சிவபெருமானின் நெற்றிக்கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகள் பிறந்து, விண்ணிலே தவழ்ந்து வளித்தேவனும், தீத்தேவனும் ஏந்த, மண்ணிலே வந்து சரவணப்பொய்கை நீரிலே குழந்தையாகிறது. அவனே அழகன்முருகன். இவ்விடத்தில் முருகன் பிறந்தனன் என்று கூறாது "உதித்தனன்" என்கிறார் கச்சியப்பர். அதாவது "நிலையாக இருக்கின்ற சூரியன் காலையில் உதிக்கிறது. அதுபோல நிலையாக இருக்கும் முருகன் மேற்படி சமயத்தில் குழந்தையாக உதித்தான்" என்பது கவிஞரின் கவிரசனைக்குரிய உண்மைகூறும் சொற்பிரயோகத்தின்மூலம் தெரிகின்றது. மேலும் முருகனின் பிறப்பிலே ஐம்பூதங்களின் பங்களிப்பையும் நாம் கண்டு வியக்கலாம்.

முருகனின் ஆறுமுகமும் ஆற்றல், அறிவு, அழகு, அமைதி, அன்பு, ஆளுமை என்பவற்றை உணர்த்துகின்றன என்றும் இளையான், எவர்க்கும் மிகப்பெரியான், என்றும் அழகியான், சர்வ வல்லமையுடையான், சனாதனமானான், மெய்ப்பொருளாவான் என்பதை எல்லாம் அவனது திருவுருவச் செழுமையிலேயே காண, வியக்க, கருதமுடியும்.

"முழுமதி அன்ன ஆறுமுகங்களும் முன்நான்காகும்
விழிகளில் அருளும் வேலும் வேறுள படையின் சீரும்
அழகிய கரமீராறும் அணி மணித் தண்டையார்க்கும்
செழுமலரடியும்......"

என்று முருகனின் திருவுருவத்தை மனக்கண்முன்னே கொண்டு வரும் கவியரசர் கச்சியப்பர் மனதிற்கும் வாக்கிற்கும் எட்டாத கோடி கோடி மன்மதர் ஓருருக் கொண்டதாக முருகனின் பேரழகைக் காட்டி, அதில் வியக்கச்செய்கிறார்.

"தன்னைத் தான் காதலனாயின் எனைத் தோன்றும்
துன்னற்க தீவினைப் பால்" என்பது வள்ளுவர் மொழி. அதாவது, நீ உன்னை விரும்பி, உனக்கு நன்மையை விரும்பின் தீவினை ஏதும் செய்யாதிருப்பாயாக" என அவர் அறிவுறுத்துகிறார்.

சூரன் எல்லாவகைச் சிறப்பும் இறையருளும் உடையவனாய் இருந்தும் தீவினை செய்து தன்னைத் தானே அழித்தமை இதற்குத் தக்க சான்றாகின்றது.

**போரும் சீரும்**

போருக்கு முன்னர் முருகன் சூரனிடம் தர்மத்தின் வழியே, வீரவாகுவைத் தூதனுப்பி அது இயலாமையால் தேவரைச் சிறையினின்று விடுவிக்கச் சூரன் மறுத்ததால் முருகன் போரிடுகிறான். அந்தப் போரிலும் ஆயுதமேந்தாதவனுடன் போரிடக்கூடாது, மறைந்து நின்று போராடக் கூடாது, தனக்குச் சமானமான வீரமற்றவனுடன் போராடக் கூடாது, புறங்கொடுப்போனைக் கொல்லக்கூடாது போன்ற

தர்மங்கள் பேணப்படுவது இன்றைய அநாகரிக, அதிமோசமான போரியல் பேணும் உலகிற்கு முக்கிய படிப்பினையாகும். தாரகனின் அழிவு கன்மத்தின் அழிவையும், சூரனின் தம்பியான சிங்கனின் முடிவு மாயையின் முடிபையும் சூரபத்ம சங்காரம் ஆணவ நாசத்தையும் காட்டும்.

இறையருட்டுணையோடு ஆணாம் நாதமும் பெண்ணாம் விந்துவும் கலந்து குழந்தையாகின்றது. இறைவனிடமிருந்து வந்த நாம் அனைவரும் இறுதியில் அவனிடமே சென்றடைய வேண்டும். அதன்படி சூரபத்மன் அழிவின் பின் நாதவுருவாய் சேவலாகி முருகனின் கொடியாகவும், விந்துருவாகி மயிலாகி வாகனமாகவும் மாறினான். அவனையே அடைந்து அவனருளால் அவன்தாள் வணங்க வேண்டும். இதுதான் முக்தி. இதைத்தான் "சூரன் பெற்ற பேறு" என்று ஆன்றோர் போற்றுவர்.

செஞ்சோற்றுக்கடனுக்குச் சிங்கனும் பிதிர்க்கடனுக்கு இரணியனும் மானத்திற்குச் சூரனும் கந்தபுராணத்தில் எடுத்துக்காட்டுக்கள். இராவணன் மனைவி மண்டோதரி "கற்பு" எனும் பெண்மை ஒழுக்கத்திற்கு ஓருருவான எடுத்துக்காட்டாகும். ஆனால்

"தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர்"

என்ற கந்தபுராணச் செய்தியோ, எங்கள் ஒவ்வொருவரையும் தட்டி எழுப்பிப் "பாவிகளே, கடந்த காலம் போயது, உங்கள் பாவ மூடைகளை நீக்க வழியுண்டு. உடனடியாக கந்தசாமியின் கழலைப் போயடையுங்கள் புனிதராவீர்" என சொல்லி நமக்கெல்லாம் நற்செய்தி ஆகின்றது.

அவனது திருக்கை "வேல்" ஞான உருவாகி ஆழ்ந்து, அகன்று, கூர்மையான அறிவின் வெளிப்பாடாகின்றது. அவனது சேவற்கொடி அஞ்ஞான இருளகற்றி ஞான ஒளியை வரவேற்கக் கூவுகின்றது. வாகனமான மயில் ஆசை எனும் பாம்மை அடக்கிப் பிரம்ம சக்தியாக ஓம்கார வடிவாகத் திகழ்கின்றது.

**காதலன் முருகன், காதலி வள்ளி.**

முருகு என்ற மூன்றெழுத்தின் மறுவடிவம் "அன்பு". அவன் ஆன்மாக்களாகிய நம் ஒவ்வொருவரையும் காதலுடன் காத்து ரக்ஷிக்கின்றான். எனவே நாமும் அவன்மீது காதல் கலந்த பக்தி செலுத்த வேண்டியது கடமை. இவை நிற்க, புராணம் கூறும் முருகனின் காதற் கல்யாணம் ரசனைக்குரியது. அவனுக்கு மனைவியர் இருவர். ஆனால் மேற்படி செய்தியின் உண்மை அறிந்தோர் சிலரே

தேவசேனா கிரியா சக்தி, வள்ளி இச்சாசக்தி, வேலாயுதம் ஞானசக்தி. இதுவே உண்மை என்பது உயரிய தத்துவ அறிஞர்களின் கொள்கை. மேலும், சிறப்பாக மேற்படி விடயத்தில் பல நுண்ணிய தத்துவங்களைக் காணலாம்.

தேவசேனா விண்ணுலகில் பிறந்து விண்ணுலகில் வளர்ந்தவள். தேவராசன் திருமகள். அவளைக் கற்பு முறையில் திருமணம் செய்தான் முருகன். அவள் இறைவனின் இடப்பாகத்தில் விளங்கிப் பக்தர்களுக்கு விண்ணகவரசாகிய பரலோக

சுகத்தைத் தருகிறாள். வள்ளியோ மண்ணுலகில் பிறந்து வளர்ந்தவள். வேடுவ அரசனான நம்பிராசன் மகள். அவளைக் களவு முறையில் காந்தர்வமணம் செய்தான் கந்தன். அவள் காதலன் குமரனின் வலப்புறம் விளங்கி இகவுலக சுகமாகிய மண்ணுலக இன்பம் தருகிறாள்.

இவற்றுக்கப்பால் முருகனின் இவ்விரு தேவியருடே சமத்துவமும் அறியலாம். ஒருத்தி மனிதஜாதியினும் மேம்பட்ட தேவர்களுக்கும் அரசனான இந்திரனின் மகள் தேவசேனா. மற்றவளோ மனிதருள்ளும் சாதி, குலத்தால் ஒடுக்கப்பட்ட வேடுவப்பெண். தமிழ்மகள், வள்ளி இருவரும் இறைவன் முன்றலில் சமமே ஆயினும் வள்ளி நாச்சியாரே பலவிடத்தும் முதன்மையாகின்றார். இது தமிழருக்குக் கிடைத்த நன்மரியாதையே. இன்னொரு புறம் சாதி ஒழிப்பையும் காணலாம். மேலும் வள்ளியை "விஷ்ணு புத்திரி" என்பர். ஆக, சைவசமயக் கடவுளான சிவனின் புதல்வன் முருகன் வைஷ்ணவ சமயத் தெய்வமான விஷ்ணுவின் புதல்வியைத் திருமணம் செய்தான். இது சமய ஒற்றுமை. இங்கு ஆரிய- திராவிட இன ஒற்றுமையும் உண்டு. ஆக,

சாதி, மத, இன, மொழி பேதங்களுக்கு அப்பாற்பட்டவன் முருகன். இதை வெளிப்படுத்தும் நூல் கந்தபுராணம். யாழ்ப்பாணத்துச் சைவ மக்களின் உயிர்நாடி இப்புராணம். எனவே நல்லுணர்வுடன் தெளிந்த சிந்தையுடன் கந்தபுராணம் பாராயணம் செய்து இக, பர, சுகம் பெறுவோம். கந்தனடிகளுக்கும் அவனடியாருக்கும் கச்சியப்பச் சிவாச்சாரிய சுவாமிகளுக்கும் பலநூறு வணக்கங்கள் செலுத்துவோம்.

"வேலும் மயிலும் வேலனும் துணை"

---

இளம்பெண் ஒருத்தி வீதியில் தனியாக இருக்கிறாள். முரட்டுக்காளை ஒன்று அவளைநோக்கிப் பாய்ந்தோடி வருகிறது. தன் உயிருக்குப் பயந்து மானைப்போல அவள் துள்ளி ஓடிவிடுகிறாள். அதே பெண் தெருவில் விளையாடிக் கொண்டிருக்கும் அவள் குழந்தையை நோக்கி அந்த முரட்டுக்காளை ஓடிவருமானால், அந்தப் பெண்ணுக்குத் தன் உயிரைப்பற்றி சிறிதளவும் பயமிருக்காது. குழந்தையின் உயிரைக் காப்பது ஒன்றே அவள் மனம் முழுவதும் இருக்கும். தாய்மை உணர்வு மேலோங்கி முரட்டுக்காளையை துணிவுடன் வழிமறித்து எதிர்ப்பாள். இதுவே தூய அன்பு. எங்கே உண்மையான அன்பு இருக்கிறதோ அங்கே தன்னலமற்ற பெருந்தன்மை இருக்கிறது. பிரதிபலனை எதிர்பார்ப்பதில்லை. பயம் என்ற பேச்சும் அங்கே இல்லை.

---

இறைவனிடம் யார் எதை விரும்புகிறார்களோ அதைப் பெறுகிறார்கள். இறைவன் கற்பகமரம் போன்றவன். எவன் எதை விரும்புகிறானோ, அதை அவன் இறைவனிடமிருந்து பெறுகிறான்.

இறைவன் நமது எண்ணங்களை மட்டுமே பார்க்கிறான். ஒருவனின் எண்ணம் எப்படியோ, அப்படியே இறைவனும் அவனுக்கு அருள் புரிகிறான்.

நல்ல செயல்களில் துணிவுடையோர் நாள்தோறும் வெற்றியே காண்பர்.

உ

(தொடர்ச்சி..

# சைவக்கிரியைகள்

தமிழ்ஞான வித்தகர் பொன். சுகந்தன் அவர்கள்

### உபநிஷ்கிரமணம்

உபநிஷ்கிரமணம் என்பது வீட்டு எல்லைக்கு வெளியே குழந்தையைக் கொண்டுசெல்லல் எனும் பொருள்படும். இதற்கும் விக்னேஸ்வர பூசையும் சிவாக்கினி நிகழ்வும் உண்டு.

வீட்டின் முற்றத்தில் உள்ள மணல் மேடையில் அரசிலையினை வைத்து உருத்திராதித்தனைப் பூசித்தல் வேண்டும். இவற்றின் பிற்பாடு மங்களகரமான முறையிலே குழந்தையைக் கோவிலுக்குக் கொண்டு போதல் வேண்டும். தாய்மாமனே கோவிலுக்குக் கொண்டு செல்வார். ஆலயத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட குழந்தையினை நந்திக்குப் பின்னே வைத்து வழிபட்டுக்கொண்டு வீட்டுக்குத் திரும்பி திருஷ்டி தோஷம் போன்றவற்றை நீக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

இக்கிரியை முறையானது இன்றும் நம்மவர்கள் நலமாகக் கடைப்பிடிப்பதனைக் காணமுடிகின்றது. இந்நிகழ்வானது இன்றும் குறைந்துபோகவில்லை என்பதற்கு ஊர்களில் நிகழும் இந்நிகழ்வு கட்டியங்கூறும்.

### அன்னப்பிராசனம்

அன்னப்பிராசனம் என்றால் முதன் முதலாகச் சோறு ஊட்டுதல் என்பதாம். முப்பதுநாள் ஒரு மாதமாகக் கணக்கிட்டு வரும் ஆறாம் மாதம் முதல் இரட்டை மாதங்களில் ஒன்றில் ஆண் குழந்தைக்கும் ஐந்தாம் மாதம் முதல் வரும் ஒற்றை மாதங்களில் ஒன்றில் பெண் குழந்தைக்கும் அன்னப்பிராசனம் நடைபெறும்.

விக்னேஸ்வர பூசை, சிவாக்கினி காரியம், நவக்கிரகபூசை இக்கிரியைகளின் போது நடைபெறும். அக்கினிமுன் கிழக்குப்பக்கமாக குழந்தையை அமர்த்தி நெய் கலந்த பாயசத்தை சிவாக்கினியில் ஓமஞ் செய்து சிவபீஜ மந்திரத்தால் அப் பாயசத்தையே குழந்தைக்கு ஊட்டுவது இதன் முறையாக உள்ளது. அதன் பிற்பாடு பூர்ணாகுதியும் குழந்தைக்கு விபூதி சாத்துதலும் ஆசீர்வாதமும் நடைபெறும். பெண் குழந்தையாக இருந்தால் அக்கினிகாரியம் வேண்டியதில்லை.

இவ்வாறாகவே அன்னப்பிராசனம் என்னும் முதன்முதலாகச் சோறு ஊட்டப்படும் கிரியை முறையானது நிகழ்கின்றது. இந்நிகழ்வானது பெரிய மாறுபாடுகள் இல்லாமலும் குறைவு இல்லாமலும் நிகழ்வதனை நம் சமூகங்களில் காணக்கூடியதாக உள்ளது.

### பிண்டவர்த்தனம்

பிண்டவர்த்தனம் என்னும் கிரியையானது உடல் வளர்ச்சியினை நோக்கமாகக் கொண்டு செய்யப்படும் கிரியையாக அமைகின்றது.

பிண்டம் என்றால் உடல் என்றும் வர்த்தனம் என்றால் விருத்தி என்றும் பொருள்படும். இக்கிரியையிலும் விக்னேஸ்வரபூசையும் சிவாக்கினி காரியமும் இடம் பெறுகின்றன. இந்தக் கிரியையானது அன்னப்பிராசனத்திற்குப் பிற்பாடு ஒரு சுபதினத்தில் நிகழும்.

மதுவர்க்கம் எனப்படும் தேன், நெய், நீர், பால் போன்ற நான்கும் கலந்த

பானத்தை வலக்காதிலே வியோமவியாபி மந்திரத்தை ஓதி பருக்குவார்கள். இது ஆண்குழந்தைக்கே நடைபெறுகின்றது. ஏனெனில் ஆண்கள் வீரர்களாகக் கருதப் பட்டனர். அவ்வாறான வீரத் தன்மைக்கு உடல் வளர்ச்சியானது இன்றியமையாத தொன்றாகக் காணப்படுவதன் காரணத்தி னாலும், உழைத்து அவர்களே தன்னைச் சார்ந்துள்ளவர்களை உயர்த்த வேண்டி யுள்ளதாலும் உடல் வளர்ச்சி ஆண்பிள் ளைக்கு இன்றியமையாததாய் அமைவத னாலாம்.

**சௌளம்**

சௌளம் என்றால் குடுமி வைத் தல் எனப்பொருள்படும். அதாவது தலை மயிரைக் குடுமி முடிவதற்கு ஏற்றபடி வளர்க்கும் பொருட்டுத் தலையின் முன் பகுதி மயிரை வழித்தல் சௌளக் கிரியை முறை என அழைக்கப்படுகின்றது. இக் கிரியையின்போது முன்னைய கிரியையைப் போலவே விக்னேஸ்வர பூசையும் சிவாக் கினி காரியமும் உண்டு.

சிவாக்கினி அருகே குழந்தையை அமர்த்தி அரஹர ஒலியுடன் அறுகரிசி யிட்டு, இள வெந்நீரில் தருப்பையைத் தோய்த்து மயிரில் தெளித்து நனைத்து மந்திர சகிதமாகக் குரு அல்லது தந்தை மயிர் வழித்தலை ஆரம்பித்து விடுவார். அவ்வாறாக வழித்தெடுக்கும் தலைமயிரை தாய் பக்கத்திலே நின்று சாணம் கரைத்த நீரைக்கொண்ட பாத்திரத்திலே பெற்றுக் கொள்வார். பிற்பாடு மீதிப்பாகமானது நாவி தனால் முறையாகச் சவரஞ்செய்யப்படும். குழந்தையானது பிறந்து மூன்றாம் வய திலே இக்கிரியையானது செய்வது சிறப் பானது. அவ்வாறாக இப்போது கடைப்பிடிக் கப்படுவதும் அருகிக்கொண்டு வருகின்றது.

**வித்தியாரம்பம்**

வித்தியாரம்பம் என்றால் கல்வி பயிலத்தொடங்குதல் என்பது பொருளாக வுள்ளது. இந்த வித்தியாரம்ப நிகழ்வானது அறிவு அனுபவம் ஒழுக்கம் மிக்க ஆசாரியர்கள் ஆசிரியர்கள் மத்தியிலே இடம்பெறும். அனேகமாக இன்று பாட சாலைகளிலே வித்தியாரம்பம் நடைபெறு வது குறிப்பிடத்தக்கது.

இந்த வித்தியாரம்பக் கிரியை யானது. ஐந்து வயதிலே நடைபெறும். இதற்குச் சிறந்த காலமாக உத்தராயணக் காலத்தினைக் கொள்ளமுடிகின்றது. சுப வேளையிலே விக்னேஸ்வர பூசை மற்றும் சரஸ்வதி பூசை என்பன செய்து நிகழ்த் தப்பட வேண்டிய கிரியையாகும். இதன் பிற்பாடே வித்தியாரம்பம் செய்யப்படுதல் வேண்டும்.

எனவே இந்த வித்தியாரம்ப நிகழ்வு தனிச்சிறப்பு வாய்ந்ததாக அன்றும் இருந்து வந்ததுபோலவே இன்றும் அதன் கிரியைகளில் எதுவித மாற்றமும் இல்லாமல் அதே சிறப்போடு சைவ சமய மக்களால் மிகுந்த அக்கறையோடு கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற கிரியையாக இது அமைகின்றது.

**உபநயனம்**

பிள்ளைக்குச் சமய ஒழுக்க அதிகாரங்களை வழங்குதல் இதன் நோக்கமாகக் காணப்படுகின்றது. இக்கிரியையிலும் விக்னேஸ்வர பூசையும் சிவாக்கினி காரியமும் இடம்பெறும். பிள்ளையின் உடலில் தொப்பூழிலிருந்து தோள் வரை குறுக்காக அமையும்படி பூணூல் தரிக்கப்படும். இவ்வாறாக இந்தப் பூணூலைத் தரிக்கின்ற தகுதிப்பாட்டினைக் கொண்டிராதவர்கள் சமயக் கிரியைக்

பெரிதும் அமைதி நிறைந்த வாழ்வே மகிழ்ச்சியான வாழ்வாகும்.

காலங்களிலாவது தரித்துக்கொள்ளல் வேண்டும்.

அதுமட்டுமன்றி சவரஞ்செய்து ஸ்நானம் செய்து முடித்த பிள்ளையை சிவாக்கினிக்கு அருகில் அமர்த்தி வடக்குமுகமாக அப்பிள்ளையை இருத்தி முஞ்சிற்புற் கயிற்றை அரையிலே கட்டி மான்தோல் துண்டொன்றினைக் கோத்த பூணூலினை அணிந்து தோள்வேஷ்டி, தண்டம், பவித்திரம் யாவும் கொடுத்து பஞ்சகவ்வியம் பருகுவித்து பிரம மந்திரங்களால் ஓமஞ் செய்யப்படுகின்ற கிரியை முறையே இதுவாகும்.

இது அறிவுக்கண்ணைத் திறக்கும் சமயக் கிரியையாக அமைவதன் காரணத்தால் முக்கியத்துவம் பெறுகின்றது.

**காண்டோப கரணம்**

காண்டரிஷிகளைத் திருப்தி செய்தலே காண்டோப கரணம். காண்ட ரிஷிகள் என்பவர்கள் படைப்பிலுள்ள ரிஷிகள் தொகையில் பத்து வகை உண்டு. அவ்வாறான பத்துவகைகளுள் ஒரு வகையாகவே இந்தக் காண்ட ரிஷிகள் காணப்படுகின்றார்கள். இவ் ரிஷிகள் மகிமையும் சிறப்பும் வாய்ந்தவர்கள்.

இந்தக் காண்ட ரிஷிகள்தான் வேதாகமங்களின் மந்திரப் பகுதிகளுக்கு அதிபர்களாக இருக்கும் ஆற்றல் கொண்டவர்கள் அத்தோடு இந்த வேதாகமங்களை விளக்குகின்ற பொறுப்பு வாய்ந்தவர்களாகவும் காணப்படுகின்றனர். எனவேதான் இவ்வாறான சிறப்பும் முக்கியத்துவமும் வாய்க்கப்பெற்ற இவர்களைத் திருப்திப்படுத்தும் பொருட்டே அஸ்திர மந்திரத்தால் ஓமஞ்செய்யப்படும். அதன் பிற்பாடு பிரமகாயத்திரியையும் சிவகாயத்திரியையும் உச்சரித்து எவ்வெட்டு ஆகுதி செய்யப்படும். ஆகுதியின் முடிவினிலே அந்த மந்திரங்கள் சம்பந்தப்பட்ட பிள்ளைகளுக்கு உபதேசிக்கப்படும். இது உபநயனத்தைத் .தொடர்ந்து மூன்று நாட்கள் அநுஷ்டிக்கப்படுகின்றது.

எனவேதான் காண்டோபகரணம் என்னும் கிரியையும் முக்கியத்துவம் பெறுகின்றது.

**காண்டமோசனம்**

காண்டமோசனம் என்பது காண்டோபகரண நிறைவேற்றத்தினைக் குறிப்பதாகவுள்ளது. மோசனம் என்பதன் பொருள் விடுதல் என்பதாகும். அதாவது சிறப்பாகத் தொடங்கப்பட்ட இவ்விரதமானது நான்காம் நாள் சிவாக்கினியிலே நூற்றெட்டு ஆகுதி செய்து விரதத்தினை முடித்துக்கொள்வர். அதாவது விரதம் விடப்படும்.

இவ்விரதமான காண்டமோசன விரதம் காண்டோபகரண விரதமானது முடிவிலே நிகழ்கின்றது. காண்டமோசனத்திலிருந்து பிள்ளைக்குப் பிரம்மச்சாரிய விரதமானது ஆரம்பமாகின்றது. பிரம்மச்சாரிய விரதத்துடனேயே சிவபூசையானது செய்கின்ற பயிற்சியும் தொடங்குகின்றது. இவற்றை உரிய முறையின்படி நிறைவேற்றிய பிற்பாடுதான் பிரம்மச்சாரிய விரதத்தினைக் காப்பவர்களுக்கு வேத சிவாகமங்களை ஓதுகின்ற தகுதியானது ஏற்படுகின்றது. எனவேதான் இந்தப் படிநிலைகளையும் கிரியைகளையும் தவறாது காத்துவருகின்ற வேளையில் தான் நலமான வாழ்வு கிட்டும் என்று இதனை மறந்ததாலே அழிவுகள்தான் மிச்சமாக உள்ளன.

(தொடரும்...

உ

# இன்னமும் சின்னவன் தானோ?

## திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள்

தன்னிகரில்லாத் தலைவனாகிய எம்பெருமான் அண்டங்கள் அனைத்தையும் படைத்தும் காத்தும் கரந்தும் விளையாடும் பரமன், வைகாசி விசாக நன்னாளில் ஆறுமுகம்கொண்டு பாலனானான். தேவர் சிறைமீட்ட செல்வன், கலியுகவரதனாம் முருகன், தேவசேனாதிபதியாகி, அசுரர் குலத்தை வென்று, தேவர்களுக்கு வாழ் வளித்து, எல்லோர்க்கும் இன்றும் வேண் டும் வரங்கள் அளித்து அருளாட்சி புரி கிறான். முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் செவ்வேட்பெருமான் கோயில் கொண்டுள்ள முக்கிய தலங்கள் ஆறுபடை வீடுகள் எனப்படும். இரண்டாவது படை வீடாகிய திருச்செந்தூர் சிறப்பும், புனிதமும், செல்வமும், முத்தியும் அருளவல்ல ஸ்தலம். செந்திற்குமரனது இளமையை யும், அழகையும், பொலிவையும் வியந்து பாராட்டாத புலவர்களேயில்லை. ஆதி சங்கரர் நோயின் வேதனை தாங்காது ஸ்ரீ சுப்பிரமணிய புஜங்கஸ் தோத்திரம்பாடி நோய் நீங்கப் பெற்றார். ஊமைப்பிள்ளை யாக இருந்த குமரகுருபரர் முருகன் அரு ளால் கந்தர்கலிவெண்பா பாடினார். பகழிக் கூத்தர் சூலைநோயால் வருந்தி ஒருகோடி முத்தம் தெள்ளிக்கொழிக்கும் செந்தில் மாநகரையடைந்து உள்ளம் உருகிய வேளை “திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்” எழுகிறது. பொல்லாத சூலை நோய் நில்லாது செல்கிறது. விஸ்வாமித்திரரின் குன்மநோய் விபூதி அணிந்து மகிழ நீங்குகிறது. அருணகிரிநாதர், நக்கீரர், தேவராய சுவாமிகள், வென்றிமலைக் கவிராயர் முருகனைப் பாடிப் பணிந் துள்ளனர். இப்படி எத்தனை எத்தனை அற்புதங்கள் என் ஐயனின் ஆலயத்தில் நிகழ்ந்துள்ளன.

கந்தவேளின் கருணையையும், அவன் அடியார்களின் தேனூறு சொல் லுக்கு வாயூறி நின்றதையும் நன்குணர்ந்த படிக்காசுத் தம்பிரான் என்ற புலவர் செந்தில் வேலவனைக் காண வருகிறார். புலவர் என்றாலே வறுமையைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. சேர்ந்தே இருப் பது வறுமையும், புலமையும். சங்கத் தமிழின் தலைமைப் புலவனை, ஞான பண்டித சாமியைப் பாடித் தன் வறுமை யைப் போக்க நினைக்கிறார். செந்தில் முருகனின் திருக்கோலக்காட்சியைக் காண்கிறார்.

கன்னியர் இருவருடன் மாமயிலேறி விளையாடும் மாலோன் மருகனைக் காண்கிறார். என் துயரினைப்போக்க வேலேந்தி வீறுடன் நிற்கும் இவன் என்ன சின்னப்பிள்ளையா? ஒன்றும் தெரியாத பாலகனா? உமாதேவியார் தன் மடி மேலிருத்தி அமுதூட்டி, கண்களுக்கு மையிட்டு, நெற்றியிலே பொட்டிட்டு, ஒப்பு வமையில்லா அழகுக்கு அழகுபார்த்துக் கன்னத்திலே முத்தமிட்டாள். அதெல்லாம் அந்தக் காலம். குழந்தை வடிவேலனின் சிங்கார விளையாட்டுக்களை எல்லாம் பார்த்துப் பரவசமாகி மகிழ்ந்தகாலம்- தாயோடு விளையாடும் இந்தக் குழந் தைக்கு என் வறுமைத் துயரைப் போக்க முடியுமா? நான் சொன்னாலும் இச்சின்னக்

குழந்தைக்கு விளங்குமா? என்று முன்பெல்லாம் என் குறையைச் சொல்லாமல் விட்டுவிட்டேன். ஆனால் இப்போது அன்னம் போலும், மயில்போலும் சாயலுடைய அழகிய ஒன்றுக்கு இரண்டு மனைவியர். இரண்டு பெண்டாட்டிக்காரன். இரண்டு பெண்டாட்டிக்காரன் என்றால் துன்பத்திற்குச் சொல்ல வேண்டுமா? இவனுக்கு என் துன்பம் தெரியாமல் இருக்குமா? இரண்டு பெண்கொண்ட ஆண்பிள்ளை, இன்னமும் சின்னவன் தானா? பாடுகிறார்.

"முன்னம் நின் அன்னை அமுதூட்டி மையிட்டு முத்தமிட்டுக்
கன்னமும் கிள்ளிய நாளல்லவே என்னைக் காத்தளிக்க
அன்னமும் மஞ்சையும் போல் இரு பெண் கொண்ட ஆண்பிள்ளைநீ
இன்னமும் சின்னவன் தானோ செந்தூரில் இருப்பவனே"

படிக்காசுப் புலவரைப்போல நாமும் நம்முடைய கஷ்டங்களை துயரங்களை முறையிட்டு அழுதால் தயாநிதியாகிய முருகன் தீர்த்தருள்வான்.

ஞானத்தாயாகிய ஔவைப் பாட்டியும், ஞானபண்டிதனான தமிழ்க் குழவியும் ஒருநாள் சந்திக்க நேர்ந்தது. நானிலம் முழுவதும் நடந்து சுற்றித் தமிழ் பயிர் செய்துவரும் ஔவையார் ஒருநாள் கடும் வெயிலில் பசி தாகம் மேலிட நடந்து நடந்து அயர்ந்துவிட்டார். களைப்புநீங்குதற்குப் பாதையிலே நின்ற நாவல்மர நிழலிலே "முருகா" என்று கூறிக்கொண்டே அமர்ந்துவிட்டார். சற்று களைப்பு நீங்க மேலே அண்ணாந்து பார்த்தார். சிறுவன் ஒருவன் மாடுமேய்க்கும் கோலுடன் மரத்தின் மீது அமர்ந்திருந்தான். சிறுவன் அழகு ஒழுகும் ஓவியுமாக இருக்கிறான். அவன் "பாட்டீ! உமக்கு என்ன வேண்டும்?" என்றான். குழந்தாய்! பசி காதை அடைக்கிறது. கொஞ்சம் நாவற்பழத்தைப் பறித்துப் போடுவாயா? என்றார். சிறுவன், "சுட்டபழம் வேண்டுமா? சுடாதபழம் வேண்டுமா?" என்று கேட்டான். பலநூல்கள் கற்ற அறிவும், உலகெலாம் சுற்றிப் பெற்ற அறிவும் கொண்ட ஔவையார் ஒரு கணம் திகைத்துவிட்டார். நாவற்பழத்தில் சுட்டதும், சுடாததும் ஏது? இதுவரை நான் கேள்விப் பட்டதில்லையே இந்தச் சிறுவனிடம் அது என்ன என்று கேட்கக்கூடாது என்று சிந்தித்து, "அப்பா! சுட்டபழம் போடு" என்றார்.

சிறுவனும் நல்லது என்று புன்னகைபூத்தவண்ணம் நன்றாகக் கனிந்திருந்த பழங்களைப் பறித்து மணலில் எறிந்தான். "பாட்டீ! சுட்டபழம் எறிந்துள்ளேன். எடுத்துக்கொள்" என்றான். கனிந்த பழங்களில் மணல்துகள்கள் ஒட்டிக்கொண்டமையால் ஒவ்வொன்றாக எடுத்து வேகமாக ஊதி, ஊதி உண்ணலானார். மரத்தின் மேலிருந்த பையன், "பாட்டீ! பழங்கள் ரொம்பவும் சுடுகின்றனவா? பாவம்! பார்த்து நன்றாக ஊதி ஊதி உண்ணுக" என்றான். சட்டென்று மேலே பார்த்த ஔவையாருக்கு உலகமே சுற்றுவது போலிருந்தது. "சுட்டபழம்" என்ற சொல்லின் மர்மம் புலனாயிற்று. கையில் எடுத்த பழம் கையிலேயே நின்றுவிட்டது. பசி, தாகம் பறந்துவிட்டது. நாணமும், மானமும் வந்து உள்ளத்தை வருத்தின. புலவர்கள் எல்லோரையும் ஒரு கணத்தில் வென்று, வெற்றிமாலை சூடி வீறுகொண்ட நான், மாடு மேய்க்கும் இப்பாலகனிடம் தோற்றேனே! "கருங்காலிக் கட்டைக்கு

வைராக்கியம் கைவரப்பெற்றால் அற்ப ஆசைகள் குறையும்.

நாணாத கோடரி கதலித் தண்டுக்கு நாணும்" என்று கலங்கி நின்றார்.

உடனே பலகோடி தண்ணிலவு போல் பன்னிருகைப் பரமன் மாட்சிமை யுடைய கிழவிக்குக் காட்சி கொடுத்தான். தேவரும், மூவரும் காணாத தேவதேவனை, ஆறுமுகப் பூங்கொத்தைக் கண்குளிரக் கண்டார். முருகா! குமரா! மூவர் முதல்வா! செந்தமிழ்க் கடவுளே! வேலனே! செந்தமிழ் வித்தகா! என்னையும் ஒரு பொருளாகக் கருதி எழிற்காட்சி தந்த எந்தையே! உன்னிடம் நான் தோற்றது எனக்குப் பெருமையே! " கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு" என்ற உண்மையை உணர்த்திய உமைபாலனே! உனைநான் மனம், மொழி, மெய்யால் வணங்குகின்றேன் என்று கண்ணீர் மல்க உள்ளம் கசிந்து கைகூப்பி நின்றார். அறிவுக்கும், அடக்கத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்கும் ஔவையாருக்கும், ஞானக்களஞ்சியமான முருகனுக்கும் உரையாடல் நடக்கிறது. இனியது எது? கொடியது எது? அரியது எது? பெரியது எது? என முருகன் வினவ, ஔவையாரும் தனக்கேயுரிய எளிய இனிய தமிழில் விடை கூறினார்.

ஔவையாரிடம் இன்னமும் சின்னவனாகிய லீலாவிநோதன் ஓர் நாடகம் நடாத்தி நமக்கெல்லாம் நல்லதோர் உண்மையை விளக்கியுள்ளான். இன்றும் அந்தவேலேந்திய பாலகன் எத்தனையோ திருவிளையாடல்களைத் தனது அடியார்களுக்கு நிகழ்த்தியுள்ளான்.

சிவனாரின் சின்னப்பிள்ளை, திருச்செந்தூரின் கடலோரம் நிற்கும் பிள்ளை, உமையவளின் மடியினிலே தவழ்ந்த பிள்ளை, மாயவன் கொஞ்சி மகிழ்ந்த பிள்ளை, மயிலேறி விளையாடும் பிள்ளை, அன்பர் மனத்திலே ஆனந்த நர்த்தனம் புரியும் பிள்ளை, பழனிக்குன்றிலே நிற்கும் சின்னக் குழந்தையின் சேவடி போற்றி, மனம் மொழி மெய்யால் வணங்கி இன்னமும் சின்னவனாகிய திருச்செந்தூரிற் சுந்தரனின் அருள் பெறுவோமாக.

## பொற்பாத கமலம்

பித்தனாய்ப் பாடிப்பரவினாலும் என்னறிவிற்
பற்றுதல் கொண்டேன் அதனால்
முக்தியின் இன்பத்தை யெனக் குணர்த்தி முருகன்
யாமிருக்கப் பயமே னென்றான்
சித்தனாய்ச் சிந்திக்கப் புரிந்தது எல்லாம்
விஞ்ஞானம் கடந்த மெய்ஞ்ஞானமே யென்று
இத்தனைக்கும் மையமாய் நிற்கும் அறிவையும்
அருளையும் தந்தவன் நீயே இறைவா
எத்தனை பிறவிகள் பல்லாண்டு பல்லாண்டாய்க்
கடந்து வழிவழி வந்திடினும் ஈற்றில்
சத்திய வடிவேயான சந்நிதியான்
பொற்பதக்கமலம் கண்டுணர்ந்து வீடுற்றேன்.

*இராம. ஜெயபாலன் அவர்கள்*

**எல்லாம் கடவுள் செயல் என்று அறிந்தால் துன்பமுமில்லை கவலையுமில்லை.**

உ

# வாழ்க்கையில் வெற்றியை நோக்கி நடைபோடுவோம்...!

மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் அவர்கள்

**இலட்சியத்தை அடைய வேண்டுமானால் கடினமாக உழைக்க வேண்டும்**

சுலபமாக ஒருவன் செல்வத்தையும் புகழையும் அடைய முடியாது. அயராத உழைப்பு ஒன்றின் துணைகொண்டுதான் ஒருவன் பலபுதுமைகளைக் கண்டுபிடிக்க முடியும். மற்றவர்களுடைய உழைப்பைவிட எவனுடைய உழைப்புச் சிறந்ததாக இருக்கிறதோ அவனுக்குத்தான் புகழும், பெரிய பதவியும் கிட்டும்.

வாழ்க்கையில் பல புதுமையைக் கண்டுபிடித்த பெரியவர்களின் வாழ்க்கையை ஊன்றிக் கவனித்தால் அவர்கள் அனைவரும் இரவும் பகலும் தம் இலட்சியத்தை அடைவதற்காகக் கடினமாக உழைத்தவர்களாகத்தாம் இருப்பார்கள். ஒரு சமயம் புகழ்பெற்ற ஓர் ஆராய்ச்சியாளரிடம் வெற்றிக்கு இட்டுச்செல்லும் வழிகளைப் பற்றிக் கூறும்படி சிலர் கேட்டார்கள். அதற்கு அவர் வெற்றிக்கு அழைத்துச்செல்ல மூன்று வழிகள்தான் இருக்கின்றன. அவைகளின் பெயர்கள் **உழைப்பு, உழைப்பு, உழைப்பு** என்று பதில் கூறினார்.

**அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும்**

எருது கூடத்தான் இரவும் பகலும் உழைக்கிறது. ஆனால் அதற்குப் புகழும் செல்வமும் கிடைத்துவிடுவதில்லை. ஒருவன் விறகு வெட்டுகிறான், கடினமாக உழைக்கிறான். அதே வேலையை அவன் வாழ்நாள் முழுவதும் செய்து வந்தால் அவன் சாதாரண விறகுவெட்டியாகத்தான் வாழவேண்டியிருக்கும்.

விறகுவெட்டியின் உழைப்பில் அறிவு கலந்திருப்பதில்லை. ஆராய்ச்சியாளனுடைய உழைப்பில் அறிவு கலந்திருப்பதால் அவனுக்குப் புகழ் கிட்டுகிறது. உழைப்பில் அறிவு அதிகமாகக் கிடைக்கும். புகழும் அதிகரித்துக்கொண்டே செல்லும். ஒரே வேலையை தினமும் செய்து வருபவன் வாழ்க்கையில் நிச்சயமாக முன்னேற முடியாது. பல புதிய வேலைகளைத் தைரியத்துடன் செய்ய ஆரம்பித்துப் புதிய அனுபவங்களைத் தேடிக்கொள்ள வேண்டும்.

நிறையப் படித்து ஒருவன் தன் அறிவையும் செயல்திறமையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். பல அறிஞர்களுடன் பழகித் தன் அறிவாற்றலை கற்பனையின் தரத்தை- உழைப்பை- உயர்த்திக்கொள்ள வேண்டும். தன் அறிவைக் கூர்மையாக்கிக் கொண்டவனுக்குத்தான் மற்றவர்களுக்குப் புலப்படாத பல புதிய விஷயங்கள் தென்படும்.

**நேரத்தை வீணாக்காமல் அதை நன்றாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்**

வாழ்க்கையில் வெற்றிகண்டவர்கள் நேரத்தின் மகிமையை நன்கு உணர்ந்து கொண்டவர்களாகத்தாம் இருப்பார்கள். கடவுள் அனைவருக்கும் சமமான நேரத்தைத் தான் கொடுத்திருக்கிறார். புத்திசாலி அல்லது பணக்காரன் என்பதற்காகக் கடவுள்

அவர்களுக்கு ஒவ்வொரு நாளிலும் சிலமணி நேரத்தை அதிகமாகக் கொடுத்து விடவில்லை.

சாதாரண மனிதன் தூங்குவதிலும் அரட்டை அடிப்பதிலும் தன் பொன்னான நேரத்தை வீணாக்கிவிடுகிறான். அதற்கு மாறாகப் பெரிய மனிதர்கள் தங்களுடைய உயர்ந்த இலட்சியங்களை அடையும் முயற்சியில் ஒவ்வொரு விநாடியையும் நன்கு உபயோகப்படுத்திக்கொள்வார்கள்.

சொத்துப்போனால் அதை மீண்டும் சம்பாதித்துவிட முடியும். ஆனால், நேரத்தை மீண்டும் மீட்க முடியாது. நேரம் பொன்னைவிட அதிகம் மதிப்பு வாய்ந்தது. நேரத்தை நன்கு பயன்படுத்திக்கொள்பவனாலேதான் மாபெரும் காரியங்களைச் செய்து முடிக்கமுடியும்.

ஒருவன் தன் நேரத்தை, அதிலும் குறிப்பாகத் தன் ஓய்வு நேரத்தை எப்படிப் பயன்படுத்திக்கொள்கிறான் என்பதைப் பொறுத்துத்தான் அவன் வாழ்க்கையில் சாதிப்பவைகள் அமையும்.

**தன்னைத்தானே குறைவாக மதிப்பிட்டுக்கொள்ளக் கூடாது**

"மற்றவர்கள் செய்வதை என்னாலும் செய்துகாட்ட முடியும். மற்றவர்களுக்கு நான் எந்தவிதத்திலும் தாழ்ந்தவன் அல்ல, ஏன், மற்றவர்களைவிட இன்னும் சிறந்த முறையில் கடுமையான காரியங்களை என்னால் சுலபமாகச் செய்யமுடியும்" என்று நம்பிக்கையுடன் செயற்படுபவனுக்குத்தான் வெற்றித்தேவதை மாலை சூட்டுவாள்.

ஒருவன் தனக்குத்தானே நண்பனாகச் செயற்பட வேண்டும். தனக்குத்தானே விரோதியாகச் செயற்படுபவனுக்கு வாழ்க்கையில் எப்படி வெற்றிகிட்ட முடியும்?. நம்பிக்கையுடன் செயற்படாதவர்களுக்கு நிச்சயம் வாழ்க்கையில் ஏமாற்றமும் தோல்வியும்தாம் ஏற்படும்.

**எதிர்ப்புகளைக் கண்டு கலங்கக்கூடாது**

வாழ்க்கையில் முன்னேற ஆசைப்படுபவனுக்கு நிறைய எதிர்ப்புக்களும் ஏமாற்றங்களும் ஏற்படுவது இயற்கை. எதிர்ப்பையும் ஏமாற்றத்தையும் கண்டு பயந்து, முயற்சி செய்வதையே விட்டுவிடுபவன், மற்றவர்கள் சொல்லும் வேலைகளைச் செய்துவரும் சாதாரண ஊழியனாகத்தான் உருவெடுக்கமுடியும். பெரிய வேலைகளைச் செய்துமுடிக்க ஒருவன் நிறையக் கஷ்டப்பட வேண்டியிருக்கும். ஆனால் அதைச் செய்துமுடித்தபின்பு கிடைக்கும் புகழ் தென்றலாக வந்து அவனை மகிழ்விக்கும்.

மற்றவர்கள் மதிக்கும்படி வாழ விரும்புகின்றீர்களா? வாழ்க்கையில் அனைத்தும் பெற்றுச் சீர் சிறப்புடன் வாழ விரும்புகின்றீர்களா? நம்முடைய தாய்நாட்டின் புகழை உலக நாடுகளிடையே பரப்ப ஆசைப்படுகின்றீர்களா?

நீங்கள் வாழ்க்கையில் புதியவைகளைக்கண்டுபிடிக்க விரும்பினால் உபயோகமின்றிக் கழித்த கடந்த காலத்தை மறந்துவிட்டு இந்த விநாடியிலிருந்து பாடுபட்டு உழைக்க ஆரம்பியுங்கள்.

வெற்றிக்குச் செல்லும் வழி மிகவும் சுலபமானது, முதலில் ஓர் இலட்சியத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அடுத்ததாக அதை அடைய ஒரு திட்டத்தை வகுத்துக்கொள்ள வேண்டும். அதன்பிறகு தான் வகுத்த திட்டத்தின்படி இலட்சியத்தை அடைய மிகவும் பாடுபட்டு உழைக்கவேண்டும். இந்த வழிமுறையைப் பின்பற்றுபவர்கள்தான் வெற்றி வீரர்களாக உருவெடுப்பார்கள்.

தயக்கத்தைத் தவிர்த்து- நம்பிக்கையின் துணைக்கொண்டு- உறுதியாக வெற்றியை நோக்கி நடைபோட ஆரம்பியுங்கள். சந்தேகமில்லாமல் நிச்சயம் உங்களுக்கே வெற்றி கிட்டும்.

## உள்ளம் எங்கே அங்கே இறைவன்

உள்ளம் தெளிவடையாத வணிகர் ஒருவர் இருந்தார். அவர் தினமும் இறைவனுக்குத் தாம் பூஜைசெய்வதைப் பெருமையாகச் சொல்லிக்கொள்ளும் தன்மை உடையவர். அவர் ஒருசமயம் தமது பூஜையைப்பற்றி ஒரு துறவியிடம் பெருமையாகக் கூறி, "நான் செய்யும் பூஜையைப் பார்ப்பதற்காக நீங்கள் ஒருநாள் என் வீட்டுக்கு வாருங்கள்" என்று அழைத்தார்.

"என்று முடியுமோ அன்று வருகிறேன்" என்று கூறித் துறவி அந்த வணிகரைத் திருப்பி அனுப்பினார்.

வணிகர் எதிர்பாராத நிலையில் ஒருநாள் துறவி அந்த வணிகரின் வீட்டுப் பூஜைக்குச் சென்றார். வணிகர் அறியாமல் அவருக்குப் பின்னால் அமர்ந்துகொண்டார்.

வணிகர் பூஜை முடித்துப் பின்னால் அமர்ந்திருந்த துறவியைக் கண்டு வியப்பு மிகுதியால், "தாங்கள் எப்பொழுது வந்தீர்கள்? நான் கவனிக்கவில்லையே!" என்று கேட்டார்.

துறவி சிரித்துக்கொண்டே, "நீங்கள் தோட்டத்திலிருந்த வாழைப்பழங்களை எண்ணிக்கொண்டிருந்த போதுதான் வந்தேன்" என்றார்.

வணிகர் திடுக்கிட்டார்; உடனே துறவியின் காலில் விழுந்து தம்மை மன்னிக்கும்படி வேண்டினார். அவர் செய்த தவறு என்ன? துறவி உள்ளே நுழையும் தறுவாயில் தான் வணிகர் தம் வீட்டுத் தோட்டத்தில் உள்ள வாழை மரத்தில் 'எத்தனை பழங்கள் நாளை பூஜைக்குப் பயன்படும்?' என்று நினைத்துக் கொண்டார். கை என்னவோ பூஜை செய்து கொண்டிருந்தது! இத்தகைய பூஜையால் யாருக்கும் எதுவும் பயனில்லை. இப்படிப்பட்ட பூஜையைக் காணத் துறவியை அழைத்தோமே என்று வணிகர் வருந்தித் திருந்தினார்.

*வாரியார் சுவாமிகள்*

*கொடுத்ததை மறப்பதும் பெற்றதை நினைப்பதுமே நட்புக்கு அழகு.*

# 2007ஆம் ஆண்டு உற்சவம் தொடக்கம் நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| ஆ. தியாகராசா | மானிப்பாய் | 1000. 00 |
| நவலிங்கம் குடும்பம் குரும்பகட்டி | புலோலி | 2000. 00 |
| செ. பாலகருணா | சங்கானை | 2000. 00 |
| சோ. பவித்திரன் சாவகச்சேரி வடக்கு | மீசாலை | 5000. 00 |
| திரு தர்மகுலசிங்கம் குடும்பம் | பெருங்குளம் சந்தி சாவகச்சேரி | 1000. 00 |
| து. சாருஜன் | அச்சுவேலி | 2000. 00 |
| இ. சிவயோகநாதன் | சொய்சாபுர மொறட்டுவ | 3000. 00 |
| மு. விசயரெத்தினம் காட்டுப்புலம் | தொண்டைமானாறு | 5000. 00 |
| செல்வன் ச. அபிராம், அர்ஜுன் | கொலண்ட் | 10000. 00 |
| N. கிருபன் | உருத்திராவத்தை மாவத்தை கொழும்பு | 1000. 00 |
| ந. இரட்ணசிங்கம் | ஆனைப்பந்தி 1மூடை அரிசி | 1000. 00 |
| நா. சிவசிதம்பரலிங்கம் இளை. அதிபர் | குப்பிளான் | 5000. 00 |
| திருமதி தவமலர் சுரேந்திரநாதன் | தொண்டைமானாறு | 2000. 00 |
| முத்தையா ஞானவேல் | சுழிபுரம் | 10000. 00 |
| பொன்னையா தர்மராஜசிங்கம் | மைக்கிலியோட் வைத்தியசாலை | 5000. 00 |
| P.T. பாலச்சந்திரன் யாதவன் | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| திரு விசயகுமார் | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| க. சிவகாமசுந்தரி | அல்வாய் மேற்கு திக்கம் | 8000. 00 |
| செ. நவரெத்தினசாமி | கே.கே.எஸ் வீதி வண்ணார்பண்ணை | 5450. 00 |
| பா. ரதிவதனி | தும்பசெட்டி | 20000. 00 |
| கு. சிவபாலராசா | 14, சட்டநாதர்வீதி யாழ்ப்பாணம் | 1000. 00 |
| செ. சிவசுப்பிரமணியம் | மல்லாகம் | 2000. 00 |
| ம. பொன்னம்பலம் | யாமாவளவு தெல்லிப்பளை | 2000. 00 |
| ஜெகநாதன் ஞானசசி | சிறுப்பிட்டி வடக்கு | 3000. 00 |
| சிவசுப்பிரமணியம் அன்னபூரணம் | | 2000. 00 |
| சு. சோமஸ்கந்தமூர்த்தி | கொழும்பு-13 | 1000. 00 |
| இரத்தினம்மா மல்வம் | உடுவில் | 2000. 00 |
| சின்னையா சிவபாதசுந்தரம் | கனடா | 1மூடை அரிசி |
| இராசரெத்தினம் இராசஇராகுலன் | சுண்ணாகம் | 5000. 00 |
| சி. துரைராசாமூலம் செ. முருகேசு குடும்பத்தினர் (கனடா) வல்லைறோட் | தொண்டைமானாறு | 15000. 00 |
| சி. சத்தியமூர்த்தி | வல்வெட்டித்துறை | 2000. 00 |
| சி. வல்லிபுரம் | தும்பளை பருத்தித்துறை | 1000. 00 |

| | | |
|---|---|---|
| ம.சி. இராசநாயகம் | அல்வாய் | 1000. 00 |
| சி. மகாலிங்கம் | கரந்தன் நீர்வேலி | 1மூடை அரிசி |
| தருமகுலசுகதாசன் | புன்னாலைக்கட்டுவன் தெற்கு | 1000. 00 |
| வ. பாலமகேஸ்வரன் | அவுஸ்திரேலியா | 4000. 00 |
| அமரர் பொ. சரவணபவன் நினைவாக | வட்டுக்கோட்டை. | 2000. 00 |
| தனராசாமூலம் வடிவேல் விநோதன் | கனடா | 5000. 00 |
| ஆறுமுகம் சந்திரகுமார் | சிறுப்பிட்டி கிழக்கு | 1000. 00 |
| விக்கினேஸ்வரமூர்த்தி சிந்துஜன் | லண்டன் அச்சுவேலி | 4000. 00 |
| சுதன் கணேசமூர்த்திமூலம் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| த. கணேசமூர்த்தி குடும்பம் (வங்கி) | யாழ்ப்பாணம் | 4000. 00 |
| சிவபூமி அறக்கட்டளை ஆறுதிருமுருகன் மூலம் | | 5000. 00 |
| N. தங்கராசா கல்வியங்காடு | யாழ்ப்பாணம் | 4000. 00 |
| சசிதரன் ஆறுகால்மடம் | ஆனைக்கோட்டை | 3000. 00 |
| ஆ. வாசவன் | உடுப்பிட்டி | 1000. 00 |
| ஆ. பார்த்தீபன் | உடுப்பிட்டி | 1000. 00 |
| தி. தவபாக்கியராசா | அச்சுவேலி (பொருட்கள் வகையில்) | 5000. 00 |
| வே. சிவசீலன் குடும்பம் | கனடா | 4000. 00 |
| தி. தேவானந்தன் | கரவெட்டி | 1000. 00 |
| செ. இராதாகிருஷ்ணன்மூலம் க. பாஸ்கரன் | நவாலி கிழக்கு | 10000. 00 |
| வேலுப்பிள்ளை நகுலேந்திரம் குடும்பம் | அமெரிக்கா | 249 டொலர் |
| மோகன் குடும்பம் இமையாணன் | உடுப்பிட்டி | 5000. 00 |
| S. தர்மலிங்கம்மூலம் திருமதி ஜமுனா வர்ணன் (பிரான்ஸ்) | | 10000. 00 |
| நா. நடராசா புலாலி | மீசாலை கிழக்கு | 1000. 00 |
| சி. வேலும்மயிலும் | வட்டுதெற்கு | 1000. 00 |
| த. கிரிதரன் | பருத்தித்துறை | 2000. 00 |
| ஜென்ஸ் சிவஞானம் | பிரான்ஸ் | 33056. 60 |
| ஜே. இராசரெத்தினம் | கொழும்பு | 1000. 00 |
| இரத்தினேஸ்வரி மகாதேவா | மலேசியா | 14900. 00 |
| திருமதி சின்னையா | கரணவாய் | 5000. 00 |
| மகேந்திரம் தர்ஷினி | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| செல்வி ச. ஸ்ரீரங்கநாயகி தாதி உத்தியோகத்தர் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| அம்பாள் ஸ்ரோர்ஸ் | பருத்தித்துறை | 1மூடை அரிசி |
| பொ. மாணிக்கவாசகர் | நியூசிலாந்து | 5500. 00 |
| சி. சிவரூபன் | இணுவில் மேற்கு | 15000. 00 |
| ந. நக்கீரன் | ஊரெழு | 1000. 00 |
| வ.க. சாம்பசிவம்மூலம் இராமச்சந்திரன் அகிலாபுத்திரி சோனியா | பிரான்ஸ் | 3000. 00 |
| S. சம்பந்தநாதன் | ஊரெழு (லண்டன்) | 1மூடை அரிசி. |

(தொடரும்....

**நாக்கு கத்தியைக் காட்டிலும் ஆழமாகப் பாயும்.**

உ

# முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகளின் 23ஆவது குருபூசை நிகழ்வு

## குருவருளும் என் மனநிறைவும்

"சாமசூரி" திரு சிவ. ஆறுமுகசாமி J.P அவர்கள்



அன்று சந்நிதியானிடம் செல்ல வேண்டும். மோகன் சுவாமிகளும் அவ்விடம் இல்லை என ஓர் உள்ளுணர்வு உந்த நினைத்திருந்தவேளை எதிர்பாராத விதமாக சோதரர் அன்னைதாஸன் அவர்கள் எனது இல்லம்நாடி வந்தார்கள். நாளை சந்நிதியானிடம் போய்வருவோமா என்று கேட்டார்கள். நான் நினைத்ததை அவரிடம் கூற அவர் சொன்ன வார்த்தை என்னை மேலும் எப்படியாவது செல்ல வேண்டும் என்ற ஆவலைத் தூண்டியது. ஆம், அவர் சொன்னார் நாளை மயில்வாகனம் சுவாமிகளின் குருபூசை மோகன் சுவாமிகளும் அவ்விடமில்லை. அவரது வாரிசு (கண்ணன்) செயற்பாடுகளையும் ஒருமுறை பார்த்து வரலாமே என்றார். உண்மையில் அவருக்கும் மயில்வாகனம் சுவாமிகட்கும் இடையேயான தொடர்பை நான் நன்கறிவேன். அதேபோல் என் இளம் வயதில் எனது தாயாருடன் சந்நிதி செல்லும்போது மயில்வாகனம் சுவாமிகளை நன்கறிவேன். எனவே என் மனதில் ஓர் உள்ளுணர்வு உந்த நாங்கள் எப்படியும் போகத்தான் வேண்டும் மாஸ்ரர் என்றேன். (காரணம் அவரின் குருபூசை பலவற்றில் பங்குபற்றியிருந்தாலும் இந்தக் குருபூசை தினம் ஒரு சிறப்பைத் தரும் என்று) சரியாக 08.00 மணிக்கு உரும்பராயில் ஆயத்தமாக இருங்கள் என்று கூறி மறுநாள் போவதற்கு ஆயத்தமானோம்.

காலை 07.55க்கு ஒரு தொலைபேசி அழைப்பு மாஸ்ரரிடம் இருந்து வந்தது. இவர் நேரவிடயத்தில் மிகவும் கண்டிப்பானவர் என்பது எனக்குத் தெரியும். எனவே சரியாக 08.00மணிக்கு அவரின் இல்லத்தை சென்றடைந்தேன். காலதாமதமின்றி புறப்பட்ட மாஸ்ரரிடம் பொன்னாடையை போர்த்திக்கொண்டு வாருங்கோ அது பிரயாணத்திற்கு வசதியாக இருக்கும் என்று கூறியபொழுது எதுவும் வேண்டாம் வாருங்கள் போவோம் என்று கூறி இருவரும் அவரது வண்டியில் பயணத்தைத் தொடர்ந்தோம். வல்லை முனியப்பர்

கோவில்வரை ஒரு தடையுமின்றி வந்து சேர்ந்தோம். எமக்கு வழி திறந்தே இருந்தது. வல்லை முனியப்பரைத் தரிசித்து விட்டு புறப்பட்டோம். வல்லையிலே சோதனைச் சாவடியை நெருங்கியதும் மாஸ்ரர் பொன்னாடையைப் போர்த்திக்கொண்டார். நானும் போர்த்திக்கொண்டேன். எங்களுக்கு ஒரு தடையுமின்றி பதிவுமின்றி நேரே செல்ல அனுமதி கிடைத்தது.

அங்கே சரியாக 09.00மணிக்கு ஆச்சிரம வாசலை அடைந்தோம். சுவாமிகள் எங்களை அன்புடன் வரவேற்கும் இடத்தில் அவரின் வாரிசு எங்களைக் கண்டதும் அதே அன்பு வரவேற்புடன் இரண்டு தேனீர் கொண்டுவந்து கொடுக்கும் படி கூறினார். நாங்கள் கண்ணனின் செயற்பாடுகளை உற்றுநோக்கியபடி இருந்தோம். அவ்வேளை மாஸ்ரர் கண்ணனிடம் சுவாமி யாத்திரைக்குச் சென்றுள்ளபடியால் எப்படி ஆச்சிரம நிலைமை என்று அன்புடன் கேட்டார். அதற்குப் பதில் மட்டுமல்ல செயல்கள் யாவும் வேகமாக முருகன் நடத்திக்கொண்டிருக்கிறான் என்பதுபோல நடவடிக்கைகள் சுட்டிக்காட்டின.

மோகனதாஸ் சுவாமிகள் எப்போதும் ஒழுங்கமைப்பதில் அவருக்கு நிகர் அவர்தான். அதில்ஏதாவது தடங்கல் ஏற்பட்டாலும் அதைப்பற்றி சிந்தியாது எல்லாம் முருகன் பார்த்துக்கொள்வான் இதுவே அவரின் தாரக மந்திரம். யார் வந்தாலும், வராவிட்டாலும் ஆச்சிரமப்பணி தொய்வின்றி நடந்துகொண்டேயிருக்கும். சுவாமிகள் ஆச்சிரமத்தில் இல்லாவிட்டாலும் பணிகள் தங்குதடையின்றி முருகன் அருளால் நடைபெற்றுக்கொண்டேயிருந்தன.

அன்று சுவாமிகளின் குருபூசைத் தினம் பேச்சுக்கோ, பஜனைக்கோ, ஒரு ஒழுங்கும் செய்யப்படவில்லை. எங்களுக்கும் இது தெரியாது. அது முருகனின் திருவருள் கண்ணன் மாஸ்ரரிடம் நீங்கள் தான் இன்று பஜனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அன்னைதாஸனுக்கோ பெரிய ஆனந்தம்.

நாவலர் பெருமான் தென்திசையில் இருந்து வடதிசையைநோக்கி தன்னால் செயற்படுத்திய காரியங்கள் யாவும் சரியாக செயற்படுகின்றதா என்று பார்த்துக் கொண்டிருப்பதுபோல் மோகன் சுவாமியவர்களும் வடதிசையில் இருந்து யாத்திரை செய்துகொண்டே தென்திசையில் உள்ள அவரது சந்நிதியான் ஆச்சிரம செயற்பாடுகளை மானசீகமாக பார்த்துக் கொண்டே செயற்படுவதுபோன்ற எண்ணம் என் மனதில் தோன்றியது. இல்லாவிடில் இந்தக் காரியங்களைச் செயற்படுத்துவதென்பது முடியாத காரியம்.

கண்ணனிடம் பக்கவாத்தியம் ஏதும் இருக்கிறதா என்று கேட்டார். இல்லாவிட்டாலும் பரவாயில்லை பார்ப்போம். நீங்கள் ஆயத்தமாகுங்கள். நாம் முருகனிடம் தரிசிக்கச் சென்றோம். அங்கே மயில்வாகனம் சுவாமிகள் பேரில் நடைபெறும் முருகனின் அபிடேகத்திலும் கலந்துகொள்ளும் தவவாய்ப்பும் பெற்றோம்.

அதேவேளை பஜனைக்கு ஆயத்தம், வருமாறு அழைப்பு வந்தது. மண்டபத்திற்கு வந்தபோது மண்டபம் நிறைந்த அளவான கூட்டம் மோகனதாஸ் சுவாமிகள் நேரில் பாடுவதுபோன்று அவரது கணீர்க்குரலில் ஒலிபெருக்கியும் பாடல்களை ஒலித்துக்கொண்டேயிருந்தது.

அன்னைதாஸனின் பஜனைப்

பாடல் தொடங்கியது. நேரம் மிக முக்கியம் 11.30மணிக்கு தொடங்கியது பஜனைப் பாடல் மேடையில் அவருக்கு உதவியாக ஓர் அம்மையாரும் நானும்.

தனக்கே உரிய பாணியில் ஓங் காரத்துடன் ஆரம்பித்த அவர் பாடக்கூடிய வர்கள் மேடைக்கு வந்து அமர்ந்து பாடும்படி கேட்டுக்கொண்டார். ஒருவர் மட்டுமே வந்தார். அவருக்கும், அம்மை யாருக்கும் இடையிடையே சந்தர்ப்பத்தைக் கொடுத்த அன்னைதாஸன் பிள்ளையார், சிவன், முருகன் என பஜனைப்பாடல் களைப் பாடியதுடன் இடைக்கிடையே தானே றபான் வாசித்து சபையோரும் சேர்ந்து மிகவும் இனிமையாகவும் பொருள் பொதிந்ததுமான உரைகளுடனும், அவரது பாடல்களுடனும் பஜனையை நடாத்தினார். தான் தவத்திரு மயில்வாகனம் சுவாமி களின் கரங்களால் அடிபட்டதையும், தன் குறும்புத்தனத்தையும் இன்று குருவருளும், திருவருளும் தனக்குக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைவதாகவும் கூறினார்கள். உரிய நேரத்தில் கடமையை நிறைவு செய்தார்கள்.

வாழும் காலத்தில் சில பெரி யோரின் அரிய அன்பும் ஆசியும் வாழ்த்தும் நட்பும் கிடைப்பது என்பது அரிது. ஆனால் நான் எதிர்பாராத பல ஆச்சரியமான விடயங்களை அனுபவித்தவன். நினைக் கும்போது நெஞ்சமெலாம் ஆச்சரியத்தில் மூழ்கும். அனுபவித்தவர்கட்குத்தான் அதன் தன்மை புரியும். ஆடம்பரமற்ற, அமைதி யின் செயற்பாட்டை விரும்பும் என் அன் பிற்கும் வணக்கத்திற்கும் உரிய சுவாமி களின் ஒவ்வொரு செயற்பாட்டையும், அவரின் தனித்தன்மையையும் அன்பையும் எல்லோராலும் புரிந்துகொள்ளமுடியாது. அவர் சுவாமி விவேகானந்தர் போன்ற ஒரு புரட்சித் துறவி, மனிதநேய வள்ளல், இவர் இந்தியத் தலயாத்திரையை 45நாட்கள் மேற்கொண்டுவந்தார். (தென்இந்தியாவில் இருந்து வடஇந்தியாவரை) ஆனால் அவரின் பணிகளில் ஒரு குறையும் இல்லை. வாரிசு நிறைவு செய்துவிட்டார். சுவாமியவர்கள் இந்திய தலயாத்திரை சென்ற செய்திகூட அநேகருக்குத் தெரி யாது. அப்படி அமைதியாகச்சென்று இறை யருளைப்பெற்று வந்த அந்த மகான் டில்லி யில் இருந்து என்னுடன் தொலைபேசியில் உரையாடும்போதுகூட இறைதியானத் தோடு ஆச்சிரமப்பணி, மக்கள்பணி என்ற பேச்சையே கேட்கக்கூடியதாக இருந்தது. இந்தியத் தலயாத்திரையின்போது இடைக் கிடை தொடர்புகொண்ட செயற்பாட்டின் மூலம் நான்பெற்ற இந்த இன்ப மகிழ்ச் சியை எப்படி உரைப்பது முருகன் திரு வருளே திருவருள்.

சுவாமிகளின் திருத்தல யாத்திரை "ஞானச்சுடர்" வாயிலாக வர முருகன் அருள்புரிய வேண்டும் என்பது எனது பேராவல்.

அற்பமான பொருள் என்றாலும், ஒன்று திரண்டால் எந்தக் காரியத்தையும் நிறைவேற்ற முடியும்.

சாதாரண புற்கள் கயிறாகத் திரிக்கப்பட்டால், மதம் கொண்ட யானையையும் கட்டும் வலிமையைப்பெறுகின்றன.

தூய்மையான உள்ளத்தின் அடிவாரத்திலிருந்து எழுவதுதான் ஒழுங்குமுறை.

# ஔவையார் அருளிச் செய்த ஆத்திசூடி

## மூலமும் உரையும்

*17. ஞயம்பட உரை*

ப-ரை. ஞயம்பட- (பேசுஞ் சொல்லிலே) இன்பம் விளையும்படி, உரை- நீ பேசு. நயம் என்பது ஞயம் எனப் போலியாயிற்று.

*18. இடம்பட வீடு எடேல்*

ப-ரை. இடம்- இடமானது, பட- (அளவுக்கு மேற்பட்டு வெறுமையாய்க்) கிடக்கும்படி, வீடு- வீட்டை, எடேல்- (நீ பெரிதாகக்) கட்டாதே.

*19. இணக்கம் அறிந்து இணங்கு*

ப-ரை. இணக்கம்- (சினேகத்துக்கு ஏதுவாகிய) நற்குண- நற்செய்கைகளை, அறிந்து- தெளிந்து, இணங்கு- (பின் ஒருவனோடு) சினேகஞ் செய்.

*20. தந்தை தாய் பேண்*

ப-ரை. தந்தை- (நீ உன்) பிதாவையும், தாய்- மாதாவையும், பேண்- (எப்போதும் பூசித்துக்) காப்பாற்று.

*21. நன்றி மறவேல்*

ப-ரை. நன்றி- (ஒருவர் உனக்குச் செய்த) உபகாரத்தை, மறவேல்- (நீ ஒரு போதும்) மறவாதே.

*22. பருவத்தே பயிர் செய்*

ப-ரை. பயிர்- பயிர்களை, பருவத்தே- (அது அது விளையும்) பக்குவ காலத்திலே, செய்- (வேண்டும் முயற்சியிலே வழுவாமல்) இடு.

பயிருக்கு வேண்டும் முயற்சிகளாவன: உழுதல், எரு இடுதல், களை பிடுங்குதல், நீர் பாய்ச்சல், காத்தல் என்கின்ற ஐந்தும் ஆம்.

*23. மன்று பறித்து உண்ணேல்*

ப-ரை. மன்று- தரும சபையிலே இருந்துகொண்டு, பறித்து- (வழக்குத் தீர்ப்புக்கு வரும் குடிகளுடைய பொருளைக்) கவர்ந்து, உண்ணேல்- நீ சீவனம் பண்ணாதே.

*24. இயல்பு அலாதன செயேல்*

ப-ரை. இயல்பு அலாதன- (தரும நூலுக்குப்) பொருத்த மல்லாதவைகளை, செயேல்- நீ செய்யாதே.

*25. அரவம் ஆட்டேல்*

ப-ரை. அரவம்- (நஞ்சையுடைய) பாம்புகளை, ஆட்டேல்- (நீ பிடித்து) ஆட்டாதே.

*26. இலவம் பஞ்சில் துயில்*

ப-ரை. இலவம் பஞ்சில்- இலவம் பஞ்சு மெத்தையிலே, துயில்- நீ நித்திரை செய்.

*27. வஞ்சகம் பேசேல்*

ப-ரை. வஞ்சகம்- கபட வார்த்தைகளை, பேசேல்- நீ பேசாதே.

(தொடரும்...

*பொய் சொல்வதைவிட மௌனமாக இருப்பது சிறந்தது.*

உ

# இறப்பை எண்ணி...

## திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்

சுந்தரமூர்த்தி நாயனார் மரணத்தைக்கண்டு அஞ்சுவதைவிட ஒருபொருள் இலாத மாயம் சுவையிலாப் பேதை வாழ்விற்கு அஞ்சினார் என முந்திய கட்டுரையிலே கண்டோம்.

இந்த மானுட வாழ்க்கை, பேதை வாழ்வாக அமையாது, இறைவனது சேவடி சேர உணரும் வாழ்க்கையாக அமைய வேண்டும். அதை இறைவன்தான் அருள வேண்டும்.

மனிதவாழ்வில் குழந்தைப் பருவமும் இளமைப் பருவமும் பெரும்பாலும் நன்றாகப் போவதுபோலத் தோன்றும். நோய்களும் முதுமையுடன்தான் வரும். சிலருக்கு இளமையில் வந்தாலும் அதிகமானோருக்கு மூப்போடு தொடர்ந்துதான் பிணியும் வருகிறது. அடுத்து கூற்றுவனும் வருவான். அப்போது "வாழ்க்கை அரைத்த மஞ்சளாகி விட்டதை அறிந்தேன்" என்கிறார் சுந்தரமூர்த்தி சுவாமி.

உணவுப்பண்டங்களை கெட்டு விடாது பதப்படுத்த உதவுவது மஞ்சள். அந்த மஞ்சளை நீர் விட்டு அரைத்தால் உடனே பயன்படுத்திவிட வேண்டும். அல்லாவிட்டால் அது பயனற்றதாகிவிடும். எமது வாழ்வையும் அதற்கு ஒப்பிடுவது மிகவும் பொருத்தமே.

தீயவற்றையே இதுவரை செய்து எய்த்ததை நரையும் மூப்பும் வரும்போது தான் புரிந்துகொள்கிறோம். வாழ்க்கை அரைத்த மஞ்சளாகிவிட்டது. நமன் வந்து விடப்போகிறானென அச்சம் தோன்றுகிறது. ஆம், மரணம் வருமுன் உய்யும் வழி காணவேண்டுமே. அதை எனக்கு அருள் இறைவா என வேண்டிநிற்கும் தேவாரத்தில் நமனுக்கு அஞ்சுவதாக சுந்தரர் பாடியுள்ளார்.

நாயன்மார்கள் உய்யும் வழிகண்டவர்கள். ஆனால் நம்மை அந்த வழியில் நடத்துவதற்காகத் தாய் குழந்தையுடன் சேர்ந்து பொம்மைக்குக் குளிப்பாட்டி உணவூட்டுவதாகப் பாவனை செய்வது போல் எமக்கேற்ற தேவாரங்களைப் பாடியுள்ளனர். அப்படிப் பாடியதே பின் வரும் தேவாரமாகும்.

நரைப்பு மூப்பொடு பிணிவரும் இன்னே
நன்றி யில்வினை யேதுணிந்து எய்த்தேன்
அரைத்த மஞ்சள தாவதை அறிந்தேன்
அஞ்சி னேன்நம னாரவர் தம்மை
உரைப்பன் நான்உன் சேவடி சேர
உணரும் வாழ்க்கையை ஒன்றறி யாத
இரைப்பனே னுக்கோர் உய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தைபி ரானே

மேற்கண்ட தேவாரத்திலே நரையும் மூப்பும் பிணியும் வந்து அவற்றையடுத்து நமனார் வருவது பற்றிப் பாடியுள்ளார். மற்றொரு தேவாரத்தில் மரணத்தை அவர் சிறிது விவரித்து மரணத்திற்கு முன் இறைவனைச் சென்றடைய முயலவேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

"சுற்றம் நண்பர் உற்றவர் என எத்தனையோ பேரிருக்கிறார்கள். இறப்பு வரும்போது இவர்களால் என்ன செய்ய முடியும்? கூடியிருந்து அழத்தான் முடியும். மரணத்தை அவர்களால் தடுக்கமுடியாது. உயிர் உடலைப் பிரிந்துபோய்விடும். இது நிச்சயமான ஒன்று" என்று சுந்தரர் பாடினார். இதேபோன்று நாவுக்கரசர் "எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்?" எனக்கேட்டு, "செத்தால் வந்து உதவுவார் ஒருவரில்லை. சிறு விறகால் தீ மூட்டிச் செல்லா நிற்பர்" எனப் பாடியதும் இங்கு நினைவுகொள்ளத் தக்கது.

நிச்சயமான இந்த மரணத்தைப் பற்றி அறிந்தும் நாங்கள் இந்தப் பேதை வாழ்வைப்பற்றித்தானே சிந்திக்கின்றோம். நாம் நன்றாக வாழவேண்டும். நம் குடும்பத்தவர் நன்றாக வாழவேண்டும். காணி வேண்டும், வீடு வேண்டும், பொன் வேண்டும், பொருள்வேண்டும். இப்படி இந்த வாழ்விற்காக நாம் எதையெதையெல்லாமோ விரும்புகின்றோம்.

"மனமே, இதைத் தவிர்த்துவிடு, நீ விரும்பவேண்டியது இவற்றையல்ல. கடவுளை விரும்பு. அவன் உடலிலிருந்து உயிரைப் பிரிக்கும் காலனுக்குக் காலன். அவன் உன் உயிர். அந்தச் சிவக்கொழுந்தினைச் சென்றுசேர்" என மனதிற்கு அறிவுரை கூறுவதுபோல எமது மனங்களுக்குக் கூறியுள்ளார்.

பரித்த சுற்றமும் மற்றுவன் துணையும்
பலரும் கண்டழு தெழஉயிர் உடலைப்
பிரிந்து போமிது நிச்சயம் அறிந்தால்
பேதை வாழ்வெனும் பிணக்கினைத் தவிர்த்து
குருந்த டங்கண்ணி பங்கனை உயிரைக்
கால காலனைக் கடவுளை விரும்பிச்
செருந்தி பொன்மலர் திருத்தினை நகருள்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே

என்ற சுந்தரரின் தேவாரம் எமது மனங்களுக்கு சீரிய உபதேசமொன்றைச் செய்கிறது.

இறக்கும்போது நடப்பவற்றையும், நாம் சிறந்ததாகக் கருதுவனவெல்லாம் அப்படிப்பட்டவை அல்ல என்பதையும் விவரித்துக் கூறும்போது எங்களது உள்ளங்களில் ஒரு தாக்கத்தை அது ஏற்படுத்தும். உதாரணமாக நாம் உற்றவர் என்று கருதியிருப்பவர், வாழ்க்கையில் எத்தனையோ சந்தர்ப்பங்களிலே உதவிகள் புரிந்து உறுதுணையாயிருந்தவர் எங்கள் மரணத்தின்போது அழுவதைத் தவிர எதுவுஞ் செய்யவியலாதவராகி விடுகிறார். அது மட்டுமல்ல உயிர்நீங்கிய உடலுக்கு தீமூட்டி எரிப்பார். இதை விவரிக்கும்போது மனம் சிந்திக்கத் தொடங்குகிறது. இவரை நம்பியிருக்கக்கூடாது. நிலையான உறுதுணையொன்றைத் தேடியாக வேண்டும்

என்ற தவிப்பு மனதில் எழும்.

இதேபோன்றே மரணம் நிகழ்வது பற்றி விவரிக்கும்போதும் நாம் சிந்திக்கத் தொடங்குவோம். மனம் திருத்தினை நகரத்துச் சிவக்கொழுந்தினைச் சென்றடைய முற்படும். இதன் காரணமாகவே எம் மனங்களில் தாக்கத்தை ஏற்படுத்தி, சிந்திக்க வைத்து நல்வழியிலே செலுத்துவதற்காகவே தேவாரங்களில் இவற்றை விவரித்தனர் போலும்.

இத்தேவாரங்களைப் பாடும்போது எம் மனத்தை இறைவனிடம் சென்றடையச் செய்வதே நாம் செய்யவேண்டியதாகும்.

## கந்தவேளைப் பாடுகின்ற காலம் வந்துவிட்டது

கந்தவேளைப் பாடுகின்ற காலம் வந்துவிட்டது
கலியுகத்தைப் போக்குகின்ற காலம் வந்துவிட்டது
பந்தவினை அறுகின்ற காலம் வந்துவிட்டது
பாடியாடிப் பரவுகின்ற காலம் வந்துவிட்டது

எங்குமீசன் என்றுசொல்லும் காலம் வந்துவிட்டது
எல்லாமவன் தானேயென்ற காலம் வந்துவிட்டது
பொங்குகின்ற பக்தரோசை பொலியும் காலம் வந்துவிட்டது
ஆற்றங்கரைக் கந்தவேளை போற்றும் காலம் வந்தது

அற்புதங்கள் காணுகின்ற காலம் வந்துவிட்டது
அன்புவெள்ள மோடுகின்ற காலம் வந்துவிட்டது
கற்பூரத்தீ காணுகின்ற காலம் வந்துவிட்டது
காதலினால் உருகுகின்ற காலம் வந்துவிட்டது

அங்கைகூப்பி ஆடுகின்ற காலம் வந்துவிட்டது
கந்தனருள் மேவுகின்ற காலம் வந்துவிட்டது
மங்கைவள்ளி வேலன்மீது காதல் வந்துவிட்டது
மக்கள் மனதை மேம்படுத்தும் காலம் வந்து சேர்ந்தது

முதிருமன்பால் இனிமைசேரும் காலம் வந்துவிட்டது
மூர்க்ககுணம் ஒழியுமந்தக் காலம் வந்துவிட்டது
கதிர்வண்ணக் கந்தவேளின் காலம் வந்துவிட்டது
கண்ணைபெற்ற பயனைப்பெறும் காலம் வந்து சேர்ந்தது

சந்நிதியில் பக்திசெய்து பாடுங் காலம் வந்தது
பரமசிவன் புத்திரனைப் பரவும் காலம் வந்தது
அந்திதியை நாடுகின்ற நல்ல காலம் வந்தது
நான்குவேதப் பொருளோனைப் போற்றும் காலம் வந்தது.

*கற்கரைக் கற்பகன்*

வயோதிகம் என்பது நோய்கள் சேரும் துறைமுகம்.

உ

# சிவமயம்

**வாரியார் சுவாமிகள்**

*புலத்தலையில் மறுகு பொறி:*

புலம்- ஐம்புலன், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்

மறுகுதல்- சுழலுதல், பொறி- அறிவு

ஐம்புலன்கள் நம்மை பெரிதும் அல்லற்படுத்துகின்றன. ஐம்புலன்கள் படுத்தும்பாடு அளவற்றது.

*"பஞ்சேந் திரிய வஞ்சக முகரிகாள்*
*நும்முடைய மம்மரானை நடாத்துகின்றீர்...."*

*-அப்பர்-*

*"ஐம்புல வேடரின் அயர்ந்தனை"*

*என்பது சிவஞானபோதம்.*

*"வளைத்துநின் றைவர் கள்வர் வந்தெனை நடுக்கஞ் செய்யத்*
*தளைத்துவைத் துலையை ஏற்றித் தழலெரி மடுத்த நீரில்*
*திளைத்துநின் றாடு கின்ற ஆமைபோல் தெளிவி லாதேன்*
*இளைத்துநின் றாடு கின்றேன் என்செய்வான் தோன்றி னேனே.*

*-அப்பர்-*

*ஓரவொட் டார்ஒன்றை உன்னவொட் டார்மல ரிட்டுஉனதாள்*
*சேரவொட் டார்ஐவர் செய்வதுஎன் யான்"*

*-கந்தரலங்காரம்-*

*பொறி கழல் நிறுவியே:*

பொறி- அறிவு

ஐம்புலன்களின் வாயிலில் அகப்பட்டுக் கலங்குகின்ற அறிவை இறைவனுடைய திருவடியில் நிறுத்தி நலம்பெறவேண்டும்.

*சிறிது உணர்வு முணர்வற:*

இறைவன் திருவடியில் அறிவைச் செலுத்தியதால் மெய்யுணர்வு தலைப்படும்.

*வழுவற:*

இறைவன் திருவடித் தியானத்தால் குற்றங்கள் அனைத்தும் தீயைக் கண்ட பஞ்சுபோல தொலைந்து போகும்.

*ஒரு ஜகவித்தை குணத்ரயமும் நிர்த்தத்து வைத்து:*

இவ்வுலக வித்தைகளும், முக்குணங்களும் அடங்கி நம்முடைய ஆணைக்குள் ஒடுங்கிவிடும். நாம் ஆட்டுவித்தபடி அவை ஆடும். திருவருள் துணைசெய்யாத பொழுது முக்குணங்களும் நம்மை ஆட்டி வைக்கும். இறைவனுடைய திருவடி தியான பலத்தால் கருவி கரணங்களெல்லாம் நம் வசமாகி ஆடும்.

*அளவறு அகில வெளியையும்:*

அளவுகடந்த முழுப்பெருவெளி. இது ஞானவெளியாகும். இதனை அருணகிரிநாதர்

கந்தரலங்காரத்தில் மிக அழகாகக் கூறுகின்றார்.

*"வெளியில் விளைந்தவெறும் பாழைப் பெற்ற வெறுந்தனியைத்*
*தெளிய விளம்பியவா"*
*"வெம்மாயை யற்று வெளிக்குள் வெளிகடந்து*
*சும்மா யிருக்கும் சுகம்"*

*-திருவருட்பா-*

*ஒளியையும்:*

இது ஞானவெளியில் தோன்றும் ஞான ஒளியாகும். ஆன்மாக்களின் இதயத் தாமரையில் விளங்கும் சிதாகாசத்தில் ஞானச் சுடரொளி எப்போதும் ஒளிசெய்து கொண்டிருக்கும். இதனை நக்கீரர்,

*"ஓவற இமைக்கும் சேண்விளங் கவிரொளி"*

என்று கூறுகிறார்.

*அறிசிவ தத்வப்ரசித்தி தனை:*

அறியக்கூடிய சிவானுபவ உண்மை கீர்த்திப் பொருள். எதனை அறிந்தால் எல்லாவற்றையும் அறிந்ததாக ஆகுமோ, எதனை அடைந்தால் எல்லாவற்றையும் அடைந்ததாக ஆகுமோ அதுதான் சிவானுபவம். இதனை இங்கு அருணகிரிநாதர் "தத்வப்ரசித்தி" என்ற அழகிய சொற்றொடரால் விளக்குகிறார்.

*முத்தி சிவக்கடலை:*

முத்தி என்னும் சிவசமுத்திரம். நதிகள் வளைந்து வளைந்து ஓடினாலும், முடிவில் கடலை அடைந்தே தீரும். நதிகள் சென்று புணர்வதனால் கடல் புணரி எனப்பட்டது. அதுபோல், ஆன்மாக்களாகிய நதிகள் பரம்பொருளாகிய கடலை அடைந்தே தீரும். நதிகள் வேகமாகவும், நொப்புநுரைகளுடனும் ஆரவாரத்துடனும் ஓடிக் கடலிலே வீழ்ந்து அடங்கிவிடும். அதுபோல், ஆன்மாக்கள் சிவக்கடலில் சேர்ந்து தன்மயற்றுச் சிவமயமாகிவிடும். அத்துடன் பிறவித்துயர் அற்றுவிடும்.

*"பத்தித் துறையிழிந் தானந்த வாரி படிவதனால்*
*புத்தித் தரங்கந் தெளிவதென்றோ"*

*-கந்தரலங்காரம்-*

---

## "நல்லூரானைப் பணிந்தேன் ஞானவேல் கண்டேன்"

பாலனாய் இருக்கும்போது மயிலைக் கண்டேன்
பருவமாய் இருக்கும்போது கோயிலைக் கண்டேன்
தோழனாய் இருக்கும்போது திருப்புகழையுண்டேன்
தொழிலில் இருக்கும்போது நல்லூரைப் பணிந்தேன்
ஞாலமாய் -வரைந்தபோது ஞானவேல் கண்டேன்
நம்பிக்கை வைத்தபோது வீரவேல் கண்டேன்
கோலமாய் விரைந்தபோது தங்கவேல் கண்டேன்
கும்பிட்டு நின்றபோது வெற்றிவேல் கண்டேன்.

*திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள்*

---

**அறிவைவிட அதிக பயனுள்ள புதையல் கிடையாது.**

உ

(தொடர்ச்சி...

# சந்நிதியான்

## திரு ந. அரியரத்தினம் அவர்கள்



நெஞ்சுக்குநேரே துவக்கினை நீட்டியவாறு இருவரையும் இழுத்துவந்த அந்த அதிரடிப்படைப் பொலிசார் அவர் களை சும்மாவிடவில்லை. மகாலிங்கத்தை நடுறோடுவரை இழுத்துச்சென்ற அந்த அதிரடிப்படைப் பொலிஸ் நடுறோட்டிலே வைத்து அவரை கண்மூடித்தனமாகத் தாக் கத் தொடங்கினான். இதேபோன்று லோக நாதனை இழுத்துவந்த பொலிஸ்காரன் கடைக்குமுன்பாக வைத்து துவக்கு சோங் கினால் அவருடைய இரண்டு தோள்மூட்டுக் களிலும் தாக்கத் தொடங்கினான்.

ஏன் தம்மை இழுத்துவருகிறார்கள், ஏன் தம்மைத் தாக்குகிறார்கள் என்பதை புரிந்துகொள்ளமுடியாது இருவரும் தடுமாறி னார்கள். அப்பொழுது அந்தப் பொலிஸ் படையினர் இங்கே ஓடிவந்த அந்தப் புலி எங்கே இங்கேதானே ஓடிவந்தான் என்று கேட்டவாறு இருவரையும் மீண்டும் தாக்கத் தொடங்கினர். உண்மையில் அவர்களு டைய கடைக்குள்ளேயோ அல்லது கடைப் பக்கமாகவோ யாரும் வந்ததைக் காணாத நிலையில் அங்கே என்ன நடக்கிறது என்பதை விளங்கிக்கொள்ள முடியாது குழம்பிப்போன லோகநாதன் இங்கே யாரும் வரவில்லை நான் யாரையும் காணவில்லை என்றும் தன்னைத் தாக்குகின்ற அந்தப் பொலிஸ்காரனுக்கு எடுத்துக் கூறினார்கள். ஆனாலும் அந்தப் பொலிஸ்காரன் அதை நம்பியதாகத் தெரியவில்லை. இந்த நிலையில் சிறிது நேரத்திற்கு முன்பு சாமியார் கூறிய அந்த வார்த்தைகள் லோகநாதனுக்கு ஞாபகத்திற்கு வந்தது. "உனக்கு றோட்டாலை போகின்ற குடி காரன் அடிச்சாலும் நீ கையைக் கட்டிக் கொண்டு அடியை வாங்கத்தான் வேணும்" ஆம் அந்த இக்கட்டான நிலையிலும் சாமி யார் கூறிய அந்த வார்த்தைகள் எந்தளவு நிதர்சனமாக நிறைவேறிக் கொண்டிருக் கிறது என்பதை லோகநாதன் நன்கு உணர்ந்துகொண்டார்கள்.

அந்த அதிரடிப்படைப் பொலிசார் இப்பொழுது லோகநாதனுடைய கடைக் குள் யாரும் இல்லை என்பதை உறுதிப் படுத்திய நிலையில் அடுத்த கட்டமாக லோகநாதனுடைய கடைக்கு அருகில் உள்ள அந்த வளவிற்குள் சென்றனர். அந்த வளவிற்குள் இந்திரா ஸ்ரோர்ஸ் உரிமையாளரது வீடு அமைந்திருந்தது.

அப்பொழுது அவ் வீட்டில் ஆசிரிய ராகக் கடமை புரியும் இந்திரா ஸ்ரோர்ஸ் உரிமையாளரது மனைவியும் அவரது மகளும் குடியிருந்தனர். அந்த வளவிற்குள் சென்ற இரண்டு அதிரடிப்படைப் பொலி சாரும் சத்தமிட்டு அந்த வீட்டுக்காரரைக் கூப்பிட்டனர். அவ்வாறு சத்தமிட்டவாறு ஒரு அதிரடிப்படை பொலிஸ்காரர் வெளியே நிற்க அடுத்த பொலிஸ்காரர் வீட்டிற்குள் நுழைந்து கொண்டிருந்தான். அப்பொழுது அந்த ஆசிரியையும் மகளும்

வெளியே வந்துவிட்டனர். இந்த நிலையில் வீட்டிற்குள் சென்ற பொலிஸ்காரனும் வெளியேவந்து அந்த ஆசிரியையும் மகளையும் ஏதோ கேட்டு அதட்டியவாறு சத்தம் போட்ட வண்ணம் இருந்தனர். அதன்பின்பு அந்த இரண்டு பொலிசாரும் வீட்டைச் சுற்றியிருந்த வளவு முழுவதை யும் நன்றாகத் தேடிப் பார்த்தனர். வீட்டிற்கு வெளியே உள்ள அந்த வளவிற்குள் எவருமில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டனர். இவ்வாறு உறுதிப்படுத்திக் கொண்டதனால்போலும் அந்த இரண்டு பொலிஸ்காரரும் அந்த ஆசிரியையின் வீட்டையும் லோகநாதனுடைய கடையை யும் காட்டி தமக்குள் ஏதோ கதைத்துக் கொண்டனர். அதன்பின் நீட்டிய துவக்குடன் ஒரு பொலிஸ்காரன் அந்த ஆசிரியையின் வீட்டிற்கு வெளியே நிற்க அடுத்த பொலிஸ் காரன் நீட்டிய துவக்குடன் பதுங்கியவாறு அந்த வீட்டுக்குள் நுழைந்துகொண்டிருந் தான். மேற்படி காட்சிகளை லோகநாதனும் மகாலிங்கமும் தமது கடைக்கு வெளியே நின்றவாறு பயத்துடன் அவதானித்துக் கொண்டிருந்தனர்.

என்ன பயங்கரம் அந்தப் பொலிஸ் காரர் வீட்டிற்குள் சென்று சிறிது நேரத்தில் அந்த வீட்டிற்குள் படபடவென துவக்கு வெடிச் சத்தங்கள் கேட்கத்தொடங்கியது. அதைத் தொடர்ந்து அபயக்குரல் ஒன்றும் ஒலிக்கத் தொடங்கியது. அதேநேரம் அந்த வீட்டிற்கு வெளியே நின்ற பொலிஸ் காரனும் கண்மூடித்தனமாக நாலாபுறமும் வேட்டுக்களைத் தீர்க்கத் தொடங்கினான். திடீரென இவ்வாறு ஏற்பட்ட பயங்கரத் தினால் அந்தச் சூழலில் இருந்தவர்கள் எல்லோரும் பயத்தால் நடுங்கத் தொடங் கினர். பலர் அலறி அடித்துக்கொண்டு ஓடத் தொடங்கினர். திரு லோகநாதனுக்கு அருகாமையாகவும் காற்றைக் கிழித்துக் கொண்டு வேட்டுக்கள் போய்க்கொண்டிருந் தன. என்னசெய்வதென்று திகைத்துப் போன லோகநாதன் தனது கடைப்பக்க மாகப் பாய்ந்து சென்று அதற்குள் பாது காப்பாக பதுங்கிக்கொண்டார்.

இந்த நிலையில் யாரும் எதிர் பாராத வகையில் அந்த வீட்டிற்குள் இருந்து திடீரென வெளிப்பட்ட போராளி ஒருவர் வீட்டிற்கு வெளியே நின்ற அந்த பொலிஸ்காரனைநோக்கி வேட்டுக்களைத் தீர்த்தவாறு வேகமாக வெளியேறிக் கொண்டிருந்தார். இவ்வாறு வீட்டிற்குள் இருந்து வெளியேறிக்கொண்டிருந்த அந்தப் போராளி தீர்த்த வேட்டுக்களினால் வெளியே நின்ற அந்தப் பொலிஸ்காரனது தோள் மூட்டுக்களில் காயம் ஏற்பட்டு இரத்தம் வடியத்தொடங்கியது. அதேநேரம் பிரதான வீதியில் நிறுத்தப்பட்டிருந்த ஜீப் வண்டியில் இருந்த பொலிஸ்காரர்கள் சம்பவம் நடை பெற்றுக்கொண்டிருக்கும் 3ஆம் வாய்க்கால் வீதியை நோக்கி சரமாரியாக வேட்டுக் களைத் தீர்த்துக்கொண்டிருந்தனர். ஆம் 1985ஆம் ஆண்டு தைப்பொங்கல் நாளான அன்று கரடிப்போக்குச்சந்தி யாரும் எதிர் பாராத வகையில் பெரும் அவலத்தினால் குழப்பமும் பயங்கரமும் நிறைந்த இடமாக மாறிவிட்டது.

அந்த ஆசிரியையின் வீட்டிற்குள் ஒளித்திருந்த அந்த புலிப்போராளி வீட்டிற் குள் நுழைந்த பொலிஸ் சார்ஜன்டை சுட்டுக்கொன்றுவிட்டு வெளியே நின்ற பொலிஸ்காரனுக்கும் சுட்டு காயத்தை ஏற்படுத்திவிட்டு தான் தப்பிச்செல்கின்ற செயற்பாட்டிலே ஈடுபட்டுக்கொண்டிருந்தார். அதேநேரம் காயப்பட்ட பொலிஸ்காரன்

...தான வீதியில் நிறுத்தப்பட்டிருந்த ஜீப் வண்டியைநோக்கி அபயக்குரல் எழுப்பிய வாறு ஓடிக்கொண்டிருந்தான். இவ்வாறு காயப்பட்ட தமது சக பொலிஸ்காரன் வரு வதைக் கண்டதனால் பொலிஸ் ஜீப்பில் இருந்து வேட்டுக்களைத் தீர்த்துக் கொண் டிருந்தவர்கள் அதனை நிறுத்திக் காயப் பட்ட பொலிஸ்காரனை தமது ஜீப்பில் ஏற்றிக்கொண்டனர். அதேநேரம் அந்தப் போராளி ஒரு எறிகுண்டை வீசி வெடிக்க வைத்துவிட்டு பின்புறமாக தப்பிச்சென்று கொண்டிருந்தார்.

தனது பாதுகாப்புக்காக கடை முகப்புக்குள் படுத்திருந்தவாறு நடை பெற்றுக்கொண்டிருந்த பயங்கர நிகழ்வு களை அவதானித்துக் கொண்டிருந்த லோகநாதன் அவர்கள் மோதலில் ஈடுபட் டிருந்த இரண்டு பகுதியினரும் அவ் இடத்தைவிட்டு அகன்றுவிட்டதை உணர்ந்து கொண்டார்கள். திகைப்பும் தடுமாற்றமும் அடைந்திருந்த லோகநாதன் தமது கடைக் குள் சென்றார். மேலும் கடைக்குள் நடுங் கிக்கொண்டிருந்த கடையில் உதவியாள ராகச் செயற்படுகின்ற அந்தச் சிறிய பைய னையும் அழைத்துக்கொண்டு லோகநாதன் அவர்கள் அங்கிருந்து பாதுகாப்பாக வெளி யேறிக்கொண்டிருந்தார்கள்.

அவர்கள் கடையிலிருந்து வெளி யேறிச்சென்றுகொண்டிருக்கின்றபொழுது அந்தப் பொலிஸ்ஜீப் பொலிஸ் நிலையத் திலிருந்து கரடிப்போக்குச் சந்தியை நோக்கி வருவதை அவதானித்த லோகநாதன் அவர்கள் அந்தப் பையனுடன் பாது காப்பாக அருகில் இருந்த மறைவிடத் திற்குள் மறைந்து கொண்டார்கள். ஆனாலும் ஏனோ தெரியவில்லை. அந்த ஜீப் வண்டி சிறிது நேரத்திற்குள்ளாகவே திரும்பவும் பொலிஸ் நிலையம்நோக்கி திரும்பிச்சென்றுவிட்டது. திரு லோகநாதன் அவர்கள் இப் பொழுது அந்தச் சிறுவனை பாதுகாப்பாக ஒரு வளவினுள் தங்க வைத்துவிட்டாலும் தான் கஷ்டப்பட்டு செயற்படுத்திக்கொண்டிருக்கும் அந்த வியாபார ஸ்தாபனத்திற்கு ஏதும் நடந்து விடக்கூடாதென்ற ஆதங்கம் அவர் மனதிற் குள் அலைமோதிக் கொண்டிருந்தது. அதே போன்றுதான் கரடிப்போக்குச் சந்தியை சுற்றியுள்ளவர்கள் முதன்முதல் இவ்வா றான ஒரு சம்பவத்தை எதிர்நோக்கிய நிலையில் அடுத்தது என்ன நடக்கப் போகின்றதோ என்று கலக்கமடைந்தனர். எங்கே செல்வது எப்படிச் செல்வது எனத் தெரியாது திகைத்துப்போய்க் காணப்பட்ட னர். துவக்குச்சூட்டுச் சம்பவத்துடன் எறி குண்டுவெடிப்பு என்பவற்றையெல்லாம் நேரடியாகவே பார்த்துவிட்ட நிலையில் அதிகமானவர்கள் பாதுகாப்புத்தேடி அப் பகுதியைவிட்டு வெளியேறுகின்ற நடவடிக் கையிலேயே ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

இவ்வாறு கரடிப்போக்குச் சந்தி யிலும் அண்மித்த பகுதியிலும் இருந்த மக்கள் அல்லோலகல்லோலப் பட்டுக்கொண் டிருந்தனர். பலர் அப்பகுதியிலிருந்து பாது காப்புக்கருதி வெளியேறிக்கொண்டிருந்த னர். ஆனாலும் துடிப்புள்ள இளைஞனான லோகநாதனிற்கு தனது கடையை அப்படியே விட்டு வெளியேறுவதற்கு மனம் வரவில்லை. இந்நிலையில் தனது கடையி லிருந்த சிறுவனை பாதுகாப்பான இடத்தில் விட்டபின்பு திரும்பவும் தனது கடையிருந்த பகுதியைநோக்கி கவனமாக வந்துகொண் டிருந்தார்கள். அப்பொழுதுதான் அங்கே யாரும் எதிர்பார்க்காத அந்தப் பயங்கர நிகழ்வு மீண்டும் திரு லோகநாதன் கடை அமைந்திருந்த பகுதியில் ஏற்பட்டது.

(தொடரும்...

# காஞ்சி ஏகாம்பேஸ்வரர் திருக்கோயில் (திருக்கச்சி ஏகம்பம்)

**திரு வல்வையூர் அப்பாண்ணா அவர்கள்**

கைலாயத்தில் ஒரு சமயம் அம்பிகை இறைவனின் கண்களை இரு கைகளாலும் பொத்தியபோது அகில உலகமும் இருண்டுபோனது. எல்லா உயிரினங்களும் துன்புற்றன. எல்லா அசைவுகளும் நின்று போயின. அம்பிகை துணுக்குற்றாள். ஆண்டவன் சிரித்துக் கொண்டான். தன் தவறுக்குப் பரிகாரமாக காஞ்சியிலே அம்பிகை தவமிருந்தாள்.

காஞ்சிபுரம் கி.பி. 3 முதல் 9ஆம் நூற்றாண்டுவரை ஆட்சிசெய்த பல்லவர்களின் தலைநகரமாக விளங்கியது. நகரத்திலிருந்து கோயில் சற்றுத் தூரத்தில் இருந்தபோதிலும், வானளாவ உயர்ந்து நிற்கும் இராஜகோபுரம் கோயில் வளாகத்துக்கு வழி காட்டுகிறது. தமிழகத்தின் எல்லா நகரங்களிலிருந்தும், குறிப்பாக சென்னையிலிருந்து அடிக்கடி நேரடி பேருந்து வசதியுண்டு. தற்காலத்தில் பட்டுப் புடவைக்குப் பெயர்பெற்ற காஞ்சிபுரம் அந்தக் காலத்தில் "கல்வியின் ஊற்று" என சிறப்பிக்கப்பட்டுள்ளது.

அர்த்த சாஸ்திரம் எழுதிய சாணக்கியர், திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேழலகர், பொய்கையாழ்வார் முதலானவர்களைப் பெற்ற பேறுடையது காஞ்சி. வைஷ்ணவத்திலும் காஞ்சி அழியாப் புகழ் பெற்றது. ஸ்ரீ ராமானுஜர் தமது இளமைக் காலத்தை காஞ்சியில் கழித்து ஸ்ரீ வரத ராஜப்பெருமாளின் பேரருளைப் பெற்றார். 63 நாயன்மார்களுள் சாக்கியநாயனார், திருக்குறிப்புத் தொண்டர், ஐயடிகள் காடவர்கோன் வாழ்ந்த தெய்வீகப் பதி. கண்பார்வை இழந்த சுந்தரர் திருவெண்பாக்கத்தில் பெற்ற ஊன்றுகோலின் உதவியுடன் இங்குவந்து இறைவனை வேண்டி தமது இடதுகண் பெற்ற அற்புதம் நிகழ்ந்த தலம். ஜகம் புகழும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் தலைமை இடமும் இதுவே.

ஐந்து தேவார திருத்தலங்களையும் பதினான்கு திவ்விய சேத்திரங்களையும் தன்னகத்தே கொண்டது காஞ்சி. திருவேகம்பம், திருக்கச்சியேகம்பம், ஏகாம்பரநாதர் திருக்கோயில் என பலவாறாகவும் அழைக்கப்படுகிறது. மாணிக்க வாசகரும், பட்டினத்தாரும், அருணகிரி நாதரும் ஏற்றிப் போற்றிப் புகழ்ந்து பாடியுள்ளார்கள்.

இறைவன்: திருவேகம்பர், ஏகாம்பரநாதர், ஏகாம்பரேஸ்வரர்
இறைவி: ஏலவார்குழலி.

ஏகாம்பேஸ்வரர் மூலவர். மணல் லிங்கமாதலால் இது பிருத்வி ஸ்தலம். லிங்கபாணத்துக்கு அபிஷேகம் எதுவுமில்லை. கவசம் சாத்தியபின் ஆவுடையார் பகுதிக்கே அனைத்து அபிஷேகங்களும் நடைபெறுகின்றன. மூலவரின் பின்புறம் இறைவன் சோமாஸ்கந்தராகக் காட்சி தருகிறார்.

உமாதேவியார் கம்பா நதிக்கரையில் மணலால் லிங்கம் அமைத்து வழிபட,

இறைவன் கம்பா ஆற்றில் வெள்ளம் வரு மாறு செய்ய, உமையம்மை லிங்கத்தை தழுவிக் காத்தாள் என்பது வரலாறு. தழுவியபோது ஏற்பட்ட வளையற் தழும் பும், முலைத் தழும்பும் குழைந்துகொடுத்த லிங்கத்தின்மேல் பதிந்துள்ளது. அதனால் ஏகம்பர் "தழுவக் குழைந்த பிரான்" எனப் பெயர் பெற்றார். வரலாற்றில் கரைபுரண்டு ஓடிய கம்பா நதி தற்போது குறுகி ஒருசிறு குளமாக காணப்படுகிறது.

காஞ்சி மண்டலம் முழுமைக்கும் தேவி காமாட்சியே அதிபதியாகையால் காஞ்சியில் வேறு எந்தக் கோயிலிலும் தனியாக அம்பாள் சந்நிதி (மூலமூர்த் தமாக) கிடையாது. ஆனால் ஒவ்வொரு கோயிலிலும் உற்சவமூர்த்தி வீற்றிருக்கும் ஒரு அம்பாள் சந்நிதி உண்டு.

மீண்டும் வாயில் பக்கமாக பார்வையைச் செலுத்துவோம். "பல்லவ கோபுரம்" எனப்படும் இந்த கோபுர வாயிலின் உள்ளே இடதுபக்கம் நந்தவனம். வலது பக்கம் யாம் ஏற்கனவே குறிப்பிட்ட கம்பையாறு. இந்த கோபுர வாயிலிற்றான் "விகடசக்கர விநாயகர்" அமர்ந்துள்ளார். இவரே இத் தலத்தின் தல விநாயகர்.

"விகட சக்கர செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர விண்மணியாம் உறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவோம்"

எனக் கச்சியப்பர் வணங்கிய விநாயகர் இவரே.

கோபுரவாயில் தாண்டியதும் தெரி வது ஆயிரம்கால் மண்டபம். தொடர்ந்து வாகன மண்டபம் விசாலமானது. பொது வாக சுவாமி திருவுலாவரும் வாகனங்கள் பாக்கவாட்டியே அமைந்து காணப்படும். இங்கே வாகனங்கள் நேரானதாகவே இருப் பது ஒரு வித்தியாசமான அம்சம்.

உட்பிரகாரத்தில் நிறைய லிங்கங் கள் காணப்படுகிறது. வடக்கு மூலையில் கிழக்கு பார்த்தபடி "சகஸ்ர லிங்க" சந்நிதி உண்டு. ஒரேஒரு லிங்கத்தில் சிறிது சிறி தாக 1008 சிவலிங்கங்கள் காணப்படு கின்றன. இன்னொரு இடத்தில் ஒரே லிங்கத்தில் 108 லிங்கங்கள் உள்ளதையும் கண்டு கொண்டோம்.

தலமரம்- மாமரம். "மாவடி" என்று அழைக்கப்படும் இந்த மாமரத்தின் அடி யிலே ஒரு மேடை போன்ற அமைப்பு. அம்பிகை மணல்லிங்கம் செய்து வணங்கிய இடம் இந்த மாவடியேதான். நான்கு வேதங்களும் நான்கு பெரிய கொப்புகளாக வளர்ந்துள்ள இந்த மாமரத்தின் இரண்டு கொப்புகள் வயது முதிர்வின் காரணமாக பழுதடைந்துள்ளது. (இதன் காலம் 3600 ஆண்டுகள் என புவியியல் வல்லுனர்கள் கணக்கிட்டுள்ள தாக ஸ்தல வரலாறு கூறுகிறது) அருகே இரண்டு மாங்கன்றுகள் இப்போ வளர்ந்து வருகின்றன. பழைமை வாய்ந்த இந்த மாமரத்தின் நான்கு கொப்புக்களிலும் கிடைக்கும் மாங்கனிகள் வெவ்வேறான ருசியுடன் உள்ளதாகக் கூறுகிறார்கள்.

மாவடியைத் தொழுது திரும்பி பிரகாரத்தை வலம்வரும்போது "ஏலவார் குழலி" அம்பாளின் உற்சவத் திருமேனி நின்ற கோலத்தில் அற்புதத் தரிசனம். பக்கத்தில் "குமரகோட்டம்" எனும் முருகனின் தனிக்கோயில். முருகனின்

*நன்மைக்குப் பாதை போகப்போக விரியும் தீமைக்கு பாதை போகப்போகச் சுருங்கும்.*

வரலாறு கூறும் கந்தபுராணம் தோன்றியது இங்கேதான். அதில்வரும் "மூவிரு முகங்கள் போற்றி" என்று தொடங்கும் பாடலில் வரும் "காஞ்சி மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி" என்று புகழப்படும் பெருமான் இவரேயாவர். இங்கே முருகன் வள்ளி தெய்வயானையுடன் மூலவராகப் பின்புறமும், முன்னால் உற்சவத் திருமேனிகளும் காணப்படுகின்றன.

இத்தலத்தில் வாழ்ந்த திருக்குறிப்புத் தொண்டர், ஐயடிகள் காடவர் கோன், சாக்கிய நாயனார் திருமேனிகள் உள்ளன. அடுத்து நால்வர் சந்நிதி. தொடர்ந்து அறுபத்துமூவர் மூலத் திருமேனிகளும், முடிவில் சந்தான குரவர்களும் உள்.

ஏலவார் குழலாள் என்றும் ஏத்தி வழிபட்ட காலகாலனாம் கம்பன் எம்மானைத் கண்குளிரக்கண்டு மகிழ்ந்து, அருகேயுள்ள வழி இறங்கி சண்டிகேஸ்வரரையும் வணங்கி வெளியே வருகிறோம்.

மறையானை மாசிலாப் புன்சடை மல்குவெண்  
பிறையானைப் பெண்ணொடு ஆணாகிய பெம்மானை  
இறையானை ஏர்கொள் கச்சித் திருவேகம்பத்(து)  
உறைவானை அல்லது உள்காது எனது உள்ளமே.

-சம்பந்தர்-

## படுக்கையிலிருந்து ஏன் வலதுபக்கம் திரும்பி எழ வேண்டும்?

எப்போதும் குறும்புத்தனமாக நடந்துகொள்ளும் குழந்தைகளைப் பெரியவர்கள் "இவன் இடது பக்கமாக எழுந்தானோ" என்று கூறுவதுண்டு.

இதிலிருந்து இடது பக்கமாக எழுந்துவருவதில் ஏதோ தவறுதல் இருப்பதாகப் புரிந்துகொள்ளலாம்.

மேலே கூறப்பட்ட பெரியவர்கள் இதைத் தெளிவாகப் புரிந்துகொண்டு கூறுவதில்லை. என்றாலும் வலது பக்கமாகத் திரும்பி படுக்கையிலிருந்து எழவேண்டுமென்பது மிகமுக்கியமானது.

நமது முனிவர்கள் நமக்கு வழங்கிய இவ்வொழுங்கு முறையை அண்மையில் மேல்நாட்டவர் முழுமையாக அங்கிகரித்துள்ளனர்.

நம் உடலைச் சுற்றும் இரு காந்தவளையங்கள் உள்ளன. இவையில் முதலாவதானது காலிலிருந்து தலைக்கும் தலையிலிருந்து காலுக்கும் வலம் வருகின்றது. இரண்டாவது காந்தவளையம் இடதுபக்கமிருந்து முன்பாகம் வழியாக வலது பக்கத்துக்கும் வலது பக்கமிருந்து பின்பாகம் வழியாக இடது பக்கமும் வலம் வருகின்றது. காந்தவளையத்தின் திசைக்கேற்றவாறு உடல் அசையும்போது காந்தவளையத்தின் சுருள்கள் இறுகுகின்றன.

எதிராக அசையும்போது சுருள் தொய்ந்து உடல் இயந்திரத்தின் செயல்திறனை தளர்வடையச் செய்யும். எனவே உடல் வலது பக்கம் திரும்பி எழும்புவது காந்த வளையத்தின் சுருள்களை இறுகச் செய்யும் என்பது நவீன மின்இயல் ஒப்புக் கொள்கின்றது.

பிறர் உங்களைப் புகழ வேண்டுமானால் நீங்கள் பிறரைப் புகழுங்கள்.

உ

# புரட்டாதிமாத வாராந்த நிகழ்வுகள்

05-09-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**விடயம்:-** "பஜனை"

**வழங்குபவர்கள்:-** வல்வை மாரியம்மன் பஜனைக் குழுவினர்

---

12-09-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**சொற்பொழிவு:-** "மயிலேறிய சேவகன்"

**வழங்குபவர்:-** சுவாமி சித்ரூபானந்தா அவர்கள்

(ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை)

---

19-09-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**சொற்பொழிவு:-** "பெரியபுராணம்" (தொடர்)

**வழங்குபவர்:-** அ. குமாரவேல் அவர்கள்

(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை)

---

26-09-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் 128ஆவது மாத வெளியீடு

## புரட்டாதி - 2008

**வெளியீட்டுரை:-** பிரம்மஸ்ரீ ச. வைத்தியநாதக்குருக்கள்

(பிரதமகுரு கந்தவனம் கந்தன் ஆலயம்)

**மதிப்பீட்டுரை:-** திரு துரை கணேசமூர்த்தி ஆசிரியர் அவர்கள்

(யா/ வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி)

பதிவு இல. Q.D/60/NEWS/2008

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த நிகழ்வுகள் 2008

## ஜனவரி

01.01.2008 மார்கழி 16 செவ்வாய்
மங்களப்புத்தாண்டு ஆரம்பம்
15.01.2008தை 1 செவ்வாய்
தைப்பொங்கள்
18.01.2008தை 4 வெள்ளி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
22.01.2008தை 8 செவ்வாய்
தைப்பூசம் விசேட உற்சவம் பகல்

## பெப்ரவரி

14.02.2008மாசி 2 வியாழன்
கார்த்திகை உற்சவம்
21.02.2008 மாசி 9 வியாழன்
மாசி மகம்

## மார்ச்

06.03.2008மாசி 23 வியாழன்
மகாசிவராத்திரி விரதம்
விசேட உற்சவம் மாலை 7 மணி
12.03.2008மாசி 29 புதன்
கார்த்திகை உற்சவம்
18.03.2008பங்குனி 5 செவ்வாய்
வருடாந்த சகஸ்ர மகாசங்காபிஷேகம்
காலை 8 மணி சங்குப்பூஜை
பகல் 10 மணி சங்காபிஷேகம்
பகல் 11 மணி சண்முக அர்ச்சனை
பகல் 12 மணி விசேட உற்சவம்
21.03.2008பங்குனி 8 வெள்ளி
பங்குனி உத்தரம்
வைரவப் பெருமாள் கும்பாபிஷேக தினம்

## ஏப்ரல்

07.04.2008பங்குனி 25 திங்கள்
ஆலய கும்பாபிஷேக தினம்
சகஸ்ர மகாசங்காபிஷேகம்
காலை 8 மணி சங்குப்பூஜை
பகல் 10 மணி சங்காபிஷேகம்
பகல் 11 மணி சண்முக அர்ச்சனை
பகல் 12 மணி விசேட உற்சவம்
09.04.2008பங்குனி 27 புதன்
பகல் 10 மணி கார்த்திகை உற்சவம்
13.04.2008சித்திரை 1 ஞாயிறு
தமிழ் இந்துப் புத்தாண்டு (சர்வதாரி)
மாலை 6.30 விசேட உற்சவம்
22.04.2008 சித்திரை 8 ஞாயிறு
சித்திரா பூரணை

## மே

06.05.2008 சித்திரை 24 செவ்வாய்
பகல் 10 மணி கார்த்திகை உற்சவம்
19.05.2008 வைகாசி 6 திங்கள்
வைகாசி விசாகம், விசேஷட உற்சவம்

## ஜூன்

02.06.2008 வைகாசி 20 திங்கள்
கார்த்திகை உற்சவம்
30.06.2008 ஆனி 16 திங்கள்
கார்த்திகை உற்சவம்

## ஜூலை

03.07.2008 ஆனி 19 வியாழன்
கதிர்காமம் கொடி, பயணப்பூஜை
07.07.2008 ஆனி 23 திங்கள்
தீர்த்தமெடுப்பு
09.07.2008 ஆனி 25 புதன்
ஆனி உத்தரம் விசேட உற்சவம்
13.07.2008 ஆனி 29 ஞாயிறு
சின்ன ஆண்டியப்பர் பூஜை
14.07.2008 ஆனி 30 திங்கள்
வருடாந்த குளிர்ச்சிப் பொங்கல்
27.07.2008 ஆடி 12 ஞாயிறு
கார்த்திகை உற்சவம்

## ஆகஸ்ட்

01.08.2008 ஆடி 17 வெள்ளி
ஆடி அமாவாசை
23.08.2008 ஆவணி 7 சனி
கார்த்திகை உற்சவம்
30.08.2008 ஆடி 28 திங்கள்
ஆலய மகோற்சவ ஆரம்பம்
இரவு 2.15 கொடியேற்றம்

## செப்டெம்பர்

03.09.2008 ஆவணி 18 புதன்
காலைத்திருவிழா ஆரம்பம்
08.09.2008 ஆவணி 23 திங்கள்
பூங்காவனம்
09.09.2008 ஆவணி 24 செவ்வாய்
கைலாய வாகனம்
13.09.2008 ஆவணி 28 சனி
சப்பறம்
14.09.2008 ஆவணி 29 ஞாயிறு
தேர்
15.09.2008 ஆவணி 30 திங்கள்
காலை - தீர்த்தம்
மாலை - மௌனத் திருவிழா
22.09.2008 புரட்டாதி 6 திங்கள்
பிராயச்சித்த அபிஷேகம்
30.09.2008 புரட்டாதி 19 செவ்வாய்
நவராத்திரி விரதாரம்பம்

## அக்டோபர்

08.10.2008 புரட்டாதி 22 புதன்
சரஸ்வதி பூஜை
09.10.2008 புரட்டாதி 23 வியாழன்
விஜயதசமி
17.10.2008 ஐப்பசி 1 வெள்ளி
கார்த்திகை உற்சவம்
27.10.2008 ஐப்பசி 11 திங்கள்
தீபாவளி தினம்
29.10.2008 ஐப்பசி 13 புதன்
கந்தஷஷ்டி விரதாரம்பம்

## நவம்பர்

04.11.2008 ஐப்பசி 19 செவ்வாய்
சூரசங்ஹாரம்
05.11.2008 ஐப்பசி 20 புதன்
பாரணை, தெய்வானை அம்மன்
திருக்கல்யாணம்
13.11.2008 ஐப்பசி 28 வியாழன்
கார்த்திகை உற்சவம்

## டிசம்பர்

11.12.2008 கார்த்திகை 26 வியாழன்
திருக்கார்த்திகை உற்சவம்
குமாராலய தீபம்
14.12.2008 கார்த்திகை 29 ஞாயிறு
ஆண்டியப்பர் பூஜை

சுபமங்களம்
நன்றி